
DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan, Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan, Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693


PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

List Your Property Free
PROPERTYMAX.LK
+94772332300



29ம் ஆண்டில்...
29 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
# உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1509 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday March 7, 2025



நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
Raj Perampalam
Broker
என்னை அழையுங்கள்
Direct: 416-897-9155
Office: 905-201-9977
e-mail : raj.p@rogers.com

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship;
Super visa for parents and grandparents including health insurance;
Citizenship;
Permanent resident card renewal;
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

Residential & Commercial Real Estate Services
Bala Logendralingam
Realtor
Cell: 647-447-1562
RE/MAX COMMUNITY


## அமெரிக்க அதிபர் ட்ரம்ப் ஏற்கெனவே அறிவித்த கனடா மீதான வரிவிதிப்பில் சிறவற்றை இடைநிறுத்தம் செய்யும் வகையில் நேற்று வியாழக்கிழமை கெயெழுத்திட்டார்.



அமெரிக்க அதிபர் ரொனால்ட் ட்ரம்ப் ஏற்கெனவே அறிவித்த கனடா மீதான வரிவிதிப்பில் தளர்வு ஏற்படும் வகையில் சிறவற்றை இடைநிறுத்தம் செய்யும் வகையில் நேற்று வியாழக்கிழமை வெள்ளை மாளிகையில் கெயெழுத்திட்டார் என்றசெய்தி வெளியான போது கனடாவில் அரசியல் தலைவர்களும் பொதுமக்களும் சற்று ஆறுதல் அடைந்துள்ளதாக அறியப்படுகின்றது. கனடா மீதான டிரம்பின் சில வரிகளை விதிப்புக்களை ஏப்ரல் 2 வரை அமெரிக்கா இடைநிறுத்த உள்ளது் தற்போதுள்ள சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்திற்கு வெளியே வரும் பொருட்களுக்கு வரிகள் இன்னும் வரிவிதிப்பு அமுலில் உள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த தளர்வு தொடர்பான பத்திரங்களில் அமெரிக்க அதிபர் டிரம்ப் வியாழக்கிழமை கையெழுத்திட்டார், இதில் அமெரிக்காவிற்கு விற்கப்படும் தயாரிப்புகளின் மீதான கட்டணங்களை சற்று தாமதப்படும் எனவும் அறியப்பகிறது, இது மறு பேச்சுவார்த்தை வட அமெரிக்கா சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின் தோற்றம் மற்றும் உள்ளடக்கம் குறித்த விதிகளுக்கு இணங்குகிறது. எவ்வாறாயினும், இரும்பு மற்றும் அலுமினிய இறக்குமதியில் நடைமுறைக்கு வர திட்டமிடப்பட்ட 25 சதவீத கட்டணங்கள் அடுத்த வாரம் மார்ச் 12 அன்று திட்டமிட்டபடி அமுலில் இருக்கும் என்றும் அவர் கூறினார். (தொடர்ச்சி 3ம் பக்கம்)

## மல்லாகத்தில் பசுமை இயக்கத்தின் பசுமை அறிவொளி நிகழ்ச்சி

### பிரதம விருந்தினராகக் கனடாவிலிருந்து சென்று கலந்து கொண்ட ஸ்காபுறோ ஆதிபராசக்தி குருமன்றத்தின் ஸ்தாபகர் சக்தி ஞானம்மா திருநாவுக்கரசு





தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் பசுமை அறிவொளி நிகழ்ச்சி நேற்று ஞாயிற்றுக்கிழமை (02.03.2025) மல்லாகத்தில் நடைபெற்றுள்ளது. மாணவர்களுக்குச் சூழல் அறிவைப் புகட்டுவதன் மூலம் சூழல் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி, அவர்களைச் சூழல் பாதுகாப்பில் ஈடுபடுத்தும் நோக்குடனும், அவர்களின் பன்முக ஆளுமையை விருத்தி செய்யும் நோக்குடனும் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் பசுமை அறிவொளி என்னும் நிகழ்ச்சித் திட்டத்தினை முன்னெடுத்து வருகின்றது. இதன் தொடர்ச்சியாகவே மல்லாகம், கல்லாரை கிராமத்தில் இந்நிகழ்ச்சி நடைபெற்றுள்ளது.

வளர்மதி சனசமூக நிலையத்தின் தலைவர். இ. மிதுசன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராகக் கனடாவில் இருந்து வருகை தந்திருந்த ஸ்காபுறோ ஆதிபராசக்தி குருமன்றத்தின் ஸ்தாபகர் ஞானம்மா திருநாவுக்கரசு அம்மையார் கலந்துகொண்டார். சிறப்பு விருந்தினர்களாகத் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன், ஆசிரியர்கள் சி. நாகதீபன், சி. சிவசோதிநாதன் ஆகியோரும் பங்கேற்றிருந்தார்கள். நூற்றுக்கணக்கான மாணவர்களும், பெற்றோர்களும் பங்கேற்றிருந்த இந்நிகழ்ச்சியில் மாணவர்கள் அனைவருக்கும் யாழ்ப்பாணத்தில் விசேடமாகத் தயாரிக்கப்பட்ட பசுமை அப்பியாசக் கொப்பிகள் வழங்கப்பட்டன. இதற்கான நிதி அனுசரணையை ஞானம்மா திருநாவுக்கரசு அம்மையார் ”கனடா ரொறன்ரோவின் மனித நேயக்குரல்” அமைப்பினூடாக 4000 டாலர்களை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (தொடர்ச்சி 22ம் பக்கம்)


SHIYARA FINANCIAL SERVICES
(An Agency for the Real Estate, Mortgage & the Finance)
வீடு-வியாபார நிலையங்கள் வாங்க, விற்க
Mortgages - Refinancing
Equity Line of Credit
Personal - Business Loans
Line of Credits - Credit Cards
Debt Consolidation
கிருஷ்ணா - KRISHNA
(647) 308-6069
shiyara@ymail.com
Enjoy The Freedom Of Better Credit

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East, Mississauga, ON, L5A 1W7
23 -8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-272-1222
905-794-4404
online service: www.remitbee.com

அதிவிரைவான அகதிக்கோரிக்கை விண்ணப்பங்கள் உள்ளடங்கலான
சகலவிதமான Immigration சேவைகளுக்கும்
Prime Legal Services
(Eraa Supermarket Plaza)
5928 Finch Avenue E, Unit 231
PRIME LEGAL SERVICES
905-334-6851

# UTHAYAN INTERNATIONAL AWARDS FESTIVAL 2025

# உதயன் சர்வதேச விருது விழா 2025

UTHAYAN உதயன்

விருது

UTHAYAN AWARD

Uthayan International Awards-2025

**Date:** Saturday, June 14th, 2025

**Time:** 6:00 PM

**Venue:** The Estate Banquet & Event Centre
430 Nugget Ave, Scarborough, ON M1S 4A4

## This Year's Awards Are:
## இவ்வருடத்திற்குரிய விருதுகள்

- Uthayan Literary and Artistic Exuberance Award
- Uthayan Inter-Communal Relationship Award
- Uthayan Business Entrepreneur Award - Ontario
- Uthayan Business Entrepreneur Award - Quebec
- Uthayan Leadership Award
- Uthayan Youth Icon Award
- Uthayan Lifetime Achievement Award - Sri Lanka
- Uthayan Lifetime Achievement Award - Tamil Nadu

For More Information: 416-732-1608 / 647-762-9512

Single Copy $1 | Annual Subscription Price $52.00

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் — Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Arjune
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

We acknowledge the financial support of the Government of Canada

# அமெரிக்க அதிபர் ட்ரம்ப் ஏற்கெனவே அறிவித்த கனடா மீதான வரிவிதிப்பில் சிறவற்றை இடைநிறுத்தம் செய்யும் வகையில் நேற்று வியாழக்கிழமை கெயெழுத்திட்டார்.

(முன் பக்கத் தொடர்ச்சி) இவ்வாறிருககையில், கனேடிய ஏற்றுமதியின் அளவு வர்த்தக ஒப்பந்த விதிகளுக்கு வெளியே எந்த அளவு வருகிறது என்பதைப் புரிந்துகொள்ள கனேடிய அரசாங்கம் ஆராய்ந்து கொண்டிருந்தது, இன்னும் கட்டணங்களால் பாதிக்கப்படலாம் என்ற அச்சமும் கனடாவின் பக்கம் உள்ளதாகவும் கனடாவின் பொருளாதார வல்லுனர்கள் சிலர் தெரிவித்துள்ளனர்.

இருப்பினும்,கனடாவின் நிதியமைச்சர் டொமினிக் லெப்ளாங்க் அவர்கள். ஏப்ரல் 2 வரை கனடாவின் பதிலடி கொடுக்கும் எதிர்-கட்டணங்களின் இரண்டாம் கட்டத்தை 125 பில்லியன் டாலர் மதிப்புள்ள அமெரிக்க இறக்குமதியில் தாமதப்படுத்தும் எனவும் அதே நேரத்தில் 30 பில்லியன் டாலர் மதிப்புள்ள அமெரிக்க தயாரிப்புகளுக்கு எதிரான முதல் கட்ட வரிவிதிப்பு அமுலில் இருக்கும் என்று கூறினார்.

மெலும் ஒன்ராறியோ அரசாங்கமானது மின்சாரம் மீது 25 சதவீத ஏற்றுமதி வரியை விதிக்க மாகாண முதல்வர் டக் போர்ட் முடிவும் திங்களன்று . நியூயார்க், மிச்சிகன் மற்றும் மினசோட்டாவில் 1.5 மில்லியன் வீடுகளுக்கு விநியோகிக்கப்படும் ஒன்ராறியோவின் மின்சாரத்தில் புதிய வரியை அறிவித்து முதல்வர் டக் போர்ட் உத்தரவை பிறப்பித்தார், அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தான் விதித்த கட்டணங்களை முற்றிலுமாக கைவிடும் வரை நாங்களும் அதை பின்பற்ற வேண்டும் என்று கூறினார். அத்தடன் அமெரிக்க தயாரிப்புக்களான மதுபான வகைகள் எல்.சி.பி.ஓ என்னும் ஒன்றாரியொ மாகாணத்தின் அரச நிறுவனத்தின் விற்பனை நிலையங்களிலிருந்து அகற்றப்படும் எனவும் அவர் பகிரங்க அறிவிப்பை விடுத்துள்ளார்.

## உதயன் கதிரோட்டம்

# இலங்கையில் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தல்களில் போட்டியிடவுள்ள பிரதான தமிழ் பேசும் வேட்பாளர்கள் தொடர்பில் மக்கள் மிகுந்த அவதானத்துடன் வாக்களிக்க வேண்டும்

இலங்கையில் நீண்ட நாட்களாக அரசியல்வாதிகளாலும் மக்களாலும் எதிர்பார்க்கப்பட்டு வந்த உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்கள் தொடர்பான அறிவிப்புக்கள் விரைவில் வெளியாகலாம் என எதிர்பார்க்கப்படுகின்ற வேளையில் தீவின் நான்கு திசைகளிலும் அரசியல் கட்சிகளுக்கு பின்னால் நின்று "சுகபோகங்களை - அனுபவித்தவர்களும், எவ்வித ஊழல்களும் அற்ற அரசியல் நோக்கோடு மக்கள் சேவையாற்றவென துடிப்போடு அரசியலில் ஈடுபாடு கொண்ட அன்பர்களுமாக பலர் "தூசு தட்டிக் கொண்டு" எழுந்து நிற்பதை நாம் எங்கிருந்தாலும் கண்டு கொள்ளக்கூடியதாக உள்ளது

ஓரே சின்னத்தின் கீழ் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட கட்சிகளும் உள்ளிட்ட மொத்தம் ஒன்பது கட்சிகள் ஒன்றிணைந்து வரப்போகின்ற உள்ளூ ராட்சித் தேர்தல்களிலும் போட்டியிடும் நோக்கோடு அந்த கூட்டை தொடரால் என்று எதிர்வு கூறப்பட்டது. ஜனாதிபதி தேர்தலின் போது தமிழ்த்தேசியப் பொதுக் கட்டமைப்புக்குள் காணப்பட்ட தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம், விக்னேஸ்வரனின் கட்சி ஆகிய இரண்டு கட்சிகளோடு கிளிநொச்சியைச் சேர்ந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமாரின் சமத்துவக் கட்சியும் இந்தக் கூட்டுக்குள் அடங்கும் என்று கூறப்பட்டது.மேலும், முன்பு தமிழரசுக் கட்சிக்குள் இருந்த சரவணபவன், தவராசா ஆகியோரின் சுயேச்சைக் குழுவும் இந்த கூட்டுக்குள் வருவதாகக் கூறப்பட்டது.

இந்த முயற்சிகளும் ஒன்று மற்றதற்கு ஆதரவாக இல்லை என்று கருதத்தக்க விதத்தில்தான் நிலைமைகள் காணப்படுகின்றன. கடந்த ஞாயிற்றுக்கிழமை உருவாகிய கூட்டு தேசிய மக்கள் சக்திக்கு எதிரானது மட்டுமல்ல கஜேந்திரகுமாருக்கும் சிறீதரனுக்கும் இடையிலான உறவிற்கும் எதிரானதா என்ற கேள்விக்கு விடை மிக முக்கியம். எனவே இரண்டு கூட்டுக்களையும் கூட்டிக் கழித்துப் பார்த்தால், தமிழ்த் தேசிய வாக்குகளை அவர்கள் ஒன்று திரட்டுவார்களா அல்லது சிதறடிக்கப் போகிறார்களா என்ற கேள்வி எழுகிறது.

இதன் காரணமாக யாழ்ப்பாணத்தில் அண்மையில் கூடிய சில அன்பர்கள் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் வேட்பாளர்களைத் தெரிவு செய்யும்போது மிகுந்த அவதானத்துடன் சம்பந்தப்பட்டவர்கள் செயற்பட வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுக்கப்பட்டதாகவும் குறிப்பான வடக்கு மாகாண சபைக்கான தேர்தல் நடைபெற்றால் அதன் முதல்வர் வேட்பாளராக அமர்த்தப்பட வேண்டியவர்களில் முக்கியமாக அருந்தவபாலன மற்றும் அவரைப் போன்று நேர்மையாகச் செயற்பட்டு தோற்கடிக்கப்பட்டவர்களின் பெயர்கள் கவனிக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் அறியப்படுகின்றது

இது தொடர்பாக மேலும் கிடைக்கும் தகவல்களின்படி, மன்னாரைச் சேர்ந்த சிவகரனும் காணப்படுகிறார். இவரும் மன்னாரில் மக்கள் நலன் தொடர்பான விடயங்களில் தொடர்ச்சியாகப் போராடி வருகின்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது ஏற்கனவே இது தொடர்பாகச் சந்தித்துப் பேசியிருப்பதாகவும் தகவல்கள் கிடைக்கின்றன.

அருந்தவபாலன் கூட்டமைப்புக்குள் இருந்தபொழுது சுமந்திரனால் அவமதிக்கப்பட்டு அதிலிருந்து வெளியேறியவர்.அவருக்கென்று தென் மாராட்சியில் வாக்கு வங்கி ஒன்று உண்டு. ஆனால் அவர் பெருமளவுக்குத் துடிப்பாகச் செயல்படாத ஒரு பின்னணியில், அவருடைய வாக்கு வங்கி தொடர்ந்து பலமாக உள்ளதா இல்லையா என்ற சந்தேகங்கள் உண்டு. இப்படிப் பார்த்தால், உள்ளூராட்சி மன்றத் தேர்தலை எதிர்கொள்வதற்காக தமிழ்க் கட்சிகள் புதிய ஒருங்கிணைப்புக்களை நோக்கிச் சிந்திக்கத் தொடங்கிவிட்டன. இந்த விடயத்தில் சற்று முன்கூட்டியே தமிழ்க் கட்சிகள் சிந்தித்திருப்பது சாதகமானது.

ஆனால் மேற்படி ஒருங்கிணைப்பு முயற்சிகளும் சந்திப்புகளும் எதைக் காட்டுகின்றனவென்றால், தமிழ்த் தேசிய வாக்குகளை ஒன்றிணைப்பதற்கு கட்சிகள் நீண்ட தூரம் பயணிக்க வேண்டியிருக்கும் என்பதைத்தான். எவ்வாறாயினும் நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தல்களில் சுமந்திரன் மற்றும் ஸ்ரீதரன் சிவஞானம் மற்றும் சுரேஸ் பிரேமச்சந்திரன் போன்றவர்கள் கொண்டுவரப்போகின்ற வேட்பாளர்கள் தொடர்பாகவும் மக்கள் அவதானமாக இருக்க வேண்டும் என்றும் யாழ்ப்பாணத்தில் "மக்கள் நலன் விரும்பிகள் அவதானமாக இருப்பதாகவும் அறியப்படுகின்றுத. ஏனெனில் சுரேஸ் பிரேமச்சந்திரன் போன்ற சில அர சியலை தமது சொந்த நலனுக்காகவும் வர்த்தக முயற்சிகளுக்காகவும் பயன்படுத்தி வருவதை மக்கள் சுட்டிக்காட்டியுள்ளதை சம்பந்தப்பட்டவர்கள் கவனிக்க வேண்டும் என்றும் நாம் கோரிக்கை விடுக்கின்றோம்.!

வசந்தம் தமிழ் உளவளத்துணை நிலையம்
VASANTHAM TAMIL WELLNESS CENTRE
PRESENTS...

சமூக உளவளம் பேணும் தொடர் - 92
Psychosocial Educational Series - 92

VASANTHAM HEALTH & WELLNESS CENTRE

17 March 2025 (Monday)
Canada EST: 7:00 - 9:00 pm U.K: 12:00 am - 2:00 am
Sri Lanka: 5:30a.m - 7:30am (Tuesday)

Zoom ID: 918 584 6813
No Password
Dial by Phone: 647 374 4685
647 558 0588

மனம் போன போக்கிலே...
In Our Wandering Minds...



Tharani Ketheeswaran
M.A. Tamil Literature

Join us via zoom: CLICK HERE or go to link below in the email
Join our Zoom Series every 1st & 3rd Monday of the month!



Hosted by
Dr. Parvathy Kanthasamy
CONTACT US: 416-847-4172
VASANTHAM
VASANTHAM-TAMIL WELLNESS
VASANTHAMW
647-374-4685
VASANTHAM.CA

## Town House வாடகைக்கு உண்டு

ஸ்காபுறோவில் **McLevin/Tapscott** சந்திப்புக்கு அருகில் உள்ள **Town House** உடனடியாக வாடகைக்கு உண்டு.
**2 Bed Rooms - 1.5 Wash Room, 1 Parking** ஆகியவை உண்டு.
**Shopping Mall** மற்றும் தமிழர் கடைகள் மிக அருகில்..
மேலதிக விபரங்களுக்கு 416-844-1447 என்னும் இலக்கத்தை அழைக்கவும்

## Basement For Rent

Markham/Steeles சந்திப்புக்கு அருகில் உள்ள வீடொன்றில் 2 Bedroom கொண்ட Basement உடனடியாக வாடகைக்குண்டு.
2 Bedroom Basement for rent from April 1st. Separate entrance. Separate washer/dryer/car parking. TTC Bus stop in front of house. Markham/steeles Scarborough.
416 728 2281

## Room For Rent

Orton Park/Ellesmere சந்திப்பிற்கு அருகில் 1 Bedroom Basement அனைத்து வசதிகளுடன் வாடகைக்குண்டு.
Close to T.T.C , School.
Separate Entrance
ஆண்கள் விரும்பத்தக்கது
தொடர்புகளுக்கு:
647-928 0667

இலங்கை செய்திகள்
Sri Lanka News

கனகராசா சரவணன்

# மட்டக்களப்பு செங்கலடியில் விவசாயிடம் 50 ஆயிரம் ரூபா இலஞ்சம் வாங்கிய கமநல உத்தியோகத்தர் ஒருவர் இலஞ்ச ஊழல் ஒழிப்பு பிரிவினரால் கைது

மட்டக்களப்பு சித்தாண்டியில் விவசாயி ஒருவரின் வயலுக்கு உரம் மற்றும் மழை வெள்ளத்தால் சேதடைந்ததற்கு நஷ்டஈடு பெற்றுதருவதற்கு 50 ஆயிரம் ரூபா பணத்தை இலஞ்சமாக பெற்றுக் கொண்ட வந்தாறுமூலை கமநலஅபிவிருத்தி திணைக்கள உத்தியோகத்தார் ஒருவரை மாறுவேடத்தில் இருந்த இலஞ்ச ஊழல் ஒழிப்பு பிரிவினரால் 5ம் திகதி அன்று புதன்கிழமை பகல் செங்கலடி பிரதேசத்தில் வைத்து கைது செய்துள்ளதாக ஏறாவூர் பொலிசார் தெரிவித்தனர்.

இதுபற்றி தெரியவருவதாவது, சித்தாண்டி பகுதியைச் சேர்ந்த விவசாயி ஒருவரின் வயலுக்கு உரம் பெற்று தருவதாகவும் அத்துடன் மழை வெள்ளத்தால் வேளாண்மை சேதமடைந்ததற்கு நஷ்டஈடு பெற்று தருவதாகவும் அதற்கு 50 ஆயிரம் ரூபா பணத்தை விவசாயிடம் இலஞ்சமாக கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் கோரியுள்ளார்.

இதனையடுத்து குறித்த விவசாயி கொழும்பிலுள்ள இலஞ்ச ஊழல் ஒழிப்பு பிரிவினரிடம் முறைப்பாட்டையடுத்து அவர்களின் ஆலோசனைக்கமைய சம்பவ தினமான அன்று பகல் செங்கலடி பகுதியிலுள்ள வங்கி ஒன்றிற்கு அருகாமையில் கொழும்பில் இருந்து வந்த இலஞ்ச ஊழல் ஒழிப்பு பிரிவினர் கண்காணித்துக் கொண்டிருந்த நிலையில் விவசாயிடம் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் 50 ஆயிரம் ரூபாவை இலஞ்சமாக பெற்றுக் கொண்ட நிலையில் அங்கு மாறுவேடத்தில் இருந்த இலஞ்ச ஊழல் ஒழிப்பு பிரிவினர் சுற்றிவளைத்து கைதுசெய்ததுடன் இலஞ்சமாக பெற்றுக் கொண்ட 50 ஆயிரம் ரூபாவை மீட்டனர்.

இதில் கைது செய்யப்பட்டவர் 34 வயதுடையவர் எனவும் இவரை நீதிமன்றில் ஆஜர்படுத்தி கொழும்புக்கு கொண்டு செல்வதற்கான நடவடிக்கையை இலஙஞ்ச ஊழல் ஒழிப்பு பிரிவினர் மேற்கொண்டுவருவதாக பொலிசார் தெரிவித்தனர்.

## மட்டக்களப்பு அரசடி பகுதியில் வீதி ஓர மரக்கறி வியாபரிகளுக்கிடையிலான மோதலில் ஒருவர் உயிரிழப்பு. 4 பேர் கைது



மட்டக்களப்பு கல்லடி பாலத்துக்கு அருகாமையில் ஹோட்டல் ஒன்றிற்கு முன்னால் வீதி ஓரத்தில் பட்டா ரக வாகனத்தில் மரக்கறி வியாபாரம் செய்வோருக்கிடையே வியாபாரத்தில் ஏற்பட்ட வாய்தர்கத்தையடுத்து இடம்பெற்ற சண்டையில் வர்த்தகர் ஒருவர் மீது கத்தி மற்றும் கூரிய ஆயுதத்தால் தாக்கியதில் அவர் உயிரிழந்த சம்பவம் 3ம் திகதி திங்கட்கிழமை இரவு இடம்பெற்றள்ளதுடன் தாக்குதல் மேற்கொண்டவர்கள் என்ற சந்தேகத்தில் 4 பேரை கைது செய்துள்ளதாக மட்டக்களப்பு தலைமையக பொலிசார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை பிரதேசத்தைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான 31 வயதுடைய வர்த்தகரான டிலக்ஷன் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இதுபற்றி தெரியவருவதாவது, மட்டக்களப்பு அரசடி பகுதிக்கும் கல்லடி பாலத்துக்கும் இடையிலுள்ள வீதி ஓரத்தில் பட்டா ரக வாகனங்களில் மரக்கறிகளை கொண்டுவந்து வியாபாரிகள் வியாபாரத்தில் ஈடுபட்டுவருவது வழமை.



இந்த நிலையில் சம்பவதினமான நேற்று இரவு சுமார் 7.00 மணியளவில் சம்பவத்தில் உயிரிழந்தவரின் சகோதரரான வியாபாரி தனது பட்டா ரக வாகனததை நிறுத்தி வியாபாரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார். இந்த நிலையில் அந்த வாகனத்துக்கு அருகாமையில் இன்னொரு வர்த்தகர் தனது வாகனத்தை நிறுத்தி வியாபாரம் செய்த நிலையில் இருவருக்கும் இடையே வர்த்தக போட்டி காரணமாக வாய்தர்க்கம் ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து சம்பவத்தில் உயிரிழந்தவரின் சகோதரர் உயிரிழந்த அண்ணாவுக்கு கையடக்க தொலைபேசி ஊடாக அழைப்பு விடுத்து வரவழைத்தார் அவர் அங்குவந்து சகோதரனுடன் வாய்தர்க்கத்தில் ஈடுபட்ட வர்த்தகர் மீது தாக்குல் மேற்கொண்டதை யடுத்து அங்கு இருவருக்கும் இடையே கைகலப்பு ஏற்பட்டதையடுத்து அவர் மீது 4 பேர் கத்தி மற்றும் கூரிய ஆயுதங்களால் தாக்குதல் மேற்கொண்டதையடுத்து அவர் படுகாயமடைந்த நிலையில் மட்டு போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரில் அனுமதிக்கப்பட்ட பின்னர் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என பொலிசாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதனிடையே தாக்குதலை மேற்கொண்டு அங்கிருந்து தப்பி ஓடிய கொக்குவில் பிரதேசத்தைச் சேர்ந்த நான்கு வர்த்தகர்களும் பொலிசாரிடம் சரணடைந்ததையடுத்து அவர்களை கைது செய்துள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

சம்பவ இடத்துக்கு தடவியல் பிரிவு பொலிசார் வரவழைக்கப்பட்டு மேலதிக விசாரணைகளை மட்டு தலைமையக பெரும் குற்றத்தடுப்பு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

## அட்டாளைச்சேனை பாலமுனை பகுதியில் மரமொன்றில் தூக்கில் தொங்கிய நிலையில் ஆண் சடலம் காணப்படுவதாக பொலிஸார் தெரிவிப்பு



அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவிலுள்ள அட்டாளைச்சேனை முள்ளிமலையடி பிரதேசத்தில் மரம் ஒன்றில் தூக்கில் தொங்கிய நிலையில் உருக்குலைந்துள்ள சடலம் ஒன்று இருப்பதாக பொதுமக்கள் புதன்கிழமை 5ம் திகதி மாலை தகவல் தெரிவித்துள்ளதாக அக்கரைப்பற்று பொலிசார் திெவித்தனர்.

குறித்த பிரதேசத்தில் கடந்த ஒரு கிழமையாக துர்நாற்றம் வீசி வந்துள்ள நிலையில் சந்தேகம் கொண்ட இப்பகுதி மக்கள் அநத பகுதியை சுற்றி சோதனையிட்டபோது அங்கு மரத் ஒன்றில் ாக்கில் தொங்கி உருக்குலைந்த நிலையில் ஆண் ஒருவரின் சடலம் ஒன்று இருப்பதைகண்டு பொலிசாருக்கு தெரிவித்தனர்.

இதனையடுத்து குறித்த பகுதியில் யானைகள் நடமாடுவதால் அங்கு பொலிசார் செல்லமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதால் வியாழக்கிழமை 6ம் திகதி அன்று காலையில் சென்று சடலத்தை மீட்பதற்கான அனைத்து நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ள தாகவும் இதுவரை சடலம் அடையாளம் காணப்படவில்லை என பொலிசார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அக்கரைப்பற்று பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

## அனைத்துலக மகளிர் தினம்

*அனைத்துலக அணங்குகளின் ஆனந்தத் தினத்தை*
*அகிலம் முழுவதும் கொண்டாடும் அரிவையரே!*
*வினைத்திறன் மிக்க வனிதைகளாய் வாழவேண்டி*
*விமலியை வினயமாய் வேண்டி நிற்கிறேன்.*
*பேதை மங்கை பெதும்பை மடந்தை*
*பேரிளம்பெண் அரிவை தெரிவை உன்பருவம்*
*போதைப் பொருளல்ல பெண்ணென புரியும்படி*
*புரிய வைப்பாய் புவியில் உள்ளோர்க்கே!.*

*பெண்ணுக்கு அறிவைப் படைத்தான் இறைவன்*
*பண்படாச் சிலமூடர் அறிவைக் கெடுத்தார்*
*விண்ணை முட்ட விவேகம் வளர்த்தே*
*வீரம் விளைந்த வனிதையாய் வாழ்ந்திடு*
*மலரென மருட்டியே மாதரை மடக்கினார்*
*மறக்குடி மகளென்று மறந்திடாக் காட்டு*
*பலருனைப் பாராட்டப் பண்பொடு வாழ்ந்து*
*பாரினில் உன்புகழ் பதியச் செய்வாயே!*

*பட்டம் படித்துப் பதவிகள் பெற்று*
*பாமர மக்களின் பாதுகாப் பளிப்பீர்*
*திட்டம் தீட்டும் திறமையை வளர்த்தே!*
*தீமையை ஒழிக்கும் திடத்தை வளர்ப்பீர்*
*பாட்டும் பரதமும் பழுதறக் கற்றே!*
*பாரினில் நீரும் புதுமைகள் படைப்பீர்*
*பாட்டுக்கோர் புலவன் பாரதி கண்ட*
*புதுமைப் பெண்ணாய்ப் பூமியில் வாழ்வீரே!*

*கப்பலைத் துறையில் காத்திருக்கக் கட்டவில்லை*
*கப்பலாய் இருக்கக் கடப்பைக் கடந்துவா*
*இப்படி எத்தனைநாள் ஏமாந்து இருப்பாய்*
*இப்போதே கூடுவிட்டு வெளியே வந்துவிடு*
*பெண்ணொரு அழகிய பிடிலைப் போன்றவள்*
*பொறுமையாய் வாசிக்கத் தெரிய வேண்டும்*
*பெண்ணெனும் தெய்வத்தைப் போற்றி நிற்போம்*
*பெண்மையை மதித்து வாழ்த்துச் சொல்வோமே!*

*சாதிக்குத் துடிக்காமல் சாதிக்கத் துடியுங்கள்*
*சரித்திரம் உங்களை நிச்சயம் பதியும்*
*சாதித்துச் சென்ற சகோதரிகள் பட்டியல்*
*தாராளம் உண்டு தரணியில் எங்கும்*
*காலனிடம் கணவனைக் கவர்ந்த சாவித்திரி*
*கணவனுக்காய் மதுரையில் நீதிகேட்ட கண்ணகி*
*காலநேரம் பார்க்காமல் களமாடிய காரிகைகள்*
*கதைகளைக் கவனமாய்ப் படித்துப் பார்ப்பீரே!*

*வரலாற்றைப் படிக்காமல் வரலாறு தெரியாது*
*வானத்தை வில்லாய் வளைக்க வேண்டாம்*
*வருங்காலச் சந்ததிக்கு வழிகாட்டிச் செல்லுங்கள்*
*வரலாறு உங்களுக்கு வாழ்த்துச் சொல்லும்*
*வானத்து விண்மீனாய் விளங்க வேண்டாம்*
*வீட்டில் ஒளிவிடும் விளக்காய் இருங்கள்*
*வானம் பாடிபோல் வட்டமிட்டு வலம்வருவீர்*
*வானவரும் வந்து வணங்கி வாழ்த்துவரே!*

*(விமலி – – – – சரஸ்வதி, பார்வதி)*

**ஆக்கம் ... பாவலர் மார்க்கம் சந்திரன்**
*(416) 844-7453*

இலங்கை செய்திகள்
Sri Lanka News

பு. கஜிந்தன்

# செம்பியன்பற்று வடக்கில் இரவோடு இரவாக அனுமதியின்றி காடுகள் அழிப்பு!



வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்று வடக்கு பகுதியில் JCB இயந்திரம் மூலம் இரவோடு இரவாக பெருமளவான காடுகள் அழிக்கப்பட்டுள்ளன.

குறித்த சம்பவம் 28ம் திகதி வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளதுடன் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, அரச நிறுவனம் ஒன்றில் பணியாற்றும் அப்பகுதியை சேர்ந்த நபர் ஒருவர் குறிப்பிட்ட நிலப்பகுதியை தனிப்பட்ட தேவைகளுக்காக குத்தகை அடிப்படையில் பெற வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகம் ஊடாக ஆவன செய்துள்ளார்.

ஆவண கடிதத்தை வடமராட்சி கிழக்கு பிரதேச செயலரிடம் கையளித்தவுடன் காடுகள் நிறைந்த சம்பந்தப்பட்ட பெருமளவான நிலப்பகுதியை அனுமதியின்றி JCB இயந்திரம் கொண்டு இரவோடு இரவாக முற்றாக அழித்துள்ளார்.

சம்பவம் அறிந்து அப்பகுதி மக்கள் உரிய அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தி தடுத்து நிறுத்த முற்பட்ட வேளையும் குறித்த நபர் தொடர்ந்து அனுமதியின்றி காடுகளை அழித்துள்ளார்.

இது தொடர்பாக வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் கு.பிரபாகரமூர்த்தி கருத்து தெரிவிக்கையில், குறித்த நபர் குத்தகைக்கு காணியை பெறுவதற்கு கடிதம் தந்துள்ளதாகவும், காடுகளை அழிப்பதற்கு தாம் அனுமதியளிக்கவில்லை என்றும், குறித்த பிரதேசம் வனஜீவராசிகள் திணைக்களத்தினுள் இருப்பதால் தம்மால் அனுமதி கொடுக்க முடியாதென்றும் அவ்வாறு அவர் காடுகளை அழித்திருந்தால் நடவடிக்கை எடுக்கப்படுமென தெரிவித்தார்.



# வடமராட்சி ஊடக இல்லத்தில் நடைபெற்ற "வல்வெட்டித்துறை: ஒரு படுகொலையின் வாக்குமூலங்கள்" என்ற அறிக்கை வெளியீடு!

"வல்வெட்டித்துறை: ஒரு படுகொலையின் வாக்குமூலங்கள்" என்ற அறிக்கை வெளியீடும் ஊடக சந்திப்பும் 2ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தில் நடைபெற்றது.

சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்திட்டத்தால் வெளியிடப்பட்ட இந்த அறிக்கையை இந்திய இராணுவத்தால் யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகளில் பாதிக்கப்பட்ட பொதுமக்கள் இன்று வெளியிட்டு வைத்தனர்.

பாதிக்கப்பட்ட உறவுகளின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் அகவணக்கம், பொதுச்சுடர் ஏற்றல், மலர் அஞ்சலியை தொடர்ந்து வரவேற்புரையை மூத்த ஊடகவியலாளர் தி.எஸ். தில்லைநாதன் நிகழ்த்தியிருந்தார்.

அதனைத்தொடர்ந்து வல்வை முத்துமாரிஅம்மன் தேவஸ்தான பிரதம குரு சோ தண்டாயுதபாணி தேசிகர், யாழ். முறைமாவட்டத்தின் மூத்த குருவும் முன்னாள் ஊரணி மயிலிட்டி பங்குத்தந்தையும் லண்டன் கத்தோலிக்க ஆண்மீக பணியகத்தின் இயக்குநருமான அருட்தந்தை தேவராஜன் அடிகள் ஆகியோர் அஞ்சலி உரையை ஆற்றினர்.





தொடக்க உரையை வல்வெட்டித்துறை முன்னாள் பிரஜைகள் குழு செயலாளர் ந. ஆனந்தராஜ் ஆற்றினார் அதன் பின்னர் அறிக்கை அறிமுகமும பிரதிகள் வழங்கலையும் தொடர்ந்து சிறப்புரைகளை மனித உரிமைகள் செயற்பாட்டாளர் பிறிட்டோ பெர்னானடோ மற்றும் வல்வெட்டித்துறை முன்னாள் பிரஜைகள் குழு தலைவர் ச. செல்வேந்திரா ஆகியோர் ஆற்றியிருந்தனர். நன்றி உரையினை சிரேஸ்ட ஊடகவியலாளர் கு.மகாலிங்கம் நிகழ்தியிருந்தார்.

இந்த நிகழ்வில் சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள், பல்கலைக்கழக மாணவர்கள், பொதுமக்கள் ஊடகவியலாளர்கள் பலர் கலந்துகொண்டனர்.



இலங்கை செய்திகள்
Sri Lanka News

பு. கஜிந்தன்

# யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் ஆனையிறவு உப்பு உற்பத்தி நிலையத்திற்கு விஜயம்!



யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் ஆனையிறவு உப்பு உற்பத்தி நிலையத்திற்கு 3ம் திகதி திங்கட்கிழமை விஜயம் மேற்கொண்டிருந்தார்.

நவீன வசதிகளுடன் கூடிய உப்பு உற்பத்திக்கான கட்டிடத்தை அவர் பார்வையிட்டார். அவருடன் கிளிநொச்சி மாவட்ட அரசாங்கதிபர் கண்டாவளை பிரதேச செயலாளர் உள்ளிட்டோரும் கலந்து கொண்டனர்.





தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர், க.இளங்குமரன் கடந்த அரசாங்கம் இவ்வாறான உற்பத்திகளை முடிவுப்பொருள் ஆக முன்பே வேறு தனியார் நிறுவனங்களுக்கு விற்பனை செய்தது.

நாங்கள் முடிவுப்பொருளாக்கி அதிக இலாபம் ஈட்டுவதுடன் இப்பிரதேசத்தைச் சார்ந்தவர்களுக்கு வேலை வாய்ப்பை வழங்கு முடியும் என தெரிவித்தார்.



# யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற "அந்தோனி" திரைப்படத்தின் ஆரம்ப படப்பிடிப்பு மற்றும் பூஜைகள்!

ஓசை பிலிம்ஸ் கலைவ-ளரி சக.இரமணா வழங்கும் அந்தோனி திரைப்படத்தின் ஆரம்ப நிகழ்வு பூஜை வழிபாடுகள் 5ம் திகதி புதன் அன்றையதினம் யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விருந்தினர் விடுத-ியில் நடைபெற்றது.

இலங்கை திரைப்பட வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்த முழுநீள திரைப்படமாக இது காணப்படுகிறது. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கலைஞர்களை உள்ளடக்கி இந்த திரைப்படம் தயாரிக்கப்படுகிறது.

நிகழ்வில் கலைஞர்கள் அறிமுகம் செய்து வைக்கப்பட்டனர். அதனைத் தொடர்ந்து பூஜை வழிபாடுகள் நடைபெற்றன. பின்னர் சம்பிரதாயபூர்வமாக படப்பிடிப்பு ஆரம்பித்து வைக்கப்பட்டது. அதன்பின்னர் விருந்தினர்களின் உரைகள் இடம்பெற்றன. தயாரிப்பாளர், இயக்குனர், கதாநாயகன், கதாநாயகி, ஏனைய நடிகர்கள், திரைப்படம் சார்ந்து பணியாற்றும் ஏனையோர், வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் திலக் தனபால, யாழ்ப்பாணம் தலைமைப் பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி ஷவாஹிர், பல்வேறு நாடுகளில் இருந்து வருகை தந்த புலம்பெயர் தமிழர்களும் இதில் கலந்துகொண்டனர்.





# கொழும்பில் புற்றுநோய்க்கு சிகிச்சை பெற்றாலும் யாழ்ப்பாணத்தில் சிகிச்சையை தொடரலாம்!




வட இலங்கையை வதிவிடமாகக் கொண்ட புற்றுநோயாளர்கள் கொழும்பில் சிகிச்சை பெற்று வருகையில் தமது நலிவுத் தன்மை காரணமாக அல்லது பிரயாணக் கஷ்டம் மற்றும் பணவசதிக் குறைவு காரணமாக தெல்லிப்பளை வைத்தியசாலைக்கு சிகிச்சையைத் தொடர்வதற்காக தமது விருப்பில் செல்லுகையில் அங்கு சிகிச்சை மறுக்கப்பட்டமை தொடர்பில் குற்றச்சாட்டுக்கள் எழுந்தன.

குறித்த விடயம் தொடர்பில் புற்றுநோயாளர்கள், மனித உரிமை ஆணைக்குழு மற்றும் சுகாதார அமைச்சு, வெகுஜன ஊடகங்களூடாகவும் முறைப்பாடுகளைக் கொடுத்தும் கடந்த ஒரு வருடமாக போராடினர்.

குறித்த விடயம் தொடர்பில் சுகாதார அமைச்சில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் தலைமையில் கலந்துரையாடல் இடம்பெற்று புற்று நோயாளர்களின் நலன்கள் பூரணமாக பேணப்படும் முறையிலான முடிவுகள் எடுக்கப்பட்டு சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு அறிவிக்கப்பட்டு முள்ளமை குறிப்பிடத்தக்கது.

புற்றுநோயால் பாதிக்கப்பட்டு கொழும்பில் சிகிச்சை பெற்று வருகையில் நோயாளர்கள் தமது சிகிச்சையை யாழில் தொடர விரும்புமிடத்து தாம் பெற்ற சிகிச்சை தொடர்பான சகல விபரங்களையும் கடிதத்துடன் எடுத்துச் செல்லுமிடத்து தெல்லிப்பளையில் அங்கு உள்ள மருத்துவ மற்றும் கதிர்வீச்சு வசதிகளுடன் அங்கு சேவையாற்றும் புற்றுநோய் நிபுணர்களின் தீர்மானத்துடன் சிகிச்சை வழங்கப்படும் எனவும் அவர்கள் எவ்வித காரணத்துக்காகவும் திருப்பி அனுப்பப் படமாட்டார்கள் எனவும் உத்தரவாதம் வழங்கப்பட்டுள்ளது.


**அதிஷ்டம் காத்திருக்கிறது வெல்லுங்கள் 1,50,000 ரூபாய்கள்**

**எழுத்தாளர் 'குரு அரவிந்தன் வாசகர் வட்டம்' நடத்தும்**

**உலகளாவிய 3வது திறனாய்வுப் போட்டி - 2025**



தமிழ் இலக்கிய உலகில் புகழ் பெற்ற எழுத்தாளர் குரு அரவிந்தன் அவர்களின் தமிழ் இலக்கிய சேவையைப் பாராட்டும் முகமாகவும், வாசிப்பு, எழுத்துப் பழக்கத்தை ஊக்குவிக்கும் நோக்கமாகவும் இடம்பெறும் குரு அரவிந்தன் எழுதிய நாவல், சிறுகதை தொடர்பான திறனாய்வுப் போட்டி.

**15 பரிசுகள், மொத்தம் 1,50,000 ரூபாய்கள், இலங்கை ரூபாயில் வழங்கப்படும்.**



முதலாம் பரிசு இலங்கை ரூபாய்கள் - 30,000.
இரண்டாவது பரிசு இலங்கை ரூபாய்கள் - 25,000.
மூன்றாவது பரிசு இலங்கை ரூபாய்கள் - 20,000.
நாலாவது பரிசு இலங்கை ரூபாய்கள் - 15,000.
ஐந்தாவது பரிசு இலங்கை ரூபாய்கள் - 10,000.
10 பாராட்டுப்பரிசுகள் இலங்கை ரூபா தலா - 5000.

**குரு அரவிந்தனின் படைப்புகளுக்கான திறனாய்வுப் போட்டி.** குறைந்தது 2 **புதினங்கள்** அல்லது 4 **சிறுகதைகள்** பற்றி உங்களின் கருத்துரைகளைத் தமிழில் அல்லது ஆங்கிலத்தில் 5 பக்கங்களுக்குள் அல்லது 1600 சொற்களுக்கு மேற்படாமல் யூனிக்கோட் மற்றும் வேர்ட் (Unicode and Word) அச்சுப்பிரதியாக அனுப்பவும். மாணவர்களாயின் தனியாகக் குறிப்பிடவும். வயது வரம்பு இல்லை. ஒருவர் ஒரு கட்டுரை மட்டுமே அனுப்பலாம். பரிசுபெற்ற கட்டுரைகளைத் திருத்தி நூலாகவெளியிடும் உரிமை வாசகர் வட்டத்திற்கு உரியது.

மின்னஞ்சல் வழியாக ஆங்கிலத்தில் உங்களின் முழுப்பெயர், தெளிவான அஞ்சல் முகவரி, மின்னஞ்சல் முகவரி, செல்போன் எண் விவரங்களோடு அனுப்பவேண்டும். உங்கள் திறனாய்வு எமக்குக் கிடைக்க வேண்டிய **கடைசி நாள்: 31. 03. 2025**

போட்டி முடிவுகள் 30 ஆம் திகதி ஏப்ரல் மாதம் 2025 இணையத்தில் வெளியிடப்படும்.

மின்னஞ்சல்: : kurufanclub@gmail.com

இணையம்: : https://kurunovelstory.blogspot.com/, http://tamilaram.blogspot.com/
https://canadiantamilsliterature.blogspot.com/

இந்த அறிவிப்பினை நண்பர்களுடன் பகிர்ந்து உதவுங்கள். நன்றி!

**செயலாளர், குரு அரவிந்தன் வாசகர் வட்டம். kurufanclub@gmail.com**

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# தமிழ் ஊடகத்துறை இழந்துள்ள தினக்குரல் நிறுவனர். எஸ்.பி. சாமி மற்றும் தினக்குரல் மற்றும் வீரகேசரி ஆகிய பத்திரிகை ஆசிரிய பீட பாரதி இராசநாயகம் ஆகியோருக்கு அஞ்சலி செலுத்திய உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்



இன்று இந்த அவையின் மறைந்த முன்னாள் உறுப்பினர் மாமனிதர் சிவநேசனின் 17வது ஆண்டு நினைவு நாளாகும். மாமனிதர் சிவனேசன் அவர்கள் கிளைமோர் தாக்குதல் மூலம் இராணுவத்தினரால் கொல்லப்பட்டார். அவருக்கு எனது அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஊடக அமைச்சு குறித்தும் நாங்கள் விவாதித்து வருகிறோம். தமிழ் ஊடக உலகம் இரண்டு தனித்துவமானவர்களை இழந்துள்ளது. தினக்குரல் நிறுவனர் திரு. எஸ்.பி. சாமி மற்றும் தினக்குரல் ஞாயிறு பதிப்பின் ஆசிரியராகவும் பின்னர் வீரகேசரி பத்திரிகையின் ஆசிரியராகவும் பணியாற்றிய திரு. பாரதி இராசநாயகம் ஆகியோருக்கும் எனது அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு 06.03.2025 அன்று வியாழக்ககிழமை இலங்கை நாடாளுமன்றில் நடைபெற்ற வரவு செலவுத் திட்ட விவாதத்தில் நடைபெற்ற சுகாதார அமைச்சு மற்றும் ஊடகங்கள் தொடர்பான விடயதானத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் உரையாற்றிய போது தனத உரையின் ஆரம்பத்தில் இவ்வாறு தெரிவித்தார்:

அவர் அங்கு உரையாற்றுகையில் பின்வருமாறு தெரிவித்தார்.

கௌரவ தலைமைதாங்கும் உறுப்பினர் அவர்களே!

இன்று இந்த அவையின் மறைந்த முன்னாள் உறுப்பினர் மாமனிதர் சிவநேசனின் 17வது ஆண்டு நினைவு நாளாகும். மாமனிதர் சிவனேசன் அவர்கள் கிளைமோர் தாக்குதல் மூலம் இராணுவத்தினரால் கொல்லப்பட்டார். அவருக்கு எனது அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஊடக அமைச்சு குறித்தும் நாங்கள் விவாதித்து வருகிறோம். தமிழ் ஊடக உலகம் இரண்டு தனித்துவமானவர்களை இழந்துள்ளது. தினக்குரல் நிறுவனர் திரு. எஸ்.பி. சாமி மற்றும் தினக்குரல் ஞாயிறு பதிப்பின் ஆசிரியராகவும் பின்னர் வீரகேசரி பத்திரிகையின் ஆசிரியராகவும் பணியாற்றிய திரு.பாரதி இராசநாயகம் ஆகியோருக்கும் எனது அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கௌரவ அமைச்சர் அவர்களே!

யாழ்ப்பாண போதனா போதனா மருத்துவமனையின் பணிப்பாளரால் கடிதம் ஒன்று எனக்கு வழங்கப்பட்டது. அந்தக் கடிதத்தை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவிடமும் அவர் சமர்ப்பித்திருந்தார். நான் அதன் பிரதியை உங்களுக்கு வழங்குவேன். அந்தக் கடிதம் மிகவும் விரிவான கடிதமாகும். அதில் ஆளணி மதிப்பாய்வு மற்றும் பல்வேறு தரவுகள் உள்ளன. அந்த விடயத்துக்குள் செல்வதற்கு போதிய நேரம் இல்லாததால் நான் அந்த விடயத்துக்குள் செல்லவில்லை.

இக்கடிதத்தின் மூலம் பணிப்பாளர் உள்கட்டமைப்பு மேம்பாட்டைக் கேட்கிறார். குறிப்பாக அவர் ஒரு புதிய மகப்பேறு பிரிவு, இருதயவியல் இருதய மார்பு பிரிவு. உள்ளிட்ட மேம்பட்ட சிகிச்சைகளுக்கான சிறப்பு பிரிவு மற்றும் 30 க்கும் மேற்பட்ட சிகிச்சை உள்கட்டமைப்பு வசதிகள் தேவை என்று தெரிவித்துள்ளார்.

இதில் குறிப்பிட்ட நான்கு விடயங்களில் ஒரு விடயம் தொடர்பாக உங்கள் விசேட கவனத்தை ஈர்க்க விரும்புகின்றேன்.

கௌரவ அமைச்சரே! யாழ்ப்பாண போதனா மருத்துவமனையில் உள்ள மகப்பேறு விடுதி 2012 இல் பாழடைந்தமையால் அழிக்கப்பட்டது. அதன் பின்னர் நான்கு விடுதிகளுக்குரிய இடத்தில் 16 விடுதிகள் இப்போது செயல்பட்டு வருகின்றன. நீங்கள் அந்த அலகுக்குச் சென்றால், தாய்மார்கள் தரையில் தூங்கும் ஒரு பயங்கரமான சூழ்நிலையை அவதானிக்கலாம். முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாத இடத்தில் தற்போதைய விடுதி உள்ளது.. பெரிய அறுவை சிகிச்சைகளுக்குப் பின்னர் ICU இல் பராமரிக்கப்படும் தங்கள் குழந்தைகளுக்கு பாலூட்டுவதற்கு தாய்மார்கள் கிட்டத்தட்ட 20 நிமிடங்கள் நடந்து செல்லவேண்டும். இது முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாததாகும்.

இந்த விடயத்துக்கு நீங்கள் முன்னுரிமையளிக்க வேண்டும். இந்த விடயங்களை அவதானித்து மகப்பேற்று விடுதி தொடர்பாக உடனடியாக செயற்படுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

யாழ்ப்பாண போதனா மருத்துவமனை நாட்டின் நான்காவது தேசிய மருத்துவமனையாக உள்ள நிலையில், அதனை விரிவாக்குவதற்கு பணிப்பாளரால் நிலவசதி கேட்கப்பட்டுள்ளது.. மீனாட்சி அம்மன் வீதியில் உள்ள யாழ்ப்பாண போதனா மருத்துவமனைக்கு சொந்தமான இந்த நிலம் தற்போது பாதுகாப்புப் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. எனவே அவர் அந்த நிலத்தை மருத்துவமனைக்குத் திருப்பித் தருமாறு கேட்கிறார். மணிக்கூண்டுக் கோபுர வீதியில் அமைந்துள்ள கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான நிலத்தையும் அவர் கேட்டுள்ளார். எனவே இவை தொடர்பாக நீங்கள் கவனம் செலுத்த வேண்டும்.

கௌரவ அமைச்சரே, இரண்டாவது முக்கியமாக பிரச்சினையாக குறிப்பிட விரும்புவது தெல்லிப்பழை புற்றுநோய் மருத்துவமனை பற்றியதாகும். தெல்லிப்பழை புற்றுநோய் மருத்துவமனை, யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் புற்றுநோய் பிரிவின் பணியாளர்களைக் கொண்டிருந்தாலும், தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை மற்றும் போதனா மருத்துவமனையின் கீழ் வரும் புற்றுநோய் பிரிவு ஆகிய இரண்டும் அடிப்படையில் வெவ்வேறானவை. எனவே அங்குள்ள மருத்துவர்கள் தங்கள் சேவை-களை பயனுள்ளதாக வழங்குவதற்குரிய பரிந்துரைகளை எதிர்பார்க்கிறார்கள். அவர்களின் கூற்றுப்படி புற்றுநோய் பிரிவு சேவைகளை நிர்வகிப்பதற்கென தனி பணிப்பாளர் மற்றும் கணக்காளர் தனி மேட்ரன் தேவையென எதிர்பார்க்கிறார்கள். புற்றுநோய் சேவைகளை நிர்வகிக்கும் அனைத்து ஊழியர்களும் ஒரே நிர்வாகத்தின் கீழ் இருக்க வேண்டும். நிதியுதவி தொடர்பாக அவர்கள் கேட்பதும் இதுதான். புற்றுநோய் சேவைகளுக்கு தனித்தனி நிதி ஒதுக்கீடு அவசியமாகும். ஆதார வைத்தியசாலை மற்றும் போதனா மருத்துவமனை இரண்டுக்கும் இடையே வேறுபாடுகள் உள்ளன. எனவே அவர்களுக்கு தனியாக நிதி ஒதுக்க வேண்டும் என்று கேட்கிறார்கள்.

மருத்துவமனையில் உள்ள ஆதரவு சேவைகளைப் பொறுத்தவரை, உயர் தர அடிப்படையில் தற்போதுள்ள ஆளணி வெற்றிடங்களை நிரப்ப வேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார்கள். நோயியல் நிபுணர் மற்றும் ஆலோசகர், இரத்தவியலாளர்கள் பணியிடங்களுக்கான வெற்றிடங்களை வருடாந்த இடமாற்றத்தின் மூலம் நிரப்ப வேண்டும். புற்றுநோய் மருத்துவமனைக்கு CT ஸ்கேன் இயந்திரத்தை வழங்க வேண்டும் என்று அவர்கள் மன்றாடுகிறார்கள். CT ஸ்கேனர் இல்லாத புற்றுநோய் மருத்துவமனை எப்படி புற்றுநோய் மருத்துவமனையாக இருக்க முடியும் என்று எனக்குப் புரியவில்லை. எனவே கௌரவ அமைச்சரே! அதையும் நீங்கள் கவனிக்க வேண்டும்.

YOU MAY BE SURPRISED TO KNOW

THERE ARE JUST A FEW CONDITIONS THAT ARE COVERED UNDER

CANCER
HEART DISEASE
DIABETES

THANA INSURANCE

ONLINE 24/7

100% TAX FREE MONEY

COVERAGE WILL START WITHIN 48 HOURS

PREMIUM NEVER INCREASE
COVERAGE UNTIL LIFE

NON MEDICAL LIFE INSURANCE

| AGE | 25000 | | 50000 | |
| --- | --- | --- | --- | --- |
| | M | F | M | F |
| 60 | $79 | $69 | $154 | $132 |
| 65 | $103 | $89 | $202 | $173 |
| 70 | $141 | $116 | $276 | $227 |




Thana Manickavasagar
Insurance Broker

ASK THANA Cell : 416. 728. 5772 | Office: 416.519.3896

Address : 80 Nashdene Road, unit D218, Scarborough, ON, M1V 5E4

# ஜநா கூட்டத் தொடர்: எதுவும் மாறவில்லை ?



**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் -**

தமிழரசியல் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நோக்கி புதிய ஒருங்கிணைப்பு முயற்சிகளில் அதிகம் ஈடுபட்டிருந்த ஒரு காலச் சூழலில், ஜநாவின் 58 ஆவது கூட்டத்தொடர் கடந்த 24 ஆம் தேதி தொடங்கியது.

கடந்த சில ஆண்டுகளாக ஜநாவின் மீதான தமிழ் மக்களின் கவனக்குவிப்பு ஒப்பீட்டளவில் குறைந்து வருகிறது. ஜநாவிற்குச் செல்லும் தமிழ் அரசியல்வாதிகளின் தொகையும் குறைந்து விட்டது. உள்நாட்டில் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நோக்கிக் கவனத்தைச் செலுத்த வேண்டியிருப்பது மட்டும் ஒரு காரணம் அல்ல. ஜநாவை கையாள்வதற்கான பொதுப் பொறிமுறை எதுவும் தமிழ் மக்களிடம் இல்லை. ஒரு பொறிமுறை இருந்தால்தான் அது தொடர்ச்சியாக இயங்கும். இல்லை என்றால் எல்லாமே கட்சிகளின் அல்லது தனிப்பட்ட அரசியல் செயற்பாட்டாளர்களின் உதிரியான நடவடிக்கைகளாகச் சுருங்கிவிடும்.

நடப்பு ஜநா கூட்டத்தொடரில் இலங்கைத் தீவில் புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் வெளியுறவு அமைச்சராகிய விஜித ஹேரத் கடந்த 25 ஆம் திகதி உரை நிகழ்த்தியிருந்தார். அதன் பின் கடந்த மூன்றாம் தேதி ஜநாவின் மனித உரிமைகள் ஆணையாளருடைய வாய்மூல அறிக்கை மனித உரிமைகள் பேரவையில் வாசிக்கப்பட்டது.

இம்முறை ஜநா மனித உரிமைகள் கூட்டத் தொடருக்கு பின்வரும் முக்கியத்துவங்கள் உண்டு.

முதலாவது முக்கியத்துவம். உள்நாட்டில் ஒரு புதிய அரசாங்கம் தெரிந்தெடுக்கப் பட்டிருக்கிறது. இந்த அரசாங்கமானது தமிழ் மக்களின் ஆணையும் தனக்கு உண்டு என்று கூறுகிறது. விஜித ஹேரத் தனது உரையில் அதைச் சுட்டிக்காட்டியிருக்கிறார். எனவே இனப்பிரச்சினை தொடர்பான தீர்வு முயற்சிகளில் தமிழ் மக்களின் ஆணையைப் பெற்ற ஒரு அரசாங்கமாக இந்த அரசாங்கம் தன்னை வெளி உலகத்திற்கு காட்டிக் கொள்ள முயற்சிக்கிறது. இது முதலாவது, உள்நாட்டு முக்கியத்துவம்.

அடுத்தது பிராந்திய முக்கியத்துவம். சீன இடதுசாரி மரபில் வந்த ஒரு இயக்கம் இப்பொழுது இலங்கைத் தீவில் ஆட்சிக்கு வந்திருக்கிறது. முதலாளித்துவம் உலகின் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு தீமையாக எழுச்சி பெற்ற பின்னர் தென்னாசியாவில் இடதுசாரி வேர்களைக் கொண்ட ஒரு அமைப்பு இவ்வாறு ஆட்சிக்கு வந்திருப்பது என்பது ஒரு மாற்றம். சீனா இந்த அரசாங்கத்தை இலகுவாகக் கையாளலாம் என்று நம்புகின்றது. அதனால் சீனாவுக்கும் இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும்; சீனாவுக்கும் இடையிலான புதிய பிராந்தியப் போட்டிகளுக்கு அது காரணமாக அமையுமா? என்ற கேள்வி பலமாக உண்டு.

மூன்றாவது, அனைத்துலக முக்கியத்துவம். அமெரிக்கா மனித உரிமைகள் பேரவையில் இருந்து வெளியேறியிருக்கிறது. புதிய அமெரிக்க அதிபர் ட்ரம்ப் வழமையான ராஜதந்திர வழிமுறைகளுக்குக் கட்டுப்படாதவராகக் காணப்படுகிறார். அவருடைய வழமைக்கு மாறான நடவடிக்கைகளால் உலகளாவிய அரசியல் நிகழ்வுகளில் ஏற்படக்கூடிய மாற்றங்கள்.

மேற்கண்ட மூன்று மாற்றங்களின் பின்னணியில், 58 ஆவது ஜநா கூட்டத் தொடர் தொடங்கியிருக்கிறது. கடந்த மூன்றாம் திகதி மனித உரிமைகள் ஆணையாளருடைய வாய்மூல அறிக்கை வாசிக்கப்பட்ட அன்று, புலம்பெயர்ந்த தமிழர்கள் ஜநா முன்றலில் திரண்டு ஆர்ப்பாட்டம் செய்திருக்கிறார்கள்.

எனினும் கடந்த 25 ஆம் தேதி இலங்கையின் புதிய வெளிவிவகார அமைச்சர் மனித உரிமைகள் பேரவையில் தெரிவித்த தகவல்களின்படி, ஜநா தீர்மானங்கள் தொடர்பாக அதாவது பொறுப்புக்கூறல் தொடர்பாக, இலங்கையின் அணுகுமுறைகளில் எந்த மாற்றமும் இல்லை என்பது வெளிப்படையாகத் தெரிகிறது.

அதில் ஆச்சரியப்பட எதுவுமில்லை. ஏனென்றால், அனுர ஜனாதிபதி வேட்பாளராக இருந்த காலகட்டத்தில் அசோசியேற்றற் பிரஸ் என்ற ஊடகத்துக்கு வழங்கிய ஒரு நேர்காணலில் அதைச் சுட்டிக் காட்டியிருந்தார். பாதிக்கப்பட்ட மக்கள் உண்மையைக் கண்டறிய வேண்டும் என்று கேட்கின்றார்களே தவிர குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்று கேட்கவில்லை என்பதாக அவருடைய பதில் அமைந்திருந்தது. அதே நிலைப்பாட்டைத்தான் மனித உரிமைகள் பேரவையில் அவருடைய வெளியுறவு அமைச்சரும் பிரதிபலித்திருக்கின்றார். அதாவது அனைத்துலகப் பொறிமுறைகளை அரசாங்கம் நிராகரித்து விட்டது. அதே சமயம் உள்நாட்டுப் பொறிமுறைகளை தொடர்ந்து முன்னெடுக்கப் போவதாகச் சொல்லியிருக்கிறது. ஆனால் இந்த உள்நாட்டுப் பொறிமுறைகளான காணாமல் போனவர்களுக்கான அலுவலகம் இழப்பீட்டு அலுவலகம் போன்றவை உள்நாட்டில் பாதிக்கப்பட்ட மக்களால் நிராகரிக்கப்பட்டவை என்பதனை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும்.

மேலும், 2021 இலிருந்து மூன்று ஆண்டுகளாக ஜநா மனித உரிமைகள் ஆணையாளருடைய அலுவலகத்தில் ஒரு நிகழ்ச்சித் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. "சிறிலங்கா பொறுப்பு கூறலுக்கான நிகழ்ச்சி திட்டம் (SriLanka Accountability Program - SLAP) என்று அழைக்கப்படுகின்ற இந்த நிகழ்ச்சி திட்டத்தின் கீழ், போர்க்களத்தில் நிகழ்ந்த குற்றங்களைக் கண்டறிவதற்கான சாட்சிகளும் சான்றுகளும் சேகரிக்கப்பட்டு வருகின்றன. முதலில் ஒரு ஆண்டு மட்டுமே இயங்கும் என்று எதிர்பார்க்கப்பட்ட இந்த நிகழ்ச்சி திட்டத்தின் கால எல்லை நீடிக்கப்பட்டு வருகிறது. தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இந்த நிகழ்ச்சித் திட்டத்தை நிராகரித்து விட்டது. தேசிய மக்கள் கட்சி அரசாங்கம் ஜநா விடயத்தில் எந்த ஒரு சிறு மாற்றத்தையுமே காட்டவில்லை.

விஜித ஹேரத் மனித உரிமைகள் பேரவையின் ஆசிய பிராந்தியத்திற்கு பொறுப்பான அதிகாரியை சந்தித்து அது தொடர்பான விபரங்களை தன்னுடைய எக்ஸ் தளத்தில் பதிவிட்டிருக்கிறார். ஆனால் ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளரை அவர் சந்தித்திருப்பதாகத் தெரியவில்லை.

மேலும் கடந்த மூன்றாம் திகதி வாசிக்கப்பட்ட ஜநா மனித உரிமைகள் ஆணையாளருடைய வாய்மூல அறிக்கையில் புதிய அரசாங்கத்தை நெருக்கடிக்கு உள்ளாக்காத வார்த்தைகளும் அணுகுமுறைகளும் உண்டு என்று அவதானிக்கப் பட்டுள்ளது. எனினும் அரசாங்கம் அதை நிராகரித்திருக்கிறது. இந்த விடயத்தில் தனக்கு முன் இருந்த அரசாங்கங்களின் பாதையில்தான் தேசிய மக்கள் சக்தியும் பயணிக்கின்றது.

யுத்த வெற்றி நாயகர்கள் ஆகிய படைத்தரப்பை விசாரிக்கவும் தண்டிக்கவும் அவர்கள் தயாரில்லை. அதாவது படைக்கட்டமைப்பை பகைத்துக் கொண்டு சமாதானத்தைக் கொண்டு வர அவர்கள் தயாரில்லை. அவர்களால் அது முடியாது. அனுர ஜனாதிபதியாக வர முன்பு அசோசியேற்றற் பிரசுக்கு வழங்கிய மேற்காணலில் கூறியது போல, அவர்கள் படையினரைத் தண்டிக்க மாட்டார்கள். அப்படி என்றால் பாதிக்கப்பட்ட மக்கள் ஏன் உண்மையை அறிய வேண்டும்? இங்கு உண்மை என்பது என்ன? குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பது. குற்றவாளிகளை ஏன் கண்டுபிடிக்க வேண்டும்? அவர்களைத் தண்டிப்பதற்காக? அல்லது மன்னிப்பதற்கா? ஜநாவின் பொறுப்புக் கூறலுக்கான வார்த்தைகளில் சொன்னால் "மீள நிகழாமை" (Non recurrence) அதாவது குற்றங்கள் "மீள நிகழ்வதை" எப்படித் தடுப்பது? தண்டிப்பதன் மூலமா? அல்லது மன்னிப்பதன் மூலமா?

இதுதான் பிரச்சினை. தேசிய மக்கள் சக்தியிடம் தமிழ் மக்கள் புதிதாக எதையும் எதிர்பார்க்க முடியாது என்பதற்கு நடந்து கொண்டிருக்கும் ஜநா கூட்டத்தொடர் ஆகப் பிந்திய உதாரணம் ஆகும். அதை இன்னும் அழுத்தமாகச் சொன்னால், தையிட்டிக்கு பின்னரான உதாரணம் என்றும் சொல்லலாம்.

ஆனால் மற்றொரு அமைச்சராகிய லால் கந்த கூறுகிறார், அரசாங்கம்தான் மாறி இருக்கிறது தவிர அரசு மாறவில்லை என்று. அது கோட்பாட்டு ரீதியாகச் சரி. இலங்கைத் தீவின் சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்பை கட்டியெழுப்பும் நான்கு பிரதான மூலக்கூறுகளில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கம் ஒன்று மட்டும்தான் மாறக் கூடியது. எனையவை, படைக்கட்டமைப்பு, நீதிபரிபாலனக் கட்டமைப்பு, பௌத்த மகா சங்கம் ஆகியவை ஆகும். சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்பைப் பொறுத்தவரை அரசாங்கத்தைத் தவிர ஏனைய மூன்றும் மாறிலிகள். அரசாங்கங்கள் மாறும். ஆனால் அவை கூட மாறிலிகளின் கைதிகள்தான். இத்தகைய அர்த்தத்தில் கூறின் இலங்கைத் தீவில் தமிழ் மக்களைப் பொறுத்தவரை அரசுக் கட்டமைப்பில் திருப்பகரமான மாற்றங்களுக்கு இடமில்லை. புத்த பகவான் மாற்றம் ஒன்றே நிரந்தரம் என்று சொன்னார். ஆனால் இலங்கை தீவின் தேரவாத பௌத்தத்தைப் பொறுத்தவரை மாற்றமின்மைதான் நிரந்தரமா?



உலக செய்திகள் World News

# மலேசியாவில் நடைபெற்ற 17வது ஆண்டு எடிசன் திரை விருதுகள் நிகழ்வின் முன்னோட்டம் மற்றும் பத்திரிக்கையாளர் சந்திப்பு

## 17th Annual Edison Awards Press Conference and Preview Held in Penang - Malaysia

17வது ஆண்டு எடிசன் திரை விருதுகள் நிகழ்வின் முன்னோட்டம் மற்றும் பத்திரிக்கையாளர் சந்திப்பு மார்ச் 1 சனிக்கிழமை மாலை பினாங்கு லைட் ஓட்டலில் (The Light Hotel) நடைபெற்றது. அந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக நடிகர் சதீஷ், பினாங்கு மாநில அமைச்சர் டத்தோஸ்ரீ சுந்தர்ராஜு, ஆட்சி குழு உறுப்பினர் மாண்புமிகு குமரன், பினாங்கு மாநில மேயர் டத்தோ ராஜேந்திரன், டத்தோ பார்த்திபன், முதலமைச்சர் அலுவலக மேலாளர் டத்தின் பாரதி ஆகியோர் கலந்து கொண்ட நிகழ்வில் பல்வேறு சுவாரஸ்யமான நிகழ்வுகள் நடைபெற்றது.

நடிகர் சதீஷ் பேசும்போது சினிமாவை தாமஸ் ஆல்வா எடிசன் கண்டுபிடித்திருக்கலாம் ஆனால் அவர் பெயரில் விருது வழங்க வேண்டும் என எண்ணம் தோன்றியது செல்வகுமாரையே சாரும். கடத்த 16 ஆண்டுகளாக பல்வேறு நடிகர் நடிகைகளுக்கு இயக்குனர்கள், இசையமைப்பாளர்கள், பின்னணி பாடகர்கள், என சினிமா துறைக்கு தொடர்ந்து விருது வழங்கிய ஊக்குவித்து வருகிறார் என செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

மேலும் டத்தோஸ்ரீ சுந்தரராஜ் பேசும்போது, நாங்கள் அரசியலில் பணி செய்யும்போது எங்களுக்கு ஊக்கம் தரும் நிகழ்வு என்னவென்றால் சினிமா துறையில் கோலோச்சிய எம் ஜி ராமச்சந்திரன் அவர்கள். சினிமாவிலும், மக்கள் நல பணியிலும் எப்படி பணியாற்றினார் என்பதை அறிந்து எங்களுக்கெல்லாம் அவர் வழியில் மக்கள் பணி செய்து வருகிறோம் என தெரிவித்தார்.

இறுதியில் நடிகர் நடிகைகள் ஆன்லைனில் வாக்களிக்கும் போது நடிகர் சதீஷ் அவர்கள் சிறந்த நுவெநசவயபைநெச என்ற பிரிவில் தனக்குத்தானே வாக்களித்து, அதற்குண்டான காரணத்தையும் தெரிவித்தார் டத்தோஸ்ரீ சுந்தரராஜு அவர்கள், நம் மாநிலத்திற்கு வருகை புரிந்த சதீஷ்க்கு முதல் வாக்குவும், இரண்டாவதாக ராணுவத்தில் நாட்டுக்காக பணியாற்றி இறந்த, அவரைப் பற்றிய படத்தில் நடித்த சிவகார்த்திகேயனுக்கு வாக்களித்தார்.

பத்திரிகையாளர்களும் முன்னணி தொழிலதிபர்களும் கலந்து கொண்டு தொடர்ச்சியாக வாக்களித்தனர். இந்நிகழ்வானது ஏப்ரல் ஐந்தாம் தேதி சனிக்கிழமை மாலை 5 மணிக்கு Spice Arena என்ற அரங்கில் எடிசன் திரை விருதுகள் நிகழ்வு நடைபெறும் எனவும் பார்வையாளர்கள் டிக்கெட்டை எப்படி முன்பதிவு செய்வது என்பதை எடிசன் விருது குழு தலைவர் செல்வக்குமார் தெரிவித்தார்.

மேலும் முதன் முறையாக பினாங்கில் நடவிருக்கும் எடிசன் பிலிம் பெஸ்டிவலில் (Edison Film Festival) 5 திரைப்படங்கள் அமரன், மகாராஜா, விடுதலை 2, மெய்யழகன், லப்பர் பந்து GSC Queensbay மாலில் ஆம் தேதி திரையிடப்பட உள்ளதாகவும் தெரிவித்தார்.










இந்நிகழ்வில் கலந்து கொள்ளும் எடிசன் திரை விருது ரசிகர்களுக்கு தங்களுக்கு பிடித்தமான நடிகரின் படம் போட்ட டி-ஷர்டையும் (T-Shirt) விற்பனை செய்ய உள்ளதாக செல்வகுமார் தெரிவித்தார்.

---

A press conference and preview event for the 17th Annual Edison Awards took place on Saturday, March 1 at The Light Hotel in Penang. The gathering was graced by several notable figures, including actor Sathish; Penang State Minister Dato' Sri Sundararajoo; Exco Member YB Kumaran; the Mayor of Penang, Datuk Rajendran; Datuk Parthiban; and Datin Bharathi from the Chief Minister's Office. Various engaging activities and announcements highlighted the event.

Actor Sathish, in his address, noted that while Thomas Alva Edison may have invented cinema, it was Mr. Selvakumar who conceived the idea of bestowing awards in Edison's name. For the past 16 years, Mr. Selvakumar has continuously honored and encouraged actors, directors, music composers, and playback singers through the Edison Awards.

Dato' Sri Sundararajoo, speaking at the conference, remarked that as politicians, they draw inspiration from the late actor - politician M.G. Ramachandran, who dedicated himself both to cinema and public service. This legacy, he added, continues to guide their community-focused efforts today.

During a live voting session, actor Sathish humorously cast his own vote for himself in the "Best Entertainer" category, explaining his reasons. Dato' Sri Sundararajoo revealed that he gave his first vote to Sathish and his second vote to Sivakarthikeyan for his portrayal in a film about a soldier who died serving the nation. Members of the press and leading industrialists also took part in the voting process.

Mr. Selvakumar, Chairman of the Edison Awards Committee, announced that the 17th Annual Edison Awards ceremony will be held on Saturday, April 5, 2025, at 5:00 p.m. at the Spice Arena in Penang. He shared details on how fans can reserve tickets for the event. Additionally, the Edison Film Festival will make its debut in Penang, featuring five films: Amaran, Maharaja, Viduthalai 2, Meiyazhagan, and Lubber Pandhu on April 4, 2025 @GSC Queensbay.

In a final highlight, Mr. Selvakumar mentioned that fans attending the Edison Awards will be able to purchase T-shirts adorned with the posters of their favorite stars' films, adding an extra layer of excitement for movie enthusiasts.

The 17th Annual Edison Awards promise a grand celebration of cinematic achievements, uniting film buffs, industry professionals, and the public for a memorable evening in Penang.

NO. #1 ASTROLOGER, PSYCHIC & SPIRITUALIST



World Famous Indian Astrologer
PANDIT: SAI RAM

Face Reading, Palm Reading,
Horoscope & Date of Birth



SOLUTIONS & SUGGESTIONS:

OPEN
7 DAYS

9 AM
to
7.30 PM

Black Magic
Evil Spirits
Jealousy
Health, Wealth
Business, Marriage
Drinking Problem
Love, Divorce
Visa Prob.

Education, Family
Employment, Court
Husband & Wife
Children Problem
Business Prob
Vasthu Prob
Real Estate
and all other

Call for
1
FREE
QUESTION

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள பிரபல ஜோதிட வல்லுனர் பண்டித் சாஸ்திரிகள்
பல இடங்களுக்குச் சென்று தற்போதுகனடா வந்துள்ளார். இவர் கைரேகை, சாதகம், முகநாடி
ஆகியவை கொண்டு மிகத்துல்லியமாக நடந்தவை நடக்கவிருப்பவை பற்றிய விபரங்களைக் கூறுவார்.
துல்லியமாகக் கணித்து பார்க்கப்படும் விடயங்கள் கைரேகை, நாமநட்சத்திரம், கல்வி, உத்தியோகம்,
தொழில், வியாபாரம் விருத்தியடைதல், இலட்சுமி வசீகரம், திருமணயோகம், குழந்தை பாக்கியம்,
கணவன் மனைவி ஒற்றுமையின்மை, வதிவிடப் பிரச்சனைகள், வெளிநாட்டுப் பயணங்கள்,
எதிரிகள் கண்ணூறு நாவூறு, கஸ்டநஸ்டங்கள், நீதிமன்ற வழக்குகள், வாகனப் பொருத்தம்,
பெண்பிள்ளைகள் பெற்றார் பிரச்சனைகள் இவற்றையெல்லாம் அறிந்து பரிகாரம் செய்து கொள்ள
ஒருமுறை என்னை சந்தியுங்கள்.

100% GUARANTEE

+1 437-829-1722
2993 Islington Ave, North York, ON, M9L 2K9
(Major intersection: STEELES & ISLINGTON)

இலங்கை செய்திகள் Sri Lanka News

கனகராசா சரவணன்

# வடகிழக்கு மக்களுக்கு இன்றுவரை நீதிகிடைக்கவில்லை அதற்காக போராட்டங்களில் ஈடுபட்டுள்ளோம்

## மக்கள் பேரவைக்கான இயக்கம் வணபிதா ஜீவந்த பீரிஸ் தெரிவிப்பு



வடகிழக்கு மக்களுக்கு அன்று முதல் இன்றுவரை நீதிகிடைக்கவில்லை தற்போது புதிதாக வந்துள்ள இந்த அரசாங்கம் கூட இன்னும் செவிமடுக்காத நிலையில் இருக்கின்றது எனவே இந்த அசாதாரண நியாயமில்லாத இந்த முறையை மாற்றுவதற்காக உண்மையான மாற்றத்தை கொண்டு வருவதற்காக நாங்கள் தொடர்ந்து போராட்டங்கள் கோரிக்கைகளை செய்து வருகின்றோம் என மக்கள் பேரவைக்கான இயக்கம் வணபிதா ஜீவநந்த பீரிஸ் தெரிவித்தார்.



மட்டக்களப்பில் கல்லடி பாலத்தில் இருந்து காந்தி பூங்காவரையும் வியாழக்கிழமை அன்று 6ம் திகதி நீதிக்கான நடை பயணத்தின் 1030வது நாள் போராட்டத்தில் மக்கள் பேரவைக்கான இயக்கத்தின் உறுப்பினர்கள் பௌத்ததேரர்கள் உட்பட பலர் பங்கேற்றனர் இதன் போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

காலிமுகத்திடல் அறகலை போராட்டம் ஆரம்பித்த காலத்தில் இருந்து மட்டக்களப்பு நகரில் நீதிக்கான பயணம் தொடர்ந்து 1030வது நாளாக இடம்பெற்றுவருகின்றது அந்தவகையில் வடக்கு கிழக்கில் மக்களுக்கு உரிமைகள் வழங்கப்படவில்லை காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதி அவர்களுக்கான இடங்கள் அன்று முதல் இன்றுவரை கிடைக்கப்படவில்லை அனைத்து மக்களையும்விட அதிகமாக வடகிழக்கு மக்களின் உரிமைகள் பறிக்கப்பட்டுள்ளதை கருத்தி கொள்ளவேண்டும்.

எனவே அந்த மக்களின் நோக்கத்தை கூட தற்போது புதிதாக வந்துள்ள இந்த அரசாங்கம் கூட இன்னும் செவிமடுக்காத நிலையில் இருக்கின்றது. எனவே அந்த மக்களின் நோக்கத்துக்காக மக்கள் பேரவைக்கான இயக்கமாகிய நாங்கள் அன்றும் இன்றும் தொடர்ந்து போராடிவருகின்றோம் அதை வலியுறுத்து வதற்காக இந்த தொடர்ச்சியான நடைபாதை போராட்டங்கள் கோரிக்கைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

இந்த அசாதாரண நியாயமில்லாத இந்த முறையை மாற்றுவதற்காக உண்மையான மாற்றத்தை கொண்டு வருவதற்காக மக்களாகிய நாங்கள் ஒன்றுபடவேண்டும் என்றார்.

# மீனவர் பிரச்சினையை வைத்துக் கொண்டு எமக்கும் இந்தியாவுக்கும் இடையே முரண்பாடுகளை ஏற்படுத்த முயற்சி

இலங்கை செய்திகள் Sri Lanka News

மன்னார் நிருபர்



## செல்வம் அடைக்கலநாதன், MP

- எஸ்.ஆர்.லெம்பேட் (06-03-2025)

மீனவர் பிரச்சினையை வைத்துக் கொண்டு எமக்கும் இந்தியாவுக்கும் இடையே முரண்பாடுகளை ஏற்படுத்த முயற்சிக்கப்படுவதாகவும் இதற்கு ஒருபோதும் இடமளிக்க மாட்டோம் என தெரிவித்த ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், இந்த விடயத்தில் சீனா மூக்கை நுழைப்பதை அனுமதிக்க முடியாது என்றும் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் 5ம் திகதி புதன்கிழமை நடைபெற்ற 2025 வரவு செலவுத் திட்டத்தின் மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கை மீனவர்களுடன் நாங்கள் பேசும் போது, இந்திய டோலர் படகுகளின் வருகை குறையுமாக இருந்தால் அதற்கான இந்தியா மற்றும் தமிழ் நாட்டுடன் பகைக்காமல் மாற்றுத் திட்டத்தை வழங்குவதாக கூறினர்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு சார்பாக பிரதமராக மன்மோங் சிங் இருந்த போது ஆழ் கடல் மீன்பிடி முறையை அறிமுகப்படுத்தினால் பிரச்சினையை தீர்க்கும் என்று நாங்கள் அவரிடம் கூறினோம். இந்நிலையில் தமிழ்நாட்டு முதலமைச்சரை சந்திக்க ஏற்பாடு செய்யுமாறு அமைச்சரை கேட்கின்றோம். டில்லி அரசாங்கத்துடனும் பேசுவோம் என்றார்.

# Canada Saivite Council for Spiritual Support in Healthcare

# சுகாதார சேவையில் கனடா சைவ ஆன்மீக ஆதரவுச்சபை

**Approved Charity No. 843992926RR0001**

**நாம்** பிறந்தது முதல் வாழ்வின் முதுமை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறோம். முதுமையிலும் சிலர் இயலாமை நிலையை அடைகிறோம். அந்நிலையில் நாம் வைத்தியசாலைகளிலும், நீண்ட கால பராமரிப்பு நிலையங்களிலும் எமது வாழ்வின் இறுதி நாட்களைக் கழிக்க நேரிடும். இந்நிலைக்குத் தள்ளபடும்போது, ஆதரவை இழந்து சமுதாயத்திலிருந்தும் அகற்றப்பட்ட விரக்திநிலை உருவாகலாம். இன்று சுகவாழ்வை அனுபவிக்கும் எவருக்கும் இந்நிலை ஏற்படக்கூடிய சாத்தியக்கூறு உண்டென்பதை மறுக்க முடியாது. இந்நாட்டில் முதற்குடியேறிய தமிழ் மக்களில் பலர் தற்போது வயது முதிர்ந்தவர்களாய் நீண்டகால பராமரிப்பு நிலையங்களிலும், வைத்தியசாலைகளிலும் வாழ்வின் இறுதி நிலையை நோக்கியவர்களாக இருக்கிறார்கள்.

இந்நிலையில் இருக்கும் எமது மூத்த சகோதர, சகோதரிகளை எமது தமிழ் சமுதாயம் கருத்திற் கொள்ளல் வேண்டும். கடும் நோய், அல்லது தீராதநோய் ஏற்படும்போது ஆன்மீக சிந்தனை அதிகமாக எழுவது சகஜம். அப்படியானவர்களுக்கு வைத்தியசாலைகளிலும், நீண்டகால பராமரிப்பு நிலையங்களிலும் ஒத்தாசையும் ஆதரவும் வழங்குவதற்காக சைவ ஆன்மீக ஆதரவுச்சபை 2008ம் ஆண்டில் புரோவிடன்ஸ் ஹெல்த்கியாரின் (Providence Healthcare) தமிழ்பராமரிப்பாளர் திட்டதினால் நிறுவப்பட்டது.

அன்றைய நடைமுறையிலான அவசர தேவை கருதி இதைத் துவக்கி வைப்பதில் வண. பிதா ஜோசப் சந்திரகாந்தன் முக்கிய பங்கு வகித்துள்ளார். அவரது உந்துதலின் பேரிலேயே இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. ஆன்மீக ஆதரவு வழங்கக்கூடிய சைவநெறியாளர்களைத் தேர்ந்தெடுத்து விசேட பயிற்சிக்கான பாடத்திட்டத்தை சைவசமயப் பெரியார்களின் ஒத்துழைப்புடன் உருவாக்கியதுடன், அநேக விரிவுரையாளர்களையும் தெரிந்து பயிற்சித்திட்டத்தை வெற்றிகரமாக முடித்தார். அன்று முதல் இன்று வரை டாக்டர் சண்முகவடிவேல் தலைமையில் இத்திட்டம் தொடர்ந்து இயங்கிக்கொண்டு வருகிறது. இது அரசு அங்கீகாரம் பெற்ற அறக்கட்டளை நிறுவனமாகும். (Approved Charity).

**சேவைகள்**

பதின்மர் இப்பயிற்சியை வெற்றிகரமாக முடித்து தற்பொழுது ஸ்காபரோ ஜெனரல், சென்றினரி வைத்தியசாலைகளிலும், எக்ஸ்ரெண்டி கியர், செவன் ஓக்ஸ், ரொக்கிளிப் ஆகிய நீண்ட நாள் பராமரிப்பு நிலையங்களிலும் நோயாளரைச் சந்தித்து அவர்களுக்கும் அவர்கள் குடும்பத்தினருக்கும் ஆறுதல் வழங்குவதுடன் சைவசமய வழிபாட்டு சமயாசாரங்களையும் நடாத்தி வருகிறார்கள். இன்னும் அநேக வைத்தியசாலைகளும், நீண்ட நாள் பராமரிப்பு நிலையங்களும் இப்பணிக்காகக் காத்திருக்கின்றன.

ஆன்மீக ஆதரவு அளிப்பதே இச்சபையின் முக்கிய நோக்கமாய் உள்ளது. இதற்காக செவன்ஓக்ஸ் நீண்டநாள் பராமரிப்பு நிலையத்திலும், எக்ஸ்டென்டிக்கியர் நீண்ட நாள் பராமரிப்பு நிலையத்திலும் சைவ பூசைக்கூடம் நிரந்தரமாக நிறுவியுள்ளோம். தமிழர் வதியும் மற்றைய நீண்டநாள் பராமரிப்பு நிலையங்களிலும் சைவ பூசைக்கூடம் அமைக்கக்க வேண்டியது அவசியம்.

கூட்டு நிகழ்ச்சியாக தேவாரம் பாடுதல், சைவபூசை நடாத்துதல், விபூதி கொடுத்தல் என்பதுடன், சில தமிழ் கலைநிகழ்ச்சிகளையும் நடாத்தி அவர்களை ஆற்றுப்படுத்துகிறோம். படுத்த படுக்கையாக இருக்கும் சிலரைத் தனிப்பட்ட முறையில் சந்தித்து, தேவாரம் பாடி விபூதி அளிக்கிறோம். வாழ்வின் இறுதித் தருணத்திலிருப்போர் ஆன்மீக சேவையை விரும்பினால், நிலைய முகாமையாளர் எங்களுடன் தொடர்பு கொள்வார்கள். அப்போது சேவையாளர் அங்கு சென்று விசேட சமயாசார நிகழ்ச்சி நடாத்துவதுடன், குடும்பத்தினருக்கும் ஆதரவு வழங்குகின்றனர். மேலும், பொங்கல், தீபாவளி, சித்திரை வருடப்பிறப்பு போன்ற விசேட தினங்களை கலை நிகழ்ச்சிகளுடன் கொண்டாடுவோம்.

வெகு விமரிசையாக நடந்துகொண்டுவந்த நிகழ்வுகள் கோவிட்-19 காரணமாக தடைப்பட்டது. நேர்முகமாக அவர்களுடன் தொடர்பு கொள்ள முடியாவிடினும், சூம் (Zoom) மூலமாக அவர்களுடன் தொடர்பு கொண்டு எங்கள் சேவைகளை நடாத்தி வந்தோம். சூம் சேவையை துவக்கி வைத்தவர் டாக்டர் லம்போதரன் அவர்களாகும். தற்பொழுது திருமதி. யோகா பத்மநாதன் இச்சேவையை நடாத்தி வருகிறார். இந்நிகழ்வில் அநேக இளம் பிள்ளைகள் பங்கு கொள்கின்றனர். இச்சேவை தொடர்ந்து நடைபெற்றாலும், முன் போன்று நேர்முக சேவை வேண்டுமென எங்களுடன் கேட்டுக்கொண்டனர். ஆதலினால் நேர்முக சேவையை மீண்டும் துவக்கியுள்ளோம்.

**வருங்காலத் திட்டம்**

- கூடிய சைவநெறியாளர்களைத் தெரிந்து அவர்களைப் பயிற்றுவித்து இச்சேவையில் ஈடுபடுத்தல்
- இணையத்தளம் உருவாக்குதல்
- கலைத்திறன் கொண்ட தொண்டர் குழு உருவாக்குதல்
- சைவ ஆன்மீக ஆதரவுச் சேவையை தமிழ் சைவர் வதியும் மற்றைய நீண்ட நாள் பாராமரிப்பு நிலையங்களுக்கும் வைத்தியசாலைகளுக்கும் விரிவுபடுத்தல்
- இச்சேவையை நடைமுறைப்படுத்த நிதி சேகரித்தல்

இப்பணி தொடர, வைத்தியசாலைகளிலும் நீண்டநாள் பராமரிப்பு நிலையங்களிலும் அல்லலுரும் எம்மவர் ஆதரவு பெற கனடாவிலுள்ள தமிழ் சமூகம் எமக்கு தொடர்ச்சியான அடிப்படையில் ஆதரவளிப்பீர்களென எதிர் பார்க்கிறோம். எம்முடன் தொடர்பு கொள்ள விரும்புவோர் saivitecouncil@gmail.com எனும் இணையத்தளத்தில் தொடர்பு கொள்ளலாம். நிதியுதவி அளிக்க விரும்புவோர், மேற்கூறிய இணையத்தளம் மூலம் நிதி அளிக்கலாம்.

ஜெயசிங் டேவிட்
இணைப்பாளர்

இலங்கை செய்திகள் Sri Lanka News

# யாழ்ப்பாண மாநகரசபையால் பாதிக்கப்பட்ட இளைஞனுக்கு உதவித் தொகை வழங்கி வைப்பு!




யாழ்ப்டபாணத்தில் வீதியோரத்தில் பழக்கடை நடத்தி வந்த இளைஞனிடம் மாநகர சபை வரி அறவீட்டு உத்தியோகத்தர்கள் அடாவடியில் ஈடுபட்டு, இளைஞனின் வியாபாரத்தை இடை நிறுத்திய சம்பவத்துடன் தொடர்புடைய இளைஞனுக்கு 3ம் திகதி திங்கட்கிழைமையன்று ஒரு இலட்சம் ரூபா உதவித் தொகை வழங்கிவைக்கப்பட்டது.

லஷ்மிகா அறக்கட்டளையின் நிறுவுனர் தர்மிகா அவர்கள் ஒரு இலட்சம் ரூபாய் உதவித் தொகையை வடமராட்சி கிழக்கு சமூக மாற்றத்திற்கான ஊடக மையம் ஊடாக இன்று வழங்கிவைத்தார்.

சமூகமாற்றத்திற்கான ஊடக மையத்தில் வைத்து இளைஞனிடம் உதவித் தொகையை கையளித்த ஊடகமையை தலைவர் சிரேஷ்ட ஊடகவியலாளர் சி.த காண்டிபன் கருத்து தெரிவிக்கையில்,

லஷ்மிகா அறக்கட்டளை நிறுவுனருக்கு நன்றி தெரிவிப்பதுடன் "மனிதர்கள் மனிதர்களாக மதிக்கப்பட்டு, அவர்களது மனித உரிமைகளும் மதிக்கப்பட்டு சமூக மாற்றம் ஒன்றை உருவாக்க அனைவரும் முன்வரவேண்டும்:" என தெரிவித்தார்.

# கல்முனை வடக்கு பிரதேச செயலகம் முழுமையாக இயங்குவதற்கு இந்த அரசாங்கம் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்

## உள்ளூராட்சி அமைச்சு விடயதானத்தில் உரைற்றுகையில் உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நாடாளுமன்றில் தெரிவிப்பு



செவ்வாய்க்கிழமை 04.02.2025 அன்று நடைபெற்ற வரவு செலவுத் திட்ட விவாதத்தில் பொது நிர்வாகம், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சு விடயதானத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நாடாளுமன்றில் ஆற்றிய உரையில் அவர் மேற்படி கல்முனை வடக்கு பிரதேச செயலகம் தொடர்பாக முக்கியத்துவம் அளித்து உரையாற்றினார்.

அவர் அங்கு உரையாற்றுகையில் கௌரவ சபை உறுப்பினர்களே என்று ஆரம்பித்து பின்வருமாறு தெரிவித்தார்.!

நான் மூன்று பிரச்சினைகளை எழுப்ப விரும்புகிறேன். முதலாவதாக, கட்டிட அனுமதியின் பெயர் மாற்றம், தலைப்பு மாற்ற சான்றிதழ், நிலங்களின் உப பிரிப்புக்கள், நிலங்களின் ஒருங்கிணைப்பு மற்றும் தெருக் கோடு சான்றிதழ்கள் என்பன அனைத்தும் உள்ளூராட்சி அமைப்புகளின் உப அலுவலர்களால் வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளதாக வட மாகாணத்திலுள்ள உள்ளூராட்சி மன்ற உப உத்தியோகத்தர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் வடக்கு மாகாண சபையின் திறன் குறைபாடு காரணமாக. இந்த ஆறு வேலைகளும் உள்ளூராட்சி அமைப்பின் பிரதான அலுவலகத்தால் செய்யப்படும் என்று ஒரு சுற்றறிக்கை மூலம் கேட்டுள்ளனர்.

கௌரவ அமைச்சர் அவர்களே, இந்த நடைமுறையால் தற்போது மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே இந்த விவகாரத்தில் நீங்கள் தலையிடுமாறு கேட்டுக்கொள்கிறேன், உப அதிகாரிகள் இந்தப் பணிகளைச் செய்வதை உறுதிசெய்ய தேவையான அனைத்துச் வசதிகளையும் வழங்கவும். இல்லையேல் மக்களை சிரமத்திற்கு உள்ளாக்கும். முடிந்தவரை அடித்தட்டு மக்களுக்கு வசதிகளை கொண்டு செல்லவதே உங்கள் அரசின் நிலைப்பாடு என்றால் இந்த விடயத்திலும் நீங்கள் தலையிட வேண்டும்.

கௌரவ அமைச்சர் மற்றும் கௌரவ தலைமைதாங்கும் உறுப்பினரே!.

மற்றய விடயம், சாவகச்சேரி பிரதேச செயலகம், நடைமுறைச் சிக்கல்களை எதிர்கொள்ளும் செயலகமாகும், குறித்த பிரதேச செயலகம் உள்ளடக்கியதாக கருதப்படும் நிலப்பரப்பு மிகவும் பெரியது. எனவே நீண்ட நாள் கோரிக்கை உள்ளது. 2001 ஆம் ஆண்டு பாராளுமன்ற உறுப்பினராக இருந்த போது, அந்த பிரதேச செயலகத்தை இரண்டு புவியியல் பிரதேசங்களாக பிரிக்குமாறு அரச நிர்வாக அமைச்சிடம் எழுத்து மூலமான கோரிக்கையை முன்வைத்திருந்தேன் என்பது எனக்கு நினைவிருக்கிறது. தற்போது உள்ள நிலையில் சாவகச்சேரியை அடிப்படையாக வைத்து கொடிகாமத்தை மையமாக கொண்டு கொடிகாமம் பிரதேசத்தில் இருந்து புதிய பிரதேச செயலகத்தை உருவாக்குதல் வேண்டும்.

எனக்கு முன் பேசிய சக கௌரவ உறுப்பினர் கல்முனை வடக்கு பிரதேச செயலகப் பிரச்சினை விடயத்தை எழுப்பியிருந்தார். இந்த கல்முனை வடக்கு பிரதேச செயலக அலுவலகம் 1989 முதல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. 17-3-1993 அமைச்சரவைப் பத்திரம் 31-3-1993 ஆம் திகதிய குறிப்பாணை மூலம் உதவி அரசாங்க அதிபர் பிரிவாக்கப்பட்டது. 09-07-1993 தேதியிட்ட அமைச்சரவைப் பத்திரத்தின் மூலம் பொது நிர்வாக அமைச்சு இதனை இரண்டு பிரதேச செயலகங்களாக தரமுயர்த்தியது.

கௌரவ அமைச்சர் அவர்களே!

இன்று துரதிஸ்டவசமாக, அரசியல் காரணங்களால் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை முழுமையாகச் செயற்படுத்த முடியாத வகையில் இடையூறுகள் ஏற்பட்டுள்ளன. ஒரு கணக்காளர் இல்லாமைக்கு அரசியல் தலையீடே காரணமாக அமைந்துள்ளது. இதனால் செயலகத்தின் பல பகுதிகள் செயல்பட முடியாமல் உள்ளது.

படிப்படியாக கல்முனை தெற்கு பிரதேச செயலகத்திற்கு மாற்றுவதற்கு தற்போது முயற்சிகள் நடைபெறுகின்றன. கடந்த அரசாங்கத்தில் இதனை உப அலுவலகமாக தரம் இறக்கப்போவதாக பேச்சுக்கள் இடம்பெற்றன.

கௌரவ அமைச்சர் அவர்களே!

இந்த அரசாங்கத்தின் ஆட்சியில் தரம் இறக்கும் செயற்பாட்டை நிறுத்த வேண்டும். 1989 இல் எடுக்கப்பட்ட முடிவு இது. அரசியல் தலையீடு காரணமாக இந்த பிரசச்சினை நீடித்து வருகிறது. எனவே எனக்கு முன் பேசிய கௌரவ உறுப்பினரின் கருத்துடன் உடன்படுகிறேன். வடக்கு கிழக்கை, குறிப்பாக கிழக்கு மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ஏனைய அனைத்து உறுப்பினர்களும் ஒத்துழைப்பார்கள் என நினைக்கிறேன். கல்முனை வடக்கு பிரதேச செயலகம் முழுமையாக இயங்குவதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். கடந்த காலங்களில் நடைபெற்றிருந்த அரசியல் தலையீட்டை இந்த அரசாங்கம் அனுமதிக்கப் போவதில்லை என்றால் நீங்கள் இந்த விடயத்தை செய்யவேண்டும். எனவே இது தொடர்பில் உடனடி நடவடிக்கை எடுக்குமாறு நான் உங்களை கேட்டுக்கொள்கின்றேன். இந்த விடயத்துக்கு எமது முழுமையான ஒத்துழைப்பை வழங்குவோம்.

# வவுனியா இரட்டை கொலை சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் உயர் நீதிமன்றில் பிணை அனுமதி கோரி விண்ணப்பிக்க முடியும் என நீதிமன்றம் உத்தரவு



(6-03-2025)

வவுனியா, தோணிக்கல் பகுதியில் கடந்த 2024 வருடம் ஜுலை மாதம் 23 ஆம் திகதி அதிகாலை வீடு புகுந்து தாக்குதல் நடத்தி பெற்றோல் ஊற்றி எரியூட்டப்பட்ட சம்பவத்தில் கணவன் மற்றும் மனைவி ஆகிய இருவர் மரணமடைந்திருந்தனர்.

குறித்த இரட்டை கொலை சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தில் ஏழு பேர் கைது செய்யப்பட்டிருந்த துடன், அவர்களிடம் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் கொலை விசாரணைப் பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்திருந்த துடன், அவர்கள் நீதிமன்ற உத்தரவுக்கமைய தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

குறித்த வழக்கு விசாரணை வவுனியா மேல் நீதிமன்றில் 5ம் திகதி அன்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள பிரதான சந்தேக நபரின் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி டபிள்யு..ஆர்.டி சில்வா ஆஜராகி, சந்தேக நபர்கள் சார்பில் மேல் நீதிமன்றில் பிணை கோரி பிணை மனு சமர்ப்பித்தார்.

அதனை மறுத்து சட்டமா அதிபர் திணைக்களத்தின் சட்ட வாதிகளால், பிணை வழங்கியதற்கு மறுப்புத் தெரிவித்து விளக்கமறியலை நீடிக்குமாறு வாதங்கள் முன்வைக்கப்பட்டன.

இவை தொடர்பில் கவனம் செலுத்திய மேல் நீதிமன்ற நீதிபதி எம்.எம்.எம். மிஹால் சட்டமா அதிபர் திணைக்களத்தினால் பிணை மறுப்புக்கு விசேட காரணங்கள் முன்வைக்கப்படாமையால் கைது செய்யப்பட்டவர்களுக்கு விளக்கமறியலை நீடிக்க காரணம் போதாமையால் குறித்த சந்தேக நபர்களுக்கு பிணை வழங்கலாம் என உத்தரவிட்டார்.

எனினும் சந்தேக நபர்கள் பிணை கோரி உயர் நீதிமன்றில் விண்ணப்பம் அளிக்கப்பட வேண்டும். இதேவேளை ஏற்கனவே விண்ணப்பித்து உயர் நீதிமன்று நிராகரித்திருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.


TRADITIONAL CHINESE ACUPUNCTURE THERAPY

| | |
|---|---|
| எல்லாவிமான வலிகளுக்கும் | All Pain & Aches, Arthritis |
| ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை | Asthma, Sinusitis, Rhinitis Allergies |
| மனத்தளர்ச்சி, தலைவலி | Stress, Migraine & All Types of Headaches |
| நீரிழிவு நோய், வயிற்றுவலி | Diabetes, Gastric Pain, Ulcer |
| மாதவிடாய் சம்மந்தமானவையும் | Menstruation |
| உடற்பருமன் குறைத்தல் | Weight Loss |

முதலான சகலவிதமான நோய்களுக்கும்

Mrs. K. Vasanthakumar ஐ

Acupuncturist (R.A.C)

தொடர்புகொள்ளவும்.

(416) 754-4024

5200 Finch Ave., East -- Suit #349

Scarborough, ON M1S 4Z5

# VILLAGE NISSAN

## தமிழ் பேசும் வாடிக்கையாளர்களுக்கு சேவையாற்றுவதில் நாம் பெருமையடைகிறோம்

*DAA ROTATION



**25 SENTRA**
*S CVT* ULTRA-LOW
**$69** WEEKLY | **39** MOS. LEASE $2,695 Down
+$1,000 60th Anniversary Cash

*DAA ROTATION



**25 KICKS PLAY**
*S* ULTRA-LOW
**$69** WEEKLY | **39** MOS. LEASE $2,192 Down
+$1,000 60th Anniversary Cash

*DAA ROTATION



**25 ROGUE**
*S AWD*
**0.99%** | **30** MOS. LEASE
+$1,000 60th Anniversary Cash



**Sajanthan Vijayakumar**
SALES CONSULTANT

905.477.3337 647.631.9054
saj@villagenissan.com

NISSAN | VILLAGE NISSAN
25 South Unionville Ave,
Unionville, ON L3R 6B8
www.villagenissan.com






## Carefirst Family Health Team

Carefirst Family Health Team

**Accepting New Patients**
**புதிய நோயாளர்கள்**
**ஏற்றுக் கொள்ளப்படுகின்றனர்**

- அனுபவமுள்ள தமிழ் பேசும் பெண் குடும்ப மருத்துவர் எங்களது ஸ்கார்பரோ கிளினிக்கில் இணைந்துள்ளார். (Scarborough Clinic)
- உங்களது சுகாதார சேவைகளைப்பூர்த்தி செய்ய காத்திருக்கிறார்.
- நீரழிவு இருப்பின் அது சம்பந்தமான கல்வித்திட்டமும் அவரால் ஒழுங்கு செய்து தரப்படும்.
- நாள்பட்ட நோய்க்கான கல்வியும் (chronic disease), மேலாண்மை திட்டங்களும் அவரால் வழங்கப்படும்.



அவர் விபரம்:

டாக்டர் அஞ்சலின் ராஜரத்தினம் (Scarborough Clinic)

டாக்டர். ராஜரத்தினம் அக்கறையும் அர்ப்பணிப்பும் கொண்ட குடும்ப மருத்துவர் ஆவர்.

**உங்கள் குடும்ப மருத்துவத்தேவை, மற்றும் டாக்டர் ராஜரத்தினத்தின் நோயாளியாக பதிவு செய்ய விரும்பினால், கீழே உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும் அல்லது https://forms.office.com/r/upqD0q5TGL க்குச் சென்று படிவத்தை நிரப்பவும் உங்கள் சுயவிவரத்தை உருவாக்க எங்களுக்கு உதவ, உங்கள் விபரங்களை பதிவு செய்யுங்கள்.**

Availability of New Family Doctor at Carefirst Family Health Team - Dr. Rajaratnam

**Clinic Location:**
**Carefirst One-Stop Multi-Services Centre**
**300 Silver Star Blvd., 2/F**
**Scarborough, ON M1V 0G2**
**Tel: (416)502-2029**
**www.carefirstontario.ca**

11/24






## உங்கள் வீட்டை புதுப்பிக்க வேண்டுமா?



## Legalize your basement now!

* Basements
* Bathrooms
* Kitchen
* Flooring
* Accent Walls
* Painting
* Custom Closets



**Coverall Group Inc.**
**Contact: Siva 416-706-8160**

# மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி குருமன்றத்தில் அருள்திரு பங்காரு அடிகளாரின் 85வது அவதாரத் திருநாள்



மறைந்தும் மறையா அருள்திரு பங்காரு அடிகளாரின் அவதாரத்திருநாள் 03-03-2025 திங்கட்கிழமை மாலை மன்றத்தில் வழமையான பூசைகள் நடைபெற்று பின் 09-03-2025 ஞாயிற்றுக்கிழமை காலை 9:00 மணியளவில் தொடங்கி தொடர்ந்து மந்திரங்கள், பஜனைகள், நடனம் ஆகியவை நடைபெற்று சிறப்பு பூசைகள், மகேஸ்வர பூசையுடன் முடிவடையும்.

அன்னையின் அருள் வேண்டி சிறப்புடன் வாழ அனைத்து சக்திகளையும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

அத்துடன் நீங்கள் விரும்பிய வேப்பிலை, பழம், பூ, அன்னதானபொருட்கள் என்பன கொடுத்துதவலாம்.

நம்பினோர் கைவிடப்படார். பெண்களின் மேன்மைக்காகவே சக்தி ரூபம் எடுத்து வந்திருக்கும் அடிகளார் இயந்திரம் போன்றவர். இரயில் பெட்டிகளாகிய நாம் அதை தொடரந்து பயன் பெற்றுக்கொள்ளவேண்டும்.

செடி வளர முதலில் விதை வேண்டும், அந்த விதையை ஊன்ற மனம் வேண்டும். அந்த விதையை ஆழமாக ஊன்ற வேண்டும். அது நன்கு வளரவதற்கு தண்ணீர் ஊற்ற வேண்டும். எந்த அளவிற்கு ஆழமான ஈடபாடு இருக்கின்றதோ. அந்த அளவிற்குத் தக்கபடி பயன் கிடைக்கும்.

80E நாஸ்டீன் வீதி ஸ்காபரோ கனடா
தொடர்புகளுக்கு: 647-436-9647



tasty தமிழா ™

# தமிழ் மண்ணிலிருந்து நேரடியாக உலகெங்கும்...










இலங்கை மற்றும் தென்னிந்திய மசாலா பொருட்கள் பாரம்பரிய உணவு வகைகள்..

கனடாவில்
Tasty தமிழா தயாரிப்புகள் இங்கு கிடைக்கும்..

MAHAANS PICK & PRESS OIL MILL INC
Organic Bulk Store & Water Filling Station
5635 Finch Ave East,
Unit 5, Scarborough M1B 5K9.

Call: 416 293 4010

MAHAANS
PICK & PRESS OIL MILL INC

# MY SINCEREST THANK YOU TO EVERYONE, WHO SUPPORTED ME TO BE RE-ELECTED FOR MY 3RD TERM



நான் மூன்றாவது முறையாக
மீண்டும்
தேர்ந்தெடுக்கப்படுவதற்கு
ஆதரவளித்த அனைவருக்கும்
என் மனமார்ந்த நன்றி!

எனது வெற்றிக்காக உழைத்த
எனது குடும்பத்தினர்,
தொண்டர்கள்,
வாக்காளப் பெருமக்கள்,
நண்பர்கள் மற்றும் ஊடகங்கள்
மற்றும் பத்திரிகை ஆசிரியர்கள்
அனைவரும் எனது
மனமார்ந்த நன்றியைத்
தெரிவித்துக்கொள்கின்றேன்.



**Logan Kanapathi**

**MPP Markham — Thornhill**

**Tel: 905-305-1935**

**logan.kanapathico@pc.ola.org**

Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற

# KANAGAAMBIKAI
## Pawn Brokers





30
வருட சேவைகள்

வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு இணங்க புதிய கிளை உதயம்!

# கனகாம்பிகை

உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த வட்டி வீதத்தில் தங்க நகை அடவு

நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய

ஒரே கூரையின் கீழ்

உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கனகம்பிகைக்கு வாங்க...

**Pawn Bank Inc.™**
Your Satisfaction is Our Success

(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2

416 269 7198

(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2

416 754 7198




# திசை காட்டியினுள் திசை மாறும் எம்.பி.க்கள்

***"பாராளுமன்றத்தில் ஜே.வி.பி. தேசிய மக்கள் சக்தி கூட்டணிக்கு 159 எம்.பி.க்கள் உள்ளனர். இவர்களில் 107 பேர் தேசிய மக்கள் சக்தியையும் 52 பேர் ஜே.வி.பியையும் சேர்ந்தவர்கள். இதில் தேசிய மக்கள் சக்தியை சேர்ந்த 107 எம்.பி.க்களில் பலர் கலாநிதி, பேராசிரியர் பட்டங்களை கொண்டவர்கள். அதே போல் பெரிய நிறுவனங்கள் மற்றும் உயர் பதவிகளை வகித்து அதிக சலுகைகள், அதிக சம்பளத்துடன் பணியாற்றிய நிலையில் தற்போது தங்களுடைய எம்.பி. பதவிக்காக அவற்றை கைவிட்டுள்ளதுடன் எம்.பி.க்களுக்கு கிடைக்கும் சம்பளம், விசேட கொடுப்பனவுகள்,சலுகைகளையும் கட்சிக்கு தாரை வார்க்க வேண்டியேற்பட்டுள்ளதால் விரக்தியடைந்து சிலர் எம்.பி. பதவிகளிலிருந்து விலகுவது தொடர்பில் சிந்திக்கத் தொடங்கியுள்ளனர்."***

**- கே. பாலா ----**

**ஜ**னாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசு ஆட்சிபீடம் ஏறிய சில மாதங்களுக்குள்ளேயே மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை, ஏற்படுத்திய எதிர்பார்ப்புக்களை நிறைவேற்ற எந்த வித நடவடிக்கைகளையும் எடுக்காததால் கட்சிக்கு வெளியே கடும் விமர்சனங்களையும் நெருக்கடிகளையும் எதிர்கொண்டுவரும் நிலையில் தேர்தல் காலத்தில் தமது கட்சி தொடர்பில் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றியதால் கட்சிக்குள்ளும் முரண்பாடுகளையும் எதிர்ப்புக்களையும் எதிர் கொண்டுள்ளதுடன் "புது மாப்பிள்ளைகள்" போல் அமைச்சர்கள் சிலர் செய்யும் அலப்பறைகள், அனுபவமற்ற பேச்சுக்கள், செயற்பாடுகளினாலும் அநுரகுமார அரசு கடும் கிண்டல் கேலிகளுக்கும் உள்ளாகி வருகின்றது.

தற்போது ஆட்சிபீடம் ஏறியுள்ள தேசிய மக்கள் சக்தி அரசின் அமைச்சர்கள் உள்ளிட்ட பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான அனைத்து சலுகைகளும் ஏற்கனவே தேர்தல்காலத்தில் மக்களுக்கு வழங்கபட்ட வாக்குறுதிகளுக்கமைய இல்லாமலாக்கப்பட்டுள்ளமையால் ஏற்பட்டுள்ள அதிருப்தியில் 15 தேசிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்களது பதவியை விட்டு செல்வதற்கு தீர்மானித்துள்ளதாக தெரியவருகின்றது. ஜே.வி.பி. மற்றும் தேசிய மக்கள் சக்திக்கிடையே சமீப காலங்களாக ஏற்பட்டுள்ள நெருக்கடிகளுக்கு மத்தியில், இவ்விடயம் ஜே.வி.பி.யின் அரசியல் தலைமைக்குழுவுக்கும் தேசியமக்கள் சக்தியின் தலைமைப்பீடத்திற்கும் நெருக்கடியை, குழப்பத்தை முரண்பாட்டை, பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

பாராளுமன்றத்தில் மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) தேசிய மக்கள் சக்தி கூட்டணிக்கு (என்.பி.பி.) 159 ஆசனங்கள் கிடைக்கப் பெற்றுள்ள நிலையில், இவற்றில் 107 பேர் தேசிய மக்கள் சக்தியையும் 52 பேர் நேரடியாக ஜே.வி. பியையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர். எனினும் தேசிய மக்கள் சக்தியை பிரதிநிதித்துவப்படுத்தும் 107 பாராளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பான்மையானவர்கள் கலாநிதி பட்டம் மற்றும் பேராசிரியர் பட்டங்களை வகிப்பவர்கள். அதே போல் பெரிய நிறுவனங்கள் மற்றும் நிறுவனங்களில் உயர் பதவிகளை வகித்து அதிக சலுகைகள் மற்றும் அதிக சம்பளத்துடன் பணியாற்றிய நிலையில் தற்போது தங்களுடைய பாராளுமன்ற உறுப்புரிமைக்காக அவற்றை கைவிட்டுள்ளனர்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தங்களது பாராளுமன்ற உறுப்பினர்கள் சம்பளம், சலுகைகள், வாகனங்கள், எரிபொருள், ஊழியர்கள் போன்றவற்றைப் பெற மாட்டார்கள் என தேர்தல் காலத்தில் மக்களுக்கு வாக்குறுதியளித்துள்ளமையால், அவர்கள் இப்போது அதைப் பெற முடியாது சிரமப்படுகின்றார்கள். முழுநேர ஜே.வி.பி உறுப்பினர்கள் அத்தகைய சலுகைகள் இல்லாமல் வாழ முடிந்தாலும், உயர்மட்ட சம்பளம், வேலைகள் மற்றும் சலுகைகளை ஒதுக்கி வைத்துவிட்டு பாராளுமன்றத்திற்கு வந்த ஒரு குழுவினருக்கு இது இப்போது ஒரு பெரிய பிரச்சினையாக மாறியுள்ளது.

அதுமட்டுமல்ல தேசிய மக்கள் சக்தி அரசின் ஜனாதிபதி பிரதமர், அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களின் சம்பளங்கள் கூட ஜே.வி.பி. கட்சியின் கணக்கிற்கே செல்கின்றன. உதாரணமாக ஒரு பாராளுமன்ற உறுப்பினருக்கு அடிப்படை சம்பளமாக 54500 ரூபாவும் பிரதி அமைச்சர்களுக்கு 65000 ரூபாவும் அமைச்சர்களுக்கு 85000 ரூபாவும் என நிர்ணயிக்கப்பட்டுள்ளபோதும் அவர்களுக்கான விசேட கொடுப்பனவுகளை உள்ளடக்கி ஒவ்வொருவரும் 3 இலட்சம் ரூபாமுதல் 4 இலட்சம் ரூபா வரை பெற்று வந்த நிலையில் இவர்களின் அடிப்படைச் சம்பளம் மட்டுமே பாராளுமன்ற உறுப்பினர்கள், பிரதி அமைச்சர்கள், அமைச்சர்களுக்கு வழங்கப்படுவதுடன் மிகுதி பெரும் தொகையான கொடுப்பனவுகள் ஜே.வி.பி. கட்சியின் கணக்கிற்கே செல்கின்றன.

இதற்கமைய பாராளுமன்றத்தில் மக்கள் விடுதலை முன்னணி (ஜே .வி.பி.) தேசிய மக்கள் சக்தி கூட்டணிக்கு (என்.பி.பி.) 159 பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ள நிலையில் ஒரு மாதத்தில் மட்டும் 4 கோடி ரூபாவுக்கு மேல் ஜே.வி.பி. கட்சியின் கணக்கிற்கே செல்வதால் ஜே.வி.பி. பணக்கார கட்சியாக விஸ்வரூபமெடுத்து வருகின்றது. பாராளுமன்ற உறுப்பினர்களின் சம்பளம், விசேட கொடுப்பனவுகளை மக்கள் சேவைக்கு, அபிவிருத்திக்கு வழங்காது ஜே.வி.பி. கட்சியின் பணமாக்கி வருவது ஜே.வி.பி.-தேசியமக்கள் சக்தி கூட்டுக்குள் முரண்பாடுகளை, வெறுப்புக்களை ஏற்படுத்தியுள்ளதுடன் மக்கள் மத்தியிலும் விவாதங்களையும் விமர்சனங்களையும் ஏற்படுத்தி வருகின்றது.

இவ்வாறான நிலையில்தான் சம்பளம், வாகனங்கள், எரிபொருள் மற்றும் சிறப்புரிமைகள் உள்ளிட்ட சலுகைகள் இல்லாமல் ஐந்து ஆண்டுகள் பாராளுமன்ற உறுப்பினர்களாக தொடர்ந்து பதவி வகிப்பதா அல்லது பாராளுமன்றத்தை விட்டு வெளியேறி, தங்களுடைய முன்னைய பணியையே தொடர்வதா என்பது குறித்து அவர்கள் தற்போது மதிப்பீடு செய்து வருகின்றனர். தற்போது அந்த விவாதம் உச்சத்தை எட்டியுள்ளமையால் விரைவில் ஒரு குழுவினர் தேசிய மக்கள் சக்தி அரசிலிருந்து வெளியேறுவதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன. இவ்வாறான நிலையை எதிர்கொள்ள மறுபுறும் தங்களது பதவிகளை இராஜிநாமா செய்யும் பாராளுமன்ற உறுப்பினர் பதவிகளுக்கு முழுநேர ஜே.வி.பி உறுப்பினர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதுடன், அதன் மூலம் தற்போது 52 ஆக இருக்கும் முழுநேர ஜே.வி.பி. பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை மேலும் அதிகரிக்கும் நிலையும் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு தேசியமக்கள் சக்தியின் திசைகாட்டியினுள் எம்.பி.க்கள் சிலர் திசைமாறத் தொடங்கும் சூழ்நிலை ஏற்பட்டுள்ள நிலையில் இலங்கையில் அரிசித் தட்டுப்பாடும் தேங்காய் விலையும் நாட்டையும் மக்களையும் வதைப்பதுடன் அது தற்போதைய அரசியலிலும் தாக்கம் செலுத்தி, எதிர்க்கட்சிகளின் பிரசார ஆயுதங்களாகி அநுரகுமார அரசை பாடாய்படுத்தத் தொடங்கியுள்ளது. இதனால் திணறும் ஆட்சியாளர்களான ஜனாதிபதி மற்றும் அமைச்சர்கள் அரிசி, தேங்காய் தட்டுப்பாடுகளுக்கு கூறும் "விதித்தரமான" காரணங்கள் அநுரகுமார அரசின் ஆற்றலையும் "கல்விமான்கள்" நிறைந்த அரசு என்ற பெருமையையும் கேள்விக்குட்படுத்தியுள்ளதுடன் கேலிக்கும் உள்ளாக்கி வருகின்றது.

நாட்டில் ஏற்பட்டுள்ள அரிசித்தட்டுப்பாட்டுக்கு வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அமைச்சர் வசந்த சமரசிங்க "2024 ஆம் ஆண்டில் முந்தைய அரசாங்கம் செய்த சில முட்டாள்தனமான செயல்களால் தான் இன்று சிவப்பு அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. கடந்த ஜனாதிபதி தேர்தலுக்கு முன்பு 20 கிலோ சிவப்பு அரிசி மக்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டது. சிவப்பு அரிசி சாப்பிடாத மக்களுக்கு சிவப்பு அரிசி வழங்கப்பட்டால், அரிசி பற்றாக்குறை ஏற்படும் என சிந்தித்திருக்க வேண்டும். அப்போது, 20 கிலோ சிவப்பு அரிசியை எடுத்து, வெள்ளை அரிசியை சமைத்து சாப்பிடுபவர்களுக்கும் கொடுத்து, அதையும் சாப்பிடச் சொன்னார்கள். அதனால்தான் சிவப்பு அரிசி பற்றாக்குறை ஏற்பட்டது என்று காரணம் கூறியுள்ளார்.

அதுமட்டுமல்லாது கோழிகளுக்கு தீவனமாக அரிசியையும் பலர் பாவிப்பதும் தட்டுப்பாடுகளுக்கு காரணம். அரிசியை கோழிகள் அதிகமாக உண்பதனால்தான் அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதுடன் கோழிகளின் முட்டையின் மஞ்சள் கருவும் வெள்ளைக் கருவாக மாறியுள்ளதாகவும் அவர் உதாரணமும் கூறுகின்றார். இதேவேளை அரிசித்தட்டுப்பாட்டுக்கு ஒரு கையொப்பத்தில் தீர்வு காண முடியும் என அரசைபொறுப்பேற்க முன்னர் கூறியிருந்த தேசியமக்கள் சக்தியின் தலைவர்களில் ஒருவரும் தற்போதைய அமைச்சருமான சுனில் ஹந்துன்னெத்தி இப்போது நாட்டில் நிலவி வரும் அரிசித் தட்டுப்பாட்டு பிரச்சினைக்கு தீர்வு காண்பது சுலபமான காரியம் அல்ல எனக் கூறுகின்றார். ஒரு கையொப்பத்தின் மூலம்அரிசித் தட்டுப்பாட்டுக்கு தீர்வு காண முடியும் என ஒரு பேச்சுக்கே தாம் கூறியதாகவும் எனினும் இந்த பிரச்சினைக்கு தீர்வு காண்பது சவால் மிக்கது எனவும் தற்பொழுது குறிப்பிட்டுள்ளார்.

இதேபோன்றுநாட்டில் ஏற்பட்டுள்ள தேங்காய் தட்டுப்பாட்டுக்கும் கடுமையான விலையேற்றத்துக்கு மக்கள் வீடுகளில் "தேங்காய்ப்பால்" பிழிவதும் பால்சொதி "வைப்பதும்" "தேங்காய் சம்பல்" செய்வதும்தான் காரணமென கைத்தொழில் மற்றும் தொழில்முனைவோர் மேம்பாட்டு பிரதி அமைச்சர் சதுரங்க அபேசிங்க தெரிவித்து மக்களின் கிண்டலுக்கும் விசனத்துக்கும் ஆளாகியுள்ளார். நாட்டில்நாம் இவ்வளவு காலமும் "பால்சொதி"யும் "தேங்காய் சம்பலும்" சாப்பிடாமலா இருந்தோம். திடீரென சாப்பிடத்தொடங்கியதால்தான் இவற்றுக்கு தட்டுப்பாடும் விலை அதிகரிப்பும் ஏற்பட்டதாக காரணம் கூறும் பிரதி அமைச்சர் சந்திரமண்டலத்திலிருந்தா இலங்கை வந்துள்ளார் எனவும் மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

இது போதாதென்று இலங்கையில் பயிர் செய்கைகளுக்கு சேதம் விளைவிக்கும் வன மிருகங்களை கணிப்பிடும் நடவடிக்கையை 5 நிமிடங்களில் நடத்த அரசாங்கம் எடுத்துள்ள தீர்மானத்தை பல்வேறு தரப்பினரும் விமர்சித்து கிண்டலடித்து வருகின்றனர். நாடு முழுவதும் உள்ள கிராம சேவையாளர் பிரிவுகளில் இந்த நடவடிக்கை எதிர்வரும் 15ஆம் திகதி இடம்பெறும் "குரங்கு, மர அணில், மயில் போன்றவற்றை கணக்கெடுப்பதற்காக ஐந்து நிமிடங்கள் வழங்கப்படும். கிராம சேவையாளர் பிரிவுகளிலுள்ள அனைத்து அதிகாரிகளும் இந்த நடவடிக்கைகளில் தொடர்புப்படுவார்கள். ஐந்து நிமிடங்களுக்குள் தமது தோட்டத்தில் எத்தனை குரங்குகள் இருந்தன, எத்தனை மர அணில்கள் இருந்தன, எத்தனை மயில்கள் இருந்தன, வேறு மிருகங்கள் இருந்தனவா என்பதை தோட்ட உரிமையாளர்கள் கணிப்பிட வேண்டும். இதற்காக ஐந்து நிமிடங்கள் வழங்கப்படும். என விவசாய மற்றும் மிருக வன பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன தெரிவித்துள்ளமை அநுர அரசை பலரும் கிண்டலடிக்க காரணமாகியுள்ளது.

இவ்வாறு படித்து பட்டம் பெற்றாலும் ஆட்சி செய்த அனுபவமின்றி அமைச்சர்கள் முட்டாள்கள் போன்று அல்லது மக்களை முட்டாள்களாக நினைத்து கருத்துக்களை கூறி அநுரகுமார அரசின் "கல்விமான்கள் அதிகம் உள்ள அரசு" என்ற விம்பத்தை உடைத்து "அரசியல் கோமாளிகள்" உள்ள அரசு என்ற விமர்சனத்தை உருவாக்கிவரும் நிலையில், சிறப்பு சலுகைகளை அனுபவிக்க மாட்டோம், வாகன அனுமதிக்கான பெர்மிட் பெற மாட்டோம், ஆடம்பர செலவுகளை செய்ய மாட்டோம், எமது சம்பளங்களை, விசேடகொடுப்பனவுகளை கட்சிக்கே வழங்குவோம் எனத் தேர்தல் காலத்தில் வெற்றி பெறுவதற்காக தெரியாத்தனமாக கொடுத்த வாக்குறுதிகளினால் தற்போது அநுரகுமார அரசிலுள்ள சில அமைச்சர்கள், எம்.பி.க்கள் திசைகாட்டியின் திசைக்கு மாறாக அரசிலிருந்து விலகும் முடிவுக்கு வந்துள்ளமையும் அநுரகுமார அரசுக்கு பெரும் உள்ளக நெருக்கடிகளை ஏற்படுத்தியுள்ளது.

# தமது மக்கள் நலனுக்காக தமிழ்த்தேசிய கட்சிகள் ஒன்றுபடாவிடின் தமிழ்த்தேசிய அரசியல் களம் சீரழியும்

## அனைத்துலக தமிழர் பேரவையின் தலைவர் நிமல் விநாயகமூர்த்தி எச்சரிக்கை

- (நேர்காணல் - நா.தனுஜா) -



இலங்கையின் தமிழ்த்தேசிய அரசியல் தற்போது சீரழிந்த நிலையில் இருக்கிறது. தமிழ்த்தேசிய அரசியல் பரப்பில் நிலவும் பிளவுகளே அதற்குப் பிரதான காரணமாகும். தமிழ் மக்கள் இன்னமும் தமிழ்த்தேசிய அரசியலில் ஈடுபாட்டோடு தான் இருக்கிறார்கள். எனவே எமது சமூகத்தின் நலனைக் கருத்திற்கொண்டு அனைத்துத் தமிழ்த்தேசிய அரசியல் கட்சிகளும் ஏதோவொரு வகையில் ஒன்றுபட்டுத்தான் ஆகவேண்டும். மாறாக அக்கட்சிகள் பிளவுபட்டு நின்று தேர்தல்களில் போட்டியிடும் பட்சத்தில், தமிழ்த்தேசிய அரசியல் மிகமோசமான நிலைக்குத் தள்ளப்படும் என புலம்பெயர் தமிழ்த்தேசிய செயற்பாட்டாளரும், கனடாவைத் தளமாகக்கொண்டு புதிதாக ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் அனைத்துல தமிழர் பேரவையின் இடைக்கால நிர்வாக சபையின் தலைவருமான நிமல் விநாயகமூர்த்தி தெரிவித்தார்.

அண்மையில் அவர் இலங்கைக்கு மேற்கொண்ட விஜயத்தின் போது வீரகேசரி பத்திரிகையின் ஆசிரியபீடத்தின் சார்பில் செய்தியாளர் நா. தனுஜா அவரை நேர்காணல் செய்தார். பத்திரிகையின் பிரதம ஆசிரியர் கஜன் அவர்களது ஏற்பாட்டில் இந்த நேர்காணல் இடம்பெற்றது.

சுமார் 15 வருடங்களுக்கும் மேலாக புலம்பெயர் தமிழ்த்தேசிய செயற்பாடுகளில் ஈடுபட்டுவரும் நிமல் விநாயகமூர்த்தியும், மேலும் பல புலம்பெயர் தமிழர்களும் இணைந்து கனடாவைத் தளமாகக்கொண்டு இயங்கக்கூடியவகையில் “அனைத்துலக தமிழர் பேரவை” எனும் புதிய புலம்பெயர் தமிழர் அமைப்பை உருவாக்கியிருக்கிறார்கள். அதனையடுத்து இலங்கையில் வட, கிழக்கு மாகாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளுடனும், சிவில் அமைப்புக்களுடனும், ஏனைய சம்பந்தப்பட்ட தரப்பினருடனும் சந்திப்புக்களை நடத்தும் நோக்கில் இலங்கைக்கு சென்றிருந்த நிமல் விநாயகமூர்த்தி, “வீரகேசரி” வாரவெளியீட்டுக்கு வழங்கிய பிரத்தியேக நேர்காணலிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவருடனான நேர்காணலின் முழுமையான வடிவம் வருமாறு:

**கேள்வி: நீங்கள் இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து, பிறிதொரு நாட்டில் உங்களது தமிழ்த்தேசிய செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டமைக்கு என்ன காரணம்?**

**பதில்:** ஒரு குறிப்பிட்டகால இடைவெளியின் பின்னர் இலங்கைக்குள்ளேயே தமிழ்த்தேசிய அரசியலைப் பேசக்கூடிய சந்தர்ப்பம் உருவாகியிருக்கிறது. இருப்பினும் 2009 ஆம் ஆண்டு தமிழர்கள் ஒரு பேரழிவைச் சந்தித்தன் பின்னர், புலம்பெயர் தேசங்களிலிருந்து தமிழ்த்தேசிய செயற்பாடுகளைத் தீவிரமாக முன்னெடுக்கவேண்டிய அவசியம் காணப்பட்டது. அதற்கமைய புலம்பெயர் தமிழர் அமைப்புக்களால் தமிழ்த்தேசிய செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வந்தன. ஆனால் தற்போது களமும், புலமும் இணைந்த செயற்பாடுகளைத்தான் முன்னெடுத்துவருகிறோம். 2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவுக்குக்கொண்டுவரப்பட்டு 15 வருடங்கள் கடந்திருக்கும் நிலையில், ஈழத்தில் வாழும் தமிழ் மக்களுக்கு இன்னமும் ஏற்றுக்கொள்ளத்தக்க அரசியல் தீர்வோ அல்லது சுதந்திரமோ கிடைக்கவில்லை என்ற விசனத்துடன் தமிழர்களுக்கான சுயநிர்ணய உரிமையை உறுதிசெய்யும் நோக்குடன் நாம் புலம்பெயர் தேசங்களிலிருந்து செயற்பட்டுவருகிறோம்.

**கேள்வி: மிகநீண்டகாலமாக ஏனைய புலம்பெயர் தமிழர் அமைப்புக்களுடன் இணைந்து செயலாற்றிவந்த நீங்கள், தற்போது புதிதாக அனைத்துலக தமிழர் பேரவை எனும் அமைப்பை உருவாக்கியது ஏன்?**

**பதில்:** 2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதன் பின்னர் புலம்பெயர் தேசங்களில் ஒரு நம்பிக்கை நட்சத்திரமாக உருவாக்கப்பட்டது தான் நாடு கடந்த தமிழீழ அரசாங்கம். புலம்பெயர் தேசங்களிலிருந்து தமிழ்த்தேசிய அரசியலை முன்னெடுத்துச்செல்ல வேண்டும் என்ற எண்ணப்பாடு எனக்கும் இருந்ததன் காரணமாக, நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் உருவாக்கம் முதல் அதனுடனிருந்து தொடர்ந்து செயற்பட்டுவந்தேன். இருப்பினும் தவிர்க்கமுடியாத சில காரணங்களினால் கடைசியாக நடைபெற்ற தேர்தலில் பங்கேற்பதற்கான வாய்ப்பு எனக்கும், என்சார்ந்தவர்களுக்கும் நிராகரிக்கப்பட்டிருந்தது. அதுகுறித்து நாடு கடந்த தமிழீழ அரசாங்க நிர்வாகத்திடம் முறைப்பாடளித்திருந்த போதிலும், இதுவரை அதற்குரிய தீர்வு எதுவும் கிடைக்கவில்லை. எதுஎவ்வாறெனினும், இன்னமும் புலம்பெயர் தேசங்களில் தமிழ்த்தேசிய செயற்பாடுகளுக்கான தேவையும், இடைவெளியும் இருப்பதனால், எம்மைப்போன்ற ஒரே சிந்தனையுடைய தரப்பினருடன் நடாத்திய கலந்துரையாடல்களை அடுத்து புதியதொரு அமைப்பை உருவாக்க வேண்டும் என்ற தீர்மானத்துக்கு எந்தோம். அதனையடுத்து நானும், ஏனைய நால்வருமாக ஐவர் கொண்ட ஸ்தாபகக்குழுவொன்றை உருவாக்கினோம். நாங்கள் இணைந்து கனடா, அமெரிக்கா, ஜேர்மனி, பிரான்ஸ், அவுஸ்திரேலியா, சுவிஸ்லாந்து போன்ற புலம்பெயர் தமிழர்கள் செறிந்துவாழும் நாடுகளிலிருந்து 50 ஸ்தாபக உறுப்பினர்களைத் தெரிவுசெய்து இணைத்துக்கொண்டோம். பின்னர் ஸ்தாபகக்குழு உறுப்பினர்கள் ஐவரும், ஸ்தாபக உறுப்பினர்கள் 50 பேரும் இணைந்து 21 பேர் கொண்ட இடைக்கால நிர்வாக சபையைத் தெரிவுசெய்தோம். அதன் தலைவராக நான் செயற்பட்டுவருகிறேன். அதன்படி அனைத்துல தமிழர் பேரவையின் யாப்பைத் தயாரிக்கும் பொறுப்பு இந்த இடைக்கால நிர்வாக சபையிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. எனவே யாப்பு தயாரிக்கப்பட்டு, தேர்தல் ஊடாகத் தெரிவுசெய்யப்படும் நிர்வாக சபையே நிரந்தரமானதாக இருக்கும்.

கடந்த டிசம்பர் மாதம் 8 ஆம் திகதி ஸ்தாபிக்கப்பட்ட அனைத்துல தமிழர் பேரவையின் பிரதான நோக்கம் ஈழத்தமிழர்களை வலுவூட்டுவதேயாகும். அதன்படி ஈழத்தமிழர்களை பொருளாதார, சமூக மற்றும் அரசியல் ரீதியில் வலுவூட்டும் அதேவேளை, கலாசார ரீதியிலான நிலைத்திருப்பை உறுதிசெய்யவேண்டிய அரசியல் காணப்படுகிறது. அதேபோன்று நாம் அரசியல் அடிப்படையில் ஈழத்தமிழர்கள் ஒரு தேசிய இனம், வட-கிழக்கு மாகாணங்கள் ஈழத்தமிழர்களின் தேசம், தமிழர்கள் இனவழிப்புக்கு உட்படுத்தப்பட்ட ஒரு இனம் எனும் மூன்று கோட்பாடுகளை முன்னிலைப்படுத்துகிறோம். இம்மூன்று கோட்பாடுகளையும் ஏற்றுக்கொள்ளும் அரசியல் கட்சிகளுடனும், அமைப்புக்களுடன் இணைந்து செயற்படுவோம்.

**கேள்வி: இலங்கை அரசாங்கத்துடனும், உள்நாட்டில் இயங்கிவரும் சிவில் அமைப்புக்களுடனும் இணைந்து செயற்படுவீர்களா?**

**பதில்:** இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுவது பற்றி நாங்கள் தீர்மானிக்கவில்லை. ஏனெனில் அதற்கான தேவை இருப்பதாக நான் கருதவில்லை. இலங்கை அரசாங்கத்துடன் பேசவேண்டுமாயின், அதற்கென உள்நாட்டில் தமிழ் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட தமிழ்க்கட்சிகளும், அவற்றின் பிரதிநிதிகளும் இருக்கிறார்கள். இருப்பினும் அரசாங்கத்தின் செயற்பாடுகள் ஈழத்தமிழர்களின் நலன்களைப் புறந்தள்ளும் வகையிலும், அவற்றுக்கு விரோதமானவையாகவும் அமையும் பட்சத்தில் அப்போது எமது கருத்துக்களைக் கூறவும், விமர்சனங்களை முன்வைக்கவும் தயாராக இருக்கிறோம்.

ஆனால் எனது தற்போதைய இலங்கை விஜயத்தின்போது வட, கிழக்கு மாகாணங்களைத் தளமாகக்கொண்டு இயங்கிவரும் பல்வேறு சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகளையும், அரசியல் தலைவர்களையும் சந்தித்துக் கலந்துரையாடியிருக்கிறேன். அநேகமான சந்திப்புக்கள் ஆக்கபூர்வமானவையாக அமைந்திருந்ததுடன், நம்பிக்கையையும் தோற்றுவித்திருக்கின்றன. எனவே வட, கிழக்கு மாகாணங்களை தமிழ் மக்கள் வாழ்வதற்கு ஏற்றவாறு எவ்வாறு மாற்றியமைக்கமுடியும் என்பது பற்றி சந்திக்கிறோம். அம்மாகாணங்களை நாம் விரும்பியவாறு அபிவிருத்தி செய்வதற்கு அரசாங்கம் ஒத்துழைக்கும் என நான் எதிர்பார்க்கவில்லை. இருப்பினும் நாம் ஆயுதப்போராட்டம் இடம்பெற்ற காலப்பகுதியில், அதற்குச் சமாந்தரமாக எமது மக்களின் பொருளாதாரத்தையும் அபிவிருத்தி செய்திருந்தோம். ஆகையினால் பொருத்தமான வழிமுறைகளின் ஊடாக எமது மக்களின் வாழ்க்கைத்தரத்தை எவ்வாறு மேம்படுத்தமுடியும் என்பது பற்றி விரைவில் ஆராய்வோம்.

**கேள்வி: இருப்பினும் புலம்பெயர் தமிழர் அமைப்புக்கள் புலம்பெயர் தேசங்களில் இருந்தவாறு அவற்றின் தனிப்பட்ட நலன்களுக்காக தமிழ்த்தேசிய அரசியலைப் பயன்படுத்துவதாக இலங்கையில் வாழும் ஒரு சாராரால் முன்வைக்கப்படும் விமர்சனத்தை எப்படிப் பார்க்கிறீர்கள்?**

**பதில்:** “புலம்பெயர் மக்கள் அவர்களது வேலைகளைப் பார்த்துக்கொண்டிருக்கவேண்டும்” என்று கூறுவதும் ஒரு வகையான பிரதேசவாதம் தான். இது வெறுமனே ஒரு தர்க்கத்தில் தம்மைத் தற்பாதுகாத்துக்கொள்வதற்காகக் கூறப்படும் விடயமே தவிர, அக்கருத்தில் எவ்வித உண்மையும் இல்லை. புலம்பெயர் தமிழர்கள் இலங்கையின் தமிழ்த்தேசிய அரசியலில் தலையிடக்கூடாது எனப் பெரும்பான்மையானோர் கூறவில்லை. மாறாக ஒருசிலர் தம்மை முன்னிலைப்படுத்துவதற்காகவும், தமது கருத்துக்களை மேலோங்கச் செய்வதற்காகவும் அவ்வாறு கூறுகின்றனர். யுத்தம் முடிவுக்குக்கொண்டுவரப்பட்டதன் பின்னரான காலப்பகுதியில் புலம்பெயர் தமிழர் அமைப்புக்களின் காத்திரமான செயற்பாடுகளின் விளைவாகவே இன்றளவிலே வட, கிழக்கு மாகாணங்களின் பெரும்பாலான பகுதிகள் எழுந்துநிற்கின்றன. எனவே இவ்வாறான கருத்துக்கள் தொடர்பில் அதிகம் கவனம் செலுத்தாமல், அவற்றுக்கு அப்பால் செயற்படுவதன் ஊடாகவே எமது பிரதேசங்களை அபிவிருத்திசெய்யமுடியும்.

**கேள்வி: இலங்கையில் தமிழ்த்தேசிய அரசியலின் சமகாலப்போக்கினை அவதானித்துவருகிறீர்களா?**

**பதில்:** இலங்கையின் தமிழ்த்தேசிய அரசியல் சீரழிந்த நிலையில் இருக்கிறது என்றுகூடச் சொல்லலாம். தமிழ்த்தேசிய அரசியல் பரப்பில் நிலவும் பிளவுகளே அதற்குரிய பிரதான காரணமாகும். தமிழ் மக்கள் இன்னமும் தமிழ்த்தேசிய அரசியலில் ஈடுபாட்டோடு தான் இருக்கிறார்கள். அண்மையில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் தமிழ் மக்களில் கணிசமானோர் தமிழ்த்தேசியத்தை முன்னிறுத்தி வாக்களித்திருப்பதுடன், மற்றொரு பகுதியினர் யாருக்கும் வாக்களிக்காமல் தவிர்த்திருக்கிறார்கள். தமிழ்த்தேசிய அரசியல் கோட்பாட்டின் மீதான அதிருப்தியன்றி, தமிழ்த்தேசிய அரசியலை முன்னெடுப்பவர்கள் மீதிருக்கும் அதிப்தியின் விளைவாகவே இம்முறை பலர் வாக்களிக்கவில்லை.

தற்போது நாம் முன்னெப்போதுமில்லாத வகையில் பல கட்சிகளாகவும், குழுக்களாகவும் பிரிந்திருக்கிறோம். இதற்கு முன்னைய தேர்தல்களில் வட, கிழக்கு மாகாணங்களில் இவ்வளவு சுயேட்சைக்குழுக்களோ, இவ்வளவு வேட்பாளர்களோ களமிறங்கியிருக்கவில்லை.

(தொடர்ச்சி 19 பக்கம்)

ஒற்றுமையும் ஆற்றலும் ஒருங்கிணைய உழைப்போம்

# புங்குடுதீவு பழைய மாணவர் சங்கம் - கனடா

PUNGUDUTIVU OLD STUDENTS" ASSOCIATION - CANADA

## வருடாந்த பொதுக்கூட்டம் 2025

காலம்: 22-03-2025 Saturday 9:30AM

இடம்: Estate Banquet & Event Centre

430 Nugget Ave, Toronto, ON M1S 4A4

பொதுச்சபையினர் புதிய நிர்வாகசபையைத் தெரிவு செய்தல், கணக்கறிக்கை சமர்ப்பித்து சபையிடம் ஒப்புதல் பெறுதல், போன்ற விடயங்கள் முடிவு செய்யப்படவுள்ளன. எம்மண்ணின் எதிர்கால நலன்கள் மற்றும் மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்கான செயற்திட்டங்கள் ஆராயப்படவுள்ளன. தயவு செய்து அனைவரும் கலந்து, தங்களது ஆக்கபூர்வமான கருத்துக்களை வழங்கி சிறப்பிக்கும் வண்ணம் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

தங்கள் வருகைக்கு நன்றி!

தொடர்புகளுக்கு

647-547-0781 - posacanada@gmail.com - Pungudutivuworld.com

திரு. உதயராசா குணராசா (தலைவர்) 416-400-5993

திரு. கயிலநாதன் கோபாலபிள்ளை (செயலாளர்) 647-688-3030

திருமதி. கவிதா செந்தில் (பொருளாளர்) 416-618-3651

# வைத்தீஸ்வரன் கோயில்

# நாடி ஜோதிடம்



தற்போது இணையவழி மூலமாக பார்க்கப்படுகிறது

தங்கள் எதிர்காலம், குடும்ப வளர்ச்சி, தொழில், திருமணம் ஆகியவை பற்றி தெரிந்துகொள்ள

நாடி ஜோதிடர்

P.சம்பத் குமார்

தொடர்புக்கு

+91 90037 16919



ஸ்ரீ அகஸ்திய மஹாசிவ சூட்சம நாடி ஜோதிட நிலையம்

செண்பகவள்ளி அக்ரஹரம், தெற்குரத வீதி, வைத்தீஸ்வரன் கோயில்

கனடிய செய்திகள்
Canadian News

# ஒருவருக்கொருவர் சண்டையிடுவதற்குப் பதிலாக, உலகில் கனடாவும் அமெரிக்காவும் எமது நாடுகளை செல்வந்த நிலைக்கும், வெற்றிகரமாகவும் மாற்ற வேலை செய்ய வேண்டும்

## ஒன்ராறியோ பிரதமர் டக் ஃபோர்டு அமெரிக்காவின் செனட்டர்கள், காங்கிரஸ் உறுப்பினர்கள் மற்றும் ஆளுநர்களை வலியுறுத்துகிறார்



## Instead of fighting each other, Canada and United States should be working to make our Countries the richest, successful and more secure on this planet

***Ontario Premier Doug Ford urges United States Senators, Congresspeople and Governors***

Premier of Ontario
Premier ministre de l'Ontario

Legislative Building
Queen's Park
Toronto, Ontario
M7A 1A1

Édifice de l'Assemblée législative
Queen's Park
Toronto (Ontario)
M7A 1A1

March 4, 2025

As Premier, it's my number one job to stand up for and protect the people of Ontario. This is not a responsibility I take lightly.

Earlier today, President Donald Trump imposed unfair, unjustified and illegal tariffs on Canada. The markets are already in steep decline only hours after the tariff announcement, factory floors and assembly plants across America will start to close, putting countless Americans out of work. Prices are going to increase for hard-working American families, making Americans poorer.

I've always said, Canada and Ontario will never start a trade or tariff war with the United States. President Trump has left us no choice but to respond.

Ontario alone powers 1.5 million homes and businesses every year. If these tariffs persist or if the Trump administration moves forward with any additional tariffs, **Ontario will apply a 25 per cent surcharge on the electricity we export to New York, Michigan and Minnesota. I won't hesitate to increase this surcharge or, if necessary, shut the electricity off completely.**

This surcharge would be in addition to actions Canadian governments are already taking. The Government of Canada earlier today imposed an initial round of $30 billion in retaliatory tariffs and is preparing another $125 billion in additional tariffs. Ontario's alcohol agency, the largest buyer of alcohol in the world, is removing all U.S. products from its shelves, costing American producers $1 billion in lost revenue. We've banned all U.S. companies from participating in $30 billion in annual government procurement.

Ontario and Canada are America's largest customer and export destination. Unfortunately, we have been left with no choice but to respond with our own tariffs and charges that will make life more expensive for Americans at a time when the cost of living is at an all-time high.

Instead of fighting each other, we should be working together to make Canada and the United States the richest, most successful, safest and most secure two countries on the planet. I hope you join me in advocating for a stronger, more united future by removing tariffs from Canada.

Sincerely,

Doug Ford
Premier of Ontario

*(17 பக்கத் தொடர்ச்சி)*

இவையனைத்தும் எமக்குள் நிலவும் முரண்பாடுகளையே காண்பிக்கின்றன. எனவே எமது சமூகத்தின் நலனைக் கருத்திற்கொண்டு அனைத்துத் தமிழ்த்தேசிய கட்சிகளும் ஏதோவொரு வகையில் ஒன்றுபட்டுத்தான் ஆகவேண்டும். மாறாக தமிழ்த்தேசிய கட்சிகள் பிளவுபட்டு நின்று தேர்தல்களில் போட்டியிடும் பட்சத்தில், தமிழ்த்தேசிய அரசியல் மிகமோசமான நிலைக்குத்தான் தள்ளப்படும். இருப்பினும் இந்நிலையில் மாற்றம் ஏற்படும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

**கேள்வி: தமிழ்த்தேசிய கட்சிகளை ஒன்றுபடுத்தும் முயற்சிக்கு புலம்பெயர் தமிழர் அமைப்புக்கள் பங்களிப்புச்செய்யக்கூடிய வாய்ப்பு இருக்கிறதா?**

**பதில்:** நிச்சயமாகச் செய்யவேண்டும். நாம் அதனை இலக்காகக்கொண்ட கலந்துரையாடல்களை ஆரம்பிக்கவிருக்கிறோம். ஆனால் புலம்பெயர் தேசங்களிலும் பல்வேறு புலம்பெயர் தமிழர் அமைப்புக்கள் உருவாவதற்கு அவர்களுக்குள் இருக்கும் முரண்பாடுகள் தான் பிரதான காரணம். எனவே 2009 ஆம் ஆண்டின் பின்னர் அனைவரும் எவ்வாறு ஒன்றிணைந்து செயற்படுவது என்பதில் தமிழர்களுக்கு இருக்கும் பிரச்சினையின் விளைவாகவே நான் இதனைப் பார்க்கிறேன். ஆனால் ஏதேனுமொரு விதத்தில் அதில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான முயற்சியை நாம் முன்னெடுத்தேயாகவேண்டும்.

**கேள்வி: சர்வதேச அரங்கில் நீண்டகாலமாக தமிழர்களுக்கு ஆதரவாக இயங்கிவரும் கனடாவின் எதிர்வருங்கால தமிழர்சார் அணுகுமுறை எவ்வாறானதான இருக்கப்போகிறது?**

**பதில்:** உண்மையில் கனடா மனித உரிமைகளுக்கு வெகுவாக மதிப்பளிக்கின்ற, மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கு அவசியமான ஆதரவை வழங்கத்தயாராக இருக்கின்ற ஒரு நாடாகும். ஈழத்துக்கு அடுத்ததாக ஈழத்தமிழர்கள் செறிந்து வாழும் நாடாகவும் கனடா இருக்கிறது. எனவே கனடாவில் அரசியல் கட்சியொன்றின் தலைவராக வருவதற்குக்கூட எமது தமிழ்ச்சமூகத்தின் ஆதரவு தேவை எனும் நிலை காணப்படுகிறது. ஏனெனில் ஈழத்தமிழர்கள் எங்கிருந்தாலும், அங்குள்ள அரசியல் நீரோட்டத்துடன் தம்மை இணைத்து, அரசியல் ரீதியில் துடிப்புடன் செயற்படக்கூடிய ஒரு இனமாகும்.

இவ்வாறானதொரு பின்னணியில் எதிர்வரும் பாராளுமன்றத்தில் தேர்தலில் வெற்றியீட்டக்கூடிய சாத்தியப்பாட்டைக் கொண்டிருக்கும் தற்போதைய எதிர்க்கட்சித்தலைவர், தாம் பதவிக்கு வந்தால் இலங்கையில் இடம்பெற்ற இனவழிப்பு குறித்த விசாரணைகளை சர்வதேச குற்றவியல் நீதிப்பொறிமுறையின் ஊடாக முன்னெடுப்பதற்கு அவசியமான நகர்வுகளை மேற்கொள்வதாக ஆங்காங்கே கூறியிருக்கிறார். ஆகவே கனடாவில் தமிழர்களுக்கு சாதகமான பல்வேறு நகர்வுகள் இடம்பெற்றுவருகின்றன. இருப்பினும் நம்மை நாம் மிகவேகமாகப் பலப்படுத்திக்கொண்டு, ஒன்றிணைந்து பணியாற்றுவதன் ஊடாகவே சாதகமான தீர்வை நோக்கிப் பயணிக்கமுடியும்.





ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது!
என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'

"ஜோதிட மகரிஷி"
Dr. K. RAM.Ph.D (USA)

தொடர்புக்கு: 0091-9840160068
9940431377


# இவ்வார ராசிபலன்

**07-03-2025 வெள்ளி தொடக்கம் 13-03-2025 வியாழன் வரையும்**




**மேஷம்:** திருப்திகள் பெருகும் வாரம். திறமைகள் வெளிப்படும். பொறுப்புக்கள் கூடும். சிறப்புக்கள் சேரும். ஆன்மீக பயணம் மேற்கொள்வீர்கள். வெற்றிச்செய்தி வரும். கலைத்தொழில் திருப்பத்தை ஏற்படுத்தும். ஷேர் மார்க்கெட்டில் லாபம் அதிகரிக்கும். கட்டிடத் தொழிலில் கவனம் தேவை. முதலீடுகள் உண்டாகும். கற்பனை வளம் அதிகரிக்கும். கௌரவம் உயரும். கடன் தொல்லை தீரும். பிள்ளைகளால் பெருமை சேரும். பகையாளியின் நிலை மாறும். பெண்வழிப் பிரச்சனை முடிவுக்கு வரும். முன்னேற்றம் அதிகரிக்கும். முத்தான வாய்ப்புகள் பெருகும். மனோபயம் அகலும். மனைவியால் மருத்துவச் செலவு உண்டு. வினோதமான எண்ணங்கள் விலகும். பெற்றவர்கள் பாராட்டு கிட்டும். பிள்ளைகள் தொல்லை அதிகரிக்கும். புதிய முயற்சி பலன் தரும். புண்ணிய ஸ்தலம் செல்ல வேண்டி வரும். பழைய நண்பரால் பணவரவு உண்டு. சகோதர வகையில் சச்சரவு ஏற்படும். நட்டம் இல்லாத காலம். பட்டம் பதவி வந்து சேரும். வினைகள் அகலும். வெகுமானம் கூடும். வெளிவட்டாரப் பழக்கம் அதிகமாகும். வேலையாட்களிடம் கவனம் தேவை. வெளிநாட்டுப் பயணம் உருவாகும். பாக்கியவான்களை சந்திப்பீர்கள். கன்னிப்பெண்களுக்கு சுபச்செய்தி வரும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். அன்னதானம் நிதானத்தை அதிகப்படுத்தும். சாதனையான எண்ணங்கள் உதயமாகும். மற்றவர்களிடத்தில் மரியாதை உயரும். புதிய நண்பர்களால் தகுதி மேம்படும். வரவு திருப்தி தரும். காரிய தாமதம் ஏற்படும். பாக்கியவான்களை சந்திப்பீர்கள். வாகனத்தில் கவனம் தேவை. பழைய கடன் பஞ்சாயத்து மூலம் தீர்வுக்கு வரும். திருப்புமுனை ஏற்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சிங்கப் பெருமாள், அதிர்ஷ்ட எண்: 6,4,5,1
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: J,Q




**ரிஷபம்:** ஆளுமையான செயல்பாடுகள் அரங்கேறும் வாரம். பிரார்த்தனைகள் நிறைவேறும். பூமி வாங்கும் யோகம் உண்டு. ஏற்றுமதி தொழில் லாபம் தரும். உத்தியோகத்தில் பாராட்டுக் கிட்டும். எதிர்பார்த்த விஷயம் தாமதமாகும். பிள்ளைகளின் கல்விச்செலவு அதிகரிக்கும். உறவினர் வருகை உற்சாகம் தரும். தொல்லைகள் ஒழியும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். நினைத்த காரியம் நிறைவேறும். வளமான காலம். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். எதிர்பார்ப்புக்கள் குறையும். வழக்கு முடிவுக்கு வரும். பணியில் கண்டிப்பு அவசியம். புதிய சிந்தனை உருவாகும். சுபச்செய்திகள் வரும். பயணம் அனுகூலம் தரும். மருத்துவச் செலவு அதிகரிக்கும். தொழில் போட்டி அதிகமாகும். புதிய கடன் உருவாகும். கணவன், மனைவி அன்யோன்யம் உண்டு. ஆக்கப்பூர்வமான எண்ணம் உதயமாகும். வாகனச் செலவுகள் அதிகரிக்கும். பெற்றோர்களின் ஆதரவு அதிகரிக்கும். சுபச்செய்திகள் வரும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். டிரான்ஸ்போர்ட் தொழில் லாபம் தரும். குடும்பத்தில் மேன்மையுண்டு. பூர்வீகச் சொத்து கிடைக்கும். திருப்தி அதிகமாகும். தந்தையின் உடல்நலம் கவனம் தேவை. வியாபாரம் திருப்தி தரும். விரக்திகள் விலகும். ஆதரவு அதிகமாகும். பாதகமான சூழ்நிலை விலகும். தகுதிகள் மிகுதியாகும். சாதனைகள் ஏற்படும். சேமிக்கும் எண்ணம் ஏற்படும். முயற்சிகள் வெற்றி தரும். ஆடை, அணிகலன் சேர்க்கையுண்டு. திடீர் திருப்பம் ஏற்படும். கண்நோய் வந்து போகும். பிரபல்ய ஆசை ஏற்படும். பிள்ளைகளின் தேவை பூர்த்தியாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீகாளிகாம்பாள், அதிர்ஷ்ட எண்: 6,9,8,1
அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,N




**மிதுனம்:** வெற்றிக் கிட்டும் வாரம். அணிகலன்கள் சேரும். வெளிநாட்டுப் பயணம் உருவாகும். வீண் விரயம் தவிர்க்கவும். வியாபார விருத்தி ஏற்படும். பாக்கிகள் வசூலாகும். உத்தியோக உயர்வு கிட்டும். உறவுகளால் மதிப்பு கூடும். குடும்ப ஒற்றுமை பலப்படும். வேற்றுமைகள் விலகும். வெறுப்புக்கள் அகலும். பொறுப்புக்கள் கூடும். விருப்பங்கள் நிறைவேறும். குடும்ப மன நிறைவு உண்டாகும். ஆடம்பர நாட்டம் ஏற்படும். பயணம் தடைப்படும். வணிகத்தொழில் விரிவடையும். விவசாயிகளுக்கு ஏற்றமான காலம். பிள்ளைகளால் வெகுமானம் கூடும். பணவரவு திருப்தி தரும். பல்வலி வந்து போகும். பிராணிகளால் தொல்லை ஏற்படும். முயற்சிகள் பலிதமாகும். பயணம் லாபம் தரும். பெருமிதமான காலம். பழைய கடன் தீரும். பொறுமையைக் கையாள வேண்டும். வாய்ப்புக்கள் வந்து சேரும். உத்தியோகத்தில் ஒற்றுமை நிலவும். வழக்குகள் சாதகமாகும். உஷ்ணம் வந்து சேரும். அச்சுத்தொழில் ஆதாயம் தரும். உடன்பிறப்புக்களால் நன்மை உண்டு. தேக ஆரோக்கியம் மிளிரும். வஸ்திர தானம் வளம் சேர்க்கும். இனிப்பானச் செய்தி வரும். போட்டிகள் மறையும். காதல் கை கூடும். விவாக முயற்சி வெற்றித் தரும். நிர்வாகத்தில் நிதானம் தேவை. வியாபாரத்தில் விருத்தி ஏற்படும். உறவினர்களால் அனுகூலம் உண்டு. நற்காரியங்களில் ஈடுபடுவீர்கள். குடும்ப ஒற்றுமை அதிகமாகும். நிதி நிலைமை சீராகும். பணிவான பேச்சுக்கள் தேவை. நல்லோர்களின் நட்பு கிட்டும். போட்டிகள் குறையும். விடாமுயற்சி அவசியம்.

வழிபட வேண்டிய தெய்வம்: மீனாட்சி அம்மன், அதிர்ஷ்ட எண்: 5,2,4,9
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,F




**கடகம்:** சிக்கனத்தை கடைப்பிடிக்கும் வாரம். வி.ஐ.பியின் தொடர்பு கிடைக்கும். கணவன் அன்பு அதிகரிக்கும். கல்வி ஈடுபாடு கூடும். உடல்சோர்வு ஏற்படும். அலைச்சல் அதிகமாகும். பணப்பிரச்சனை தீரும். வியாபாரம் சிறக்கும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். இடமாற்றம் ஏற்படும். நிதிப்பற்றாக்குறை நீங்கும். புதிய எண்ணம் நிறைவேறும். வழக்கு சாதகமாகும். சிறப்புக்கள் சேரும். வெறுப்புக்கள் அகலும். சோம்பல் அதிகரிக்கும். திடீர் பயணம் ஏற்படும். எதிர்ப்புக்கள் விலகும். ஆலோசனை பலன் தரும். தொல்லைகள் ஒழியும். பூமி லாபம் உண்டு. பிள்ளைகளால் தொல்லை உண்டு. பதவி வாய்ப்பு வரும். பாதகம் விலகும். பங்குத்தொழில் கவனம் தேவை. கட்டிடத்தொழில் லாபம் தரும். கல்வியில் ஆர்வம் கூடும். வருமானம் வரும். குதூகலம் சேரும். வழிபாடு மாற்றம் தரும். புத்திரர்களால் மேன்மை உண்டு. குடும்ப வளம் கூடும். அடுத்தவர் தலையீடு தவிர்க்கவும். ஆடம்பர எண்ணம் மேலோங்கும். முயற்சிகள் பலன் தரும். மங்களச் செய்தி வரும். மருத்துவச் செலவு உண்டு. பொன், பொருள் சேரும். குதூகலம் சேரும். வெளியூர் பயணம் உண்டு. நீண்ட நாள் கனவு நிறைவேறும். புதிய நட்பு உருவாகும். மற்றவர் உதவி கிட்டும். மனக்குழப்பம் தீரும். திடீர் லாபம் உண்டு. திருமண வாய்ப்பு கூடி வரும். பேச்சில் நிதானம் தேவை. ஞாபக மறதி ஏற்படும். உறவினர் வழியில் செலவுகள் அதிகரிக்கும். உத்தியோக ஈடுபாடு அதிகரிக்கும். பழையக்கடன் வசூலாகும். உடல்நலம் கவனம் தேவை. பிள்ளைவழிச் செலவு அதிகரிக்கும். ஆபரணச் சேர்க்கை ஏற்படும். மனோதைரியம் அதிகரிக்கும். நீண்ட நாள் ஆசை நிறைவேறும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஏழுமலை, அதிர்ஷ்ட எண்: 7,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: பொன்நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,Z




**சிம்மம்:** மேன்மைகளை சந்திக்கும் வாரம். மெத்தனப் போக்கு விலகும். பயணம் லாபம் தரும். கலை ஈடுபாடு அதிகரிக்கும். கௌரவம் உயரும். விருந்தினர் வருகை உண்டு. கமிஷன் தொழில் லாபம் தரும். பணவரவு உண்டு. புதிய நட்பு ஏற்படும். விவசாயம் பலன் தரும். அரசு வழி ஆதாயம் பெருகும். குடும்ப அன்யோன்யம் கூடும். நண்பர்களால் உதவி உண்டு. சுபச்செலவு அதிகரிக்கும். கடன் பிரச்சனை அகலும். கவலைகள் ஒழியும். புதிய எண்ணங்கள் உருவாகும். தகுதிகள் உயரும். தன லாபம் கூடும். வறுமைகள் ஒழியும். புகழ்ச்சி அதிகரிக்கும். விவேகம் அதிகரிக்கும். வாகன மாற்றம் உண்டு. தொழில் அபிவிருத்தி உண்டாகும். வரவுகள் திருப்தி தரும். சச்சரவுகள் அகலும். குடும்ப கௌரவம் உயரும். ஆபரணச் சேர்க்கை உண்டு. தனவரவு உண்டு. தாராளமான வருமானம் உண்டு. மனக்கசப்பு நீங்கும். நிதி நிலைமை திருப்தி தரும். புதிய வாய்ப்புக்கள் உருவாகும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். உத்தியோக உயர்வு கிட்டும். குழந்தைகளால் பெருமை சேரும். குடும்ப அன்யோன்யம் கூடும். பொருளாதார வளம் மேம்படும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். நிம்மதி பெருகும். எதிரிகள் பலம் குறையும். வழக்கு வெற்றி தரும். மனதில் உற்சாகம் கூடும். உறவினர் வருகை ஏற்படும். குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டு. சொத்துச் சேர்க்கையுண்டு. புதிய தொழில் வாய்ப்பு உருவாகும். வெளிநாட்டுப் பயணம் உண்டு. நற்காரியங்களால் கீர்த்தி பெருகும். கணவன், மனைவி சச்சரவு ஏற்படும். முன்கோபம் தவிர்க்கவும். புதிய முயற்சியில் கவனம் தேவை. மாணவர்களுக்கு உற்சாகம் கூடும். தொழில் லாபம் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அதிதேவதை, அதிர்ஷ்ட எண்: 2,6,9,4
அதிர்ஷ்ட நிறம்: வெண்பட்டு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: W,K




**கன்னி:** உழைப்பிற்கான பலன் கிடைக்கும் வாரம். பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும். பிள்ளைகளால் தொல்லை உண்டாகும். வழக்கு முடிவுக்கு வரும். மருத்துவர்களுக்கு நற்பெயர் கிட்டும். புதிய சொத்து சேரும். மாற்று இன உதவி கிட்டும். ஆடை, அணிகலன் சேரும். பெண்களுக்கு கவனம் தேவை. மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். தொழில் லாபம் கூடும். துன்பங்கள் அகலும். கலைத்துறை முன்னேற்றம் கொடுக்கும். எதிரிகள் பலம் குறையும். நல்லவர் நட்பு கிட்டும். உடல்நலத்தில் அக்கறை தேவை. பொறியியல் துறை லாபம் தரும். மாணவர்கள் திறமை பளிச்சிடும். திருமண வாய்ப்பு கூடி வரும். குடும்ப ஒற்றுமை பலப்படும். உதவிகள் கிடைக்கும். பொருளாதாரம் உயரும். உன்னதமான காலம். எதிர்பார்ப்புக்கள் குறையும். வழக்கு முடிவுக்கு வரும். தொழில் லாபம் பெருகும். பணியில் கண்டிப்பு அவசியம். நினைத்த காரியம் நிறைவேறும். தொல்லைகள் மறையும். நாவடக்கம் தேவை. தாய் வழி உறவில் கவனம் தேவை. அணிகலன் சேரும். வீண் வம்பு உருவாகும். விரயங்கள் அதிகமாகும். பெரியவர்களை அனுசரித்து செல்வது நல்லது. உறவினர்கள் உதவி செய்ய முன் வருவர். எதார்த்தமாக செயல்படவும். அலைச்சல் அதிகரிக்கும். கலைத்தொழிலில் கவனம் தேவை. மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். மனை வாங்கும் சிந்தனை உதயமாகும். பாதகமான சூழ்நிலை அகலும். பக்குவமான பேச்சு பயன் தரும். ஏற்றமும், மாற்றமும் அதிகரிக்கும். நீண்ட நாள் பிரச்சனை முடிவுக்கு வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: வினைத்தீர்க்கும் பிள்ளையார், அதிர்ஷ்ட எண்: 7,9,5,4
அதிர்ஷ்ட நிறம்: பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: B,X




**துலாம்:** வினோதமான எண்ணங்கள் பூர்த்தியாகும் வாரம். கன்னிப் பெண்களுக்கு சுபச்செய்தி வரும். கால்நடைகளால் பலன் உண்டு. ஸ்டேஷனரி தொழில் லாபம் தரும். பிள்ளைகளால் செலவு அதிகரிக்கும். மனச்சஞ்சலம் ஏற்படும். பகையாளியிடம் எச்சரிக்கை தேவை. வாகனத்தில் கவனம் தேவை. மருத்துவச் செலவு அதிகரிக்கும். மாலைநேரப் பிரார்த்தனை மன அமைதி தரும். வாழ்த்துக்கள் கிடைக்கும். வெளிவட்டாரப் பழக்கம் அதிகமாகும். வேலையாட்களிடம் கவனம் தேவை. எதிர்கால எண்ணம் நிறைவேறும். பெற்றோர்களின் பாராட்டுக் கிட்டும். புதிய நண்பர்களால் தகுதிகள் மேம்படும். வரவு திருப்தி தரும். காரிய தாமதம் ஏற்படும். யோகமான காலம். முத்தாய்ப்பான வாய்ப்புக்கள் பெருகும். பணப்பற்றாக்குறை நீங்கும். மதிப்பு உயரும். மகான்களின் சந்திப்பு கிட்டும். பெற்றோர் வழி மருத்துவச் செலவு உண்டு. கணவன், மனைவி கௌரவம் உயரும். மேலதிகாரியின் பாராட்டுக் கிட்டும். சுறுசுறுப்பு அதிகமாகும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். உத்தியோகத்தில் உற்சாகம் கூடும். கலகலப்பான செய்திகள் வந்து சேரும். வாய்ப்புக்கள் அதிகரிக்கும். ஆடம்பரத்தை விரும்புவீர்கள். வராத கடன் வந்து சேரும். வெகுமதிகள் பெருகும். அடுத்த நபரால் ஆதாயம் உண்டு. எதிர்பார்த்த தொழில் லாபம் தரும். திடீர் செலவு ஏற்படும். நன்மைகள் அதிகரிக்கும் காலம். கூட்டுத்தொழிலில் மோசடி ஏற்படும். வெற்றிகள் குவியும். சாதகமான வாய்ப்பு உருவாகும்.


வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீதேவி, அதிர்ஷ்ட எண்: 9,3,2,1
அதிர்ஷ்ட நிறம்: வெண்பட்டு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,A




**விருச்சிகம்:** பிரார்த்தனை நிறைவேறும் வாரம். பழைய பாக்கி வசூலாகும். வணிகத்தொழில் வளம் கூடும். உறவினர் வருகை உண்டு. உடல்நிலையில் கவனம் தேவை. மனைவியின் அன்பு கூடும். சாதக சூழ்நிலைகள் உருவாகும். உதவும் குணம் அதிகரிக்கும். பழையக்கடன் தீரும். புதிய நட்பு உருவாகும். பேச்சில் நிதானம் தேவை. விபரீத எண்ணம் விலகும். வாழ்த்துக்கள் கிட்டும். குளிர்பான தொழில் கவனம் தேவை. செயல் விவேகம் கூடும். உணவுத்தொழில் உயர்வு தரும். தொலைபேசித் தகவல் தொல்லை தரும்.

(தொடர்ச்சி 22 பக்கம்)


மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



# ஈழத்துத் திருக்கோயில்கள்

வரலாறும் மரபும் 11356

## (வரலாறும் மரபும்)

## கதிஉகாமம் முத்துலிங்கசுவாமி கோயில்

### (சிவன்கோயில்) கதிஉகாமம்

*" அஞ்சுகோடி மந்திரம் அஞ்சுளே அடங்கினால்*
*நெஞ்சு கூற உம்முளே நினைப்பதோர் எழுத்துளே*
*அஞ்சு நாலு மூன்றதாகி உம்முளே அடங்கினால்*
*அஞ்சும் ஓர் எழுத்ததாய் அமைந்ததே சிவாயமே. "*

இவ்வாறான மெஞ்ஞானிகள், ஐம்புலன் நுகர்வுகளை, ஆசாபாசங்களை, அவலங்களை பாடல்களாகவும் வெளிப்படுத்தியுள்ளனர். புரியும் மொழி, புரியாக்கருத்துக்கள், வசைபாடல் மொழிகள் போன்றவற்றுள் ஆழமான உள் அர்த்தம் கொண்ட கருத்துக்களை புதைத்து வைத்தனர். இவர்களுடைய அருள்வாக்கிலே குறியீட்டுச் சொற்கள் பல்வகைக் கருத்துக்களை அடக்கியதாகக் காணப்படும். சித்தர்களின் குறியீட்டுச்சொற்களைக் கண்டறிவது சாதாரண மனித உணர்வுகளுக்கு அப்பாற்பட்டதாகவே அமைந்து காணப்படுகின்றது. இக்காரணத்தினாலோ என்னவோ சித்தர்களின் எண்ணத்திலெழுந்த தத்துவங்களும், குறியீட்டுக் கருத்துக்களும், காலத்திற்குக் காலம் வளர்ந்த இலக்கிய வகைகள் இலக்கிய மதிப்பையும் உயர் நிலையையும் பெற முடியாது போய்விட்டது. இவர்களது கருத்துக்கள் வெறும் சிந்தனை எச்சங்களாகவே மொமியை செம்மைப்படுத்துகின்றன.

சித்தர்கள் பதினெட்டு என எண்ணிக்கையில் வகைப்படுத்தினாலும், அவர்கள் எண்ணிலடங்காதவர்களாக மனிதகுலத்தை நெறிப்படுத்தியுள்ளனர். பதினெட்டுச் சித்தர்களின் பெயர்களும் விந்தைதரும் பெயர்களாகவே விளங்குகின்றன. மறைபொருளாய் காணப்படுகின்றன. கட்டற்ற வாழ்க்கை, எல்லையற்றநோக்கு, எதனையும் எடுத்தெறிந்து பேசும் இயல்பு, இகழ்ச்சிநோக்கு, கடுமையான வார்த்தைகள், மறைபொருளாய் இரட்டை அர்த்தம் கொண்ட இறைநோக்கு என்பன சித்தர்களின் அடிப்படை குணாதிசயமாகவும், வெளிப்பாடாகவும் கொள்ளலாம். எனினும் சித்தர் பாடல்களின் தத்துவங்களும், வெளிப்பாடுகளும் வேரும், விதையுமாக மாணிக்கவாசகர், நம்மாழ்வார். நாயன்மார் கருத்துக்களில் பரந்து காணப்படுகின்றன. சித்தர்கள் முமுமுதற் கடவுளாகிய சிவபெருமானயே எல்லாம் வல்ல சித்தராக்கி மகிழ்ந்தனர்.

எந்த வடிவிலே நாம் இறைவனை நினைத்து வழிபட்டாலும், அந்த வடிவின்மூலம் அவன் இன்னருள் சுரக்கும். சைவசமய தத்துவம் கடவுளின் வடிவத்தை விரித்து விளக்க முற்படும்வேளை, அங்கு சொரூபநிலை, தடத்தநிலை என இருநிலைகள் காணப்படுகின்றன. மண்ணும் புனல் உயிரும் வருகாற்றும்சுடர் மூன்றும் விண்ணும் என எல்லாவற்றையும் கடந்தும், கலந்தும் நிற்பவன் ஈசன். எமது மனம் வாக்கிற்கு அப்பாற்பட்டநிலையில் ஒன்றிலுந் தோய்வின்றி சிவப்பிரகாசமாய் சக்தியை அடக்கிக் கொண்டு நிற்கும்நிலை அத்தநிலை. உருவமற்றதாய் குணங்குறி இல்லாததாய், நிர்மலமாய், ஏகமாய், உயிர்களின் அறிவுக்கறிவாய், ஆனந்தசொரூபியாக இருப்பது சொரூபநிலை.

ஆன்மாக்களின்மீது கருணை கொண்டவன் இறைவன். இக்கருணையின் பாற்பட்டு கீழ்நிலைக்கு இறங்கி வருகின்றான். ஆன்மா தன்னையும் இறைவன் தன்மையையும் அறிந்து உய்வடையக் கொண்ட வடிவமே தடத்தநிலை. இத்தடத்தநிலையிலே இறைவன் அருவம், உருவம், அருவுருவம் என மூவகைத் திருமேனிகளை எடுக்கின்றான். இந்த வகையிலே சிவவழிபாடு மிகவும் தொன்மையானதும், அனைத்திற்கும் ஆதாரமானதுமான வழிபாடாக பண்டுதொட்டுக் காணப்படுகின்றது. மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற முச்சிறப்புக்களும் ஒருங்கே கொண்டதான தேவாரமுதலிகளால் பாடப்பெற்ற சிவத்தலங்கள் ஈழத்திலே காணப்படுகின்றன. இவற்றுள் ஒன்றாகக் கதிர்காமமும் காணப்படுகின்றது.

சித்தர்கள் எல்லாக்காலங்களிலும், எல்லா நாடுகளிலும் வசிக்கலாம். இன்ன காலத்தில் இன்ன நாட்டில்தான் இருக்கவேண்டும் என்ற நியதியில்லை. சாதி, சமயம், மதம், இனம், மொழி என்ற எல்லைகளைக் கடந்து ஆன்மீகம் பரப்பியவர்கள் சித்தர்கள். சமயத்துறையில் உள்ள போலிச் சடங்குகளையும், ஆரவாரப் போக்கையும் கண்டு சித்தர்கள் எள்ளி நகையாடினர். சாதி, சமய வேறுபாடுகளை எதிர்த்துக் குரல் கொடுத்தனர். சித்தர்கள் உள்ளன்புடன் கூடிய வழிபாட்டையே வலியுறுத்தினார்கள். உலகெங்குமுள்ள சித்தர்களின் ஒரே குரலாக விளங்குவது, "ஒன்றே குலம், ஒருவனே தேவன்" என்பதுதான். 2000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே விஞ்ஞானத்துக்கு ஒப்பான மெஞ்ஞான இரகசியங்களைக் கண்டு பிடித்தவர்கள் சித்தர்களே.

இந்தியாவில் மட்டுமன்றி ஈழத்திலும் சித்தர்பரம்பரை வேரூன்றிக் காணப்பட்டுள்ளது. கடையிற் சுவாமிகள், யோகர் சுவாமிகள், மார்க்கண்டு சுவாமிகள், யேர்மன் தேசத்தைச் சேர்ந்த கௌரிபாலா சுவாமிகள். இங்கிலாந்தைச் சேர்தவரும், யோகர் சுவாமிகளின் சீடரும் சோல்பரிப் பிரபுவின் மகனுமான இராம்போதம் சுவாமிகள், அமெரிக்க நாடடைச் சேர்ந்த சுப்ரமணிய சுவாமிகள், அவுஸ்திரேலிய நாட்டைச் சேர்ந்த நரிக்குட்டி சுவாமிகள், செல்லத்துரை சுவாமிகள், சடைவரத சுவாமிகள், சித்தானைக் 'குட்டி, பெரியானைக்குட்டி, நவநாதசித்தர், குழந்தைவேற் சுவாமிகள், அருளம்பல சுவாமிகள், செல்லாச்சி அம்மையார், நயினாதீவுச் சுவரிகள், ஆனந்த சடாடசரகுரு, மகாதேவ சுவாமிகள், கதிர்காமம் முத்துலிங்கசுவாமிகள், சடையம்மா ஆகியோரும் சித்தர் பரம்பரையில் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டியவர்களே. இவர்கள் மூலம் ஈழத்திலே சித்தர் பரம்பரை ஒன்று தோன்றி பல சுவடுகளைப் பதித்துச் சென்றுள்ளது.

ஈழத்திலும், இந்தியாவிலும் இன்றும் அருளும், புகழும் கொண்ட ஆலயங்களை எடுத்துக்கொண்டால், சித்தர்கள் வாழ்ந்து, தமது அருட்செய்கைகளைக் காட்டி சமாதி அடைந்த இடங்களிலேயே இக் கோயில்கள் அமைந்திருப்பதைக் காணலாம். ஈழத்தில், பஞ்ச ஈஸ்வரங்கள் மற்றும் கதிர்காமம், செலவச்சந்நிதி, நல்லூர் போன்ற பல்வேறு ஆலயங்களைக் குறிப்பிடலாம். அவ்வாறே சித்தர்களின் சமாதி மேல் எழுப்பப்பட்ட கோயில்கள் பல, தமிழ் நாட்டிலே இன்றும் அருளொளி வீசிக் கொண்டிருப்பதை அனைவரும் அறிவோம்.

*வளரும்...*

## கண்ணீர் அஞ்சலி #69

### திரு. மரியம்பிள்ளை சூசைப்பிள்ளை



மலர்வு: 06-12-1930
உதிர்வு: 07-08-2024

எங்கள் OSTBA உறுப்பினர் #44
07-08-2024 அன்று இறைவனடி சேர்ந்தார்.
அவரது ஆத்மா அமைதியும் இறைவனின் பாதத்தை அடைய பிரார்த்திப்போம்.

Ontario Senior Tamils Benevolent Association
ostba2019@gmail.com ww.ostb5.ca
416-473-6880

## கண்ணீர் அஞ்சலி #71

### திரு. சபாபதிப்பிள்ளை இராஜரட்ணம்



மலர்வு: 06-05-1929
உதிர்வு: 27-01-2025

எங்கள் OSTBA உறுப்பினர் #136
27-01-2025 அன்று இறைவனடி சேர்ந்தார்.
அவரது ஆத்மா அமைதியும் இறைவனின் பாதத்தை அடைய பிரார்த்திப்போம்.

Ontario Senior Tamils Benevolent Association
ostba2019@gmail.com ww.ostb5.ca
416-473-6880

## கண்ணீர் அஞ்சலி #70

### திருமதி. லௌத்தம்மா அரியநாயகம்



மலர்வு: 02-11-1940
உதிர்வு: 25-01-2025

எங்கள் OSTBA உறுப்பினர் #9
25-01-2025 அன்று இறைவனடி சேர்ந்தார்.
அவரது ஆத்மா அமைதியும் இறைவனின் பாதத்தை அடைய பிரார்த்திப்போம்.

Ontario Senior Tamils Benevolent Association
ostba2019@gmail.com ww.ostb5.ca
416-473-6880

# இவ்வார ராசிபலன்

(20 பக்கத் தொடர்ச்சி)

**விருச்சிகம்:** கூட்டுத்தொழில் லாபம் தரும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். புதிய எண்ணங்கள் உருவாகும். பங்குத்தொழில் பணம் தரும். முற்போக்கு சிந்தனை வரும். சேமிப்பு அதிகமாகும். சீரான வாழ்வமையும். சிந்தனை மேலோங்கும். வினைகள் அகலும். ஆதாயம் பெருகும். வழக்குகளில் வெற்றி உண்டு. வாகன மாற்றம் உண்டு. விளையாட்டுத் துறையில் வெகுமதி கிடைக்கும். பிள்ளைகளால் அலைச்சல் உண்டு. உடல்நலனில் அக்கறை தேவை. மனைவியின் கோபம் அதிகரிக்கும். ஏற்றங்கள் அமையும். தோற்றப் பொலிவு கூடும். மாற்றத்தை விரும்புவீர்கள். மனக்கட்டுப்பாடு அவசியம். காரியம் கைக்கூடும். குடும்ப மேன்மை உண்டாகும். ஆடம்பர பொருள் சேரும். திருஷ்டிகள் விலகும். பிள்ளைகளின் அன்பு அதிகரிக்கும். தெளிவான முடிவுகள் உதயமாகும். செல்வச்செழிப்பு உயரும். விவேகம் கைக்கொடுக்கும். வெற்றி வீடு தேடி வரும். பிரபல்யங்களை சந்திக்கும் வாய்ப்பு ஏற்படும். குதூகலமான எண்ணம் உருவாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சுக்ரபகவான், அதிர்ஷ்ட எண்: 2,9,6,8

அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிகப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,U




**தனுசு:** ஆடம்பர பொருள் சேரும் வாரம். குடும்ப மேன்மை உண்டாகும். உடல் சோர்வு ஏற்படும். திருஷ்டிகள் விலகும். பிள்ளைகளின் அன்பு அதிகரிக்கும். தெளிவான முடிவுகள் உதயமாகும். காரியம் கைகூடும். செல்வச்செழிப்பு உயரும். விவேகம் கைக்கொடுக்கும். வெற்றி வீடு தேடி வரும். பிரபல்யங்களை சந்திக்கும் வாய்ப்பு ஏற்படும். சாதகமான காலமாக அமையம். மின்சாரத்தில் கவனம் தேவை. குதூகலமான எண்ணம் உருவாகும். குடும்ப கௌரவம் உயரும். வரவு திருப்தி தரும். வயிறு உபாதைகள் தோன்றி மறையும். வழக்குகள் சாதகமாகும். வீடு வாங்கும் யோகம் உண்டு. வியாபாரத்தில் கவனம் தேவை. போட்டிகள் உருவாகி மறையும். வில்லங்கம் விலகும். கலைத்துறையில் ஆர்வம் ஏற்படும். காரியம் கைகூடும். ஆனந்தம் குடிக்கொள்ளும். வெளிநாட்டுப் பயணம் உருவாகும். வியாபார அபிவிருத்தி ஏற்படும். பாக்கிகள் வசூலாகும். உத்தியோக உயர்வு கிட்டும். உறவுகளால் மதிப்பு கூடும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். வேற்றுமைகள் விலகும். வெறுப்புக்கள் அகலும். விருப்பங்கள் நிறைவேறும். பொறுப்புக்கள் கூடும். எதிரிகளால் ஏற்றம் உண்டு. வணிகத்தொழில் விரிவடையும். பயணம் தடைப்படும். விவசாயிகளுக்கு ஏற்றமான காலம். பிள்ளைகளால் வெகுமானம் கூடும். பணவரவு திருப்தி தரும். பல்வலி வந்து போகும். பிராணிகளால் தொல்லை ஏற்படும். பெண்களால் பெருமை சேரும். முயற்சிகள் பலிதமாகும். பயணம் பலன் தரும். பழையக் கடன் ஒழியும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கால பைரவர், அதிர்ஷ்ட எண்: 8,9,5,1

அதிர்ஷ்ட நிறம்: கருப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: J,N




**மகரம்:** லாபம் அதிகரிக்கும் வாரம். சுபச்செய்தி வரும். தொழில் வாய்ப்பு ஏற்படும். பிரச்சனைகள் தீரும். பிரபல்ய ஆசை ஏற்படும். பெருமிதத்துடன் காணப்படுவீர்கள். பிள்ளைகளின் தேவை பூர்த்தியாகும். அடுத்த வீட்டாரின் ஆதரவு கிட்டும். புதிய நட்பு உருவாகும். மனைவியால் மரியாதை உயரும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். கன்னிப் பெண்களிடம் கவனம் தேவை. கௌரவமான காலம். பறவைகளுக்கு உணவு தானம் அளித்தால் பணவரவு பெருகும். முயற்சிகள் பலன் கொடுக்கும். கால்நடைகளால் லாபம் உண்டு. கண்நோய் வந்து போகும். கடன் வாங்க நேரிடும். கலைத்தொழில் லாபம் தரும். திடீர் திருப்பம் ஏற்படும். பதவி உயர்வு கிட்டும். ஆடம்பர எண்ணம் அலைமோதும். ஆடை, அணிகலன் சேர்க்கை உண்டு. முயற்சிகள் வெற்றி தரும். சேமிக்கும் எண்ணம் ஏற்படும். சாதனைகள் ஓங்கும். சிறப்புக்கள் வந்து சேரும். தொழில் லாபம் தரும். குடும்பத்தில் மேன்மை உண்டு. பூர்வீகச்சொத்து கிடைக்கும். திருப்தி அதிகமாகும். உடல்நலம் கவனம் தேவை. எண்ணம் வண்ணமயமாகும். விரக்திகள் விலகும். பணியாட்கள் ஆதரவு அதிகமாகும். பாதகமான சூழ்நிலைகள் விலகும். கனிவான காலம். பயணம் அனுகூலம் தரும். மருத்துவச் செலவு அதிகரிக்கும். தொழில் போட்டி அதிகமாகும். மனைவியிடம் அன்யோன்யம் உண்டு. ஆக்கப்பூர்வமான எண்ணம் உதயமாகும். பெற்றோரின் ஆதரவு அதிகரிக்கும். மங்களச் செய்தியால் மனம் மகிழும். அரசு வகையில் அனுகூலம் கிட்டும். பழைய பகை மாறும்.

வழிபட வேண்டிய தெய்வம்: குருபகவான், அதிர்ஷ்ட எண்: 9,1,5,3


அதிர்ஷ்ட நிறம்: ஆரஞ்சு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,I




**கும்பம்:** தன வரவுகள் அதிகரிக்கும் வாரம். சகோதர வகையில் சகாயம் கிட்டும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் தோன்றி மறையும். எதிர்பார்த்த தொகை தாமதமாகும். புதிய முயற்சிகளை தள்ளி வைக்கவும். பூர்வீகச் சொத்துக்கள் கிடைக்கும். பெரிய வாய்ப்புக்கள் தேடி வரும். கல்வியில் கவனம் தேவை. ஏற்றமதி தொழில் லாபம் தரும். வாகனச் செலவு ஏற்படும். எதிர்ப்புக்கள் ஓடி ஒழியும். செயலில் துணிவு கூடும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். குடும்ப உறவு பலப்படும். உள்ளத்தில் மகிழ்ச்சிப் பொங்கும். தந்திரமாக செயல்படுவீர்கள். நண்பர்களால் நன்மை உண்டு. சுயத்தொழில் கவனம் தேவை. பேச்சில் கம்பீரம் இருக்கும். பெற்றோரின் ஆசி கிடைக்கும். விருப்பமான தொழில் அமையும். விபரீத போக்கு மறையும். குடும்ப பாசம் அதிகரிக்கும். செல்வாக்கு உயரும். இசை ஆர்வம் கூடும். பிள்ளைகள் நலனில் அக்கறை தேவை. உணவுத்தொழில் உயர்வு பெறும். திட்டங்கள் எளிதாகும். புதிய தொழில் அமையும். பாராட்டுக்கள் உயரும். பயணம் அனுகூலம் தரும். வெளிநாட்டு நபரால் வெகுமதி கூடும். சச்சரவுகள் அகலும். கடன் தொல்லை நீங்கும். தோதான எண்ணம் உருவாகும். போதாத காலம் விலகும். மன சந்தோஷம் கூடும். ஊக்கம் அதிகரிக்கும். புத்திரர்களால் மேன்மை உண்டு. குடும்ப வளம் கூடும். அடுத்தவர் தலையீடு தவிர்க்கவும். பொன், பொருள் சேரும். பொருளாதாரம் உயரும். பொன்னான காலமாக அமையும். பிள்ளைகளால் தொல்லை உண்டு. பதவி வாய்ப்பு வரும். பாதகம் விலகும். கட்டிடத்தொழில் லாபம் தரும். கல்வி ஆர்வம் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கணபதி, அதிர்ஷ்ட எண்: 1,3,5,9

அதிர்ஷ்ட நிறம்: சிகப்பு (செந்நிறம்), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: W,A




**மீனம்:** காரிய வெற்றி தரும் வாரம். உத்தியோக உயர்வு உண்டு. மன அமைதி கூடும். பணவரவு உண்டு. பயணத்தடை ஏற்படும். கூட்டுத்தொழில் லாபம் தரும். விவசாயம் பலன் அளிக்கும். தொழில் மேன்மை உண்டு. வழக்குகள் சாதகமாகும். காதல் கசக்கும். இடமாற்றம் உண்டு. வருத்தங்கள் மறையும். திருத்தமான முடிவு ஏற்படும். மதிநுட்பம் தேவை. திடீர் பயணம் ஏற்படும். எதிர்ப்புக்கள் விலகும். தேவைகள் நிறைவேறும். அற்புத வாய்ப்பு கிட்டும். ஆலோசனை பலன் தரும். அணிகலன் சேரும். ஆரோக்கியம் கூடும். மாற்று யோசனை பலன் தரும். வேற்று மனிதரால் லாபம் உண்டு. வேலை வாய்ப்பு கூடும். விருப்பங்கள் நிறைவேறும். வியாபாரம் செழிக்கும். கணவன் அன்பு அதிகரிக்கும். அலைச்சல் அதிகமாகும். பணப்பிரச்சனை தீரும். வியாபாரம் சிறக்கும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். இடமாற்றம் ஏற்படும். புதிய எண்ணம் நிறைவேறும். தாய் நலனில் அக்கறை தேவை. வழக்குகள் சாதகமாகும். சிறப்புக்கள் சேரும். வெறுப்புக்கள் அகலும். பாக்கிகள் வசூலாகும். நல்லோர்களின் நட்பு கிட்டும். விடாமுயற்சி அவசியம். புதிய முதலீடு தவிர்க்கவும். சுபச்செலவு அதிகரிக்கும். திடீர் மாற்றம் ஏற்படும். பதவி உயர்வு கிட்டும். கமி'ன் தொழில் லாபம் தரும். பயணம் அனுகூலம் தரும். கல்வியில் ஈடுபாடு குறையும். போட்டிகள் கடுமையாகும். வியாபாரம் சுமாராக இருக்கும். நிர்வாக அலைச்சல் கூடும். சிரமங்கள் குறையும். பெருமைகள் உயரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பஞ்சமுக ஆஞ்சநேயர், அதிர்ஷ்ட எண்: 4,3,2,1

அதிர்ஷ்ட நிறம்: இளம்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,H



# மல்லாகத்தில் பசுமை இயக்கத்தின் பசுமை அறிவொளி நிகழ்ச்சி

## பிரதம விருந்தினராகக் கனடாவிலிருந்து சென்று கலந்து கொண்ட ஸ்காபுறோ ஆதிபராசக்தி குருமன்றத்தின் ஸ்தாபகர் சக்தி ஞானம்மா திருநாவுக்கரசு அம்மையார்

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் பசுமை அறிவொளி நிகழ்ச்சி ஞாயிற்றுக்கிழமை (02.03.2025) மல்லாகத்தில் நடைபெற்றுள்ளது. மாணவர்களுக்குச் சூழல் அறிவைப் புகட்டுவதன் மூலம் சூழல் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி, அவர்களைச் சூழல் பாதுகாப்பில் ஈடுபடுத்தும் நோக்குடனும், அவர்களின் பன்முக ஆளுமையை விருத்தி செய்யும் நோக்குடனும் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் பசுமை அறிவொளி என்னும் நிகழ்ச்சித் திட்டத்தினை முன்னெடுத்து வருகின்றது. இதன் தொடர்ச்சியாகவே மல்லாகம், கல்லாரை கிராமத்தில் இந்நிகழ்ச்சி நடைபெற்றுள்ளது.


வளர்மதி சனசமூக நிலையத்தின் தலைவர். இ. மிதுஷன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராகக் கனடாவில் இருந்து வருகை தந்திருந்த ஸ்காபுறோ ஆதிபராசக்தி குருமன்றத்தின் ஸ்தாபகர் ஞானம்மா திருநாவுக்கரசு அம்மையார் கலந்துகொண்டார். சிறப்பு விருந்தினர்களாகத் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன், ஆசிரியர்கள் சி. நாகதீபன், சி. சிவசோதிநாதன் ஆகியோரும் பங்கேற்றிருந்தார்கள். நூற்றுக்கணக்கான மாணவர்களும், பெற்றோர்களும் பங்கேற்றிருந்த இந்நிகழ்ச்சியில் மாணவர்கள் அனைவருக்கும் யாழ்ப்பாணத்தில் விசேடமாகத் தயாரிக்கப்பட்ட பசுமை அப்பியாசக் கொப்பிகள் வழங்கப்பட்டன. இதற்கான நிதி அனுசரணையை ஞானம்மா திருநாவுக்கரசு அம்மையார் “கனடா ரொறன்ரோவின் மனித நேயக்குரல்” அமைப்பினூடாக வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மேற்படி நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றிய ஸ்காபுறோ ஆதிபராசக்தி குருமன்றத்தின் ஸ்தாபகர் சக்தி ஞானம்மா திருநாவுக்கரசு அம்மையார் அவர்கள் எமது தாய்மண்ணாம் தாயகத்தில் பல்வேறு தேவைகளைக் கொண்ட எமது உறவுகளுக்கு உதவிட கனடாவில் பல அமைப்புக்கள் முன்னின்று உழைத்து வருகின்றன என்றும் அவற்றில் ஒன்றுதான் ரொறன்ரொ மனித நேய அமைப்பு என்றும் அதன் மூலம் தாயகத்தில் கல்வி உபகரணங்கள் தேவைப்படும் மாணவ மாணவிகளுக்கு கடந்த பல வருடங்களாக உதவி வருகின்றது என்றும். தாயகத்தில் இவ்வாறான உதவிகளை பெற்று இணைப்புப் பாலமாக விளங்கும் தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்திற்கும் அதன் தலைவர் பொ. ஐங்கரநேசன் அவர்களுக்கும் அவரோடு இணைந்து பணியாற்றும் அவரது உதவியாளர்களுக்கும் கனடா வாழ் தமிழ் மக்கள் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். எம்மைப் போலவே கனடாவில் வாழும் பல அன்பர்கள் ரொறன்ரொ மனித நேய அமைப்பு ஊடாக தொடர்ச்சியாக உதவிகளை வழங்கி வருகின்றார்கள் என்றார்.













MORTGAGE
FINANCIAL SOLUTIONS
RESIDENTIAL
VACANT LAND
COMMERCIAL
CONSTRUCTION
INDUSTRIAL
OUR SERVICE
RESIDENTIAL, COMMERCIAL
• Purchase
- Builder Purchase
- MLS Purchase
- Private Purchase
• Equity line of Credit
• Refinance
• Renewal
CONTACT US
NESAN
Subramaniam
416-908-5656
Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721
www.nesan.ca
WE DEAL WITH ALL BANKS
CityCan Financial Corporation
Mortgage Agent level 1 Licence # M15001465
CityCan Financial Corporation, Brokerage #10332
Scotiabank
FIRST NATIONAL FINANCIAL LP
TD Canada Trust
Manulife
NATIONAL BANK
Desjardins
RFA
MCAP
HOME TRUST
EQUITABLE BANK
radius financial
RMG mortgages
55 EGLINTON AVE E SUITE 604, TORONTO, ON M4P 1G8

மொன்றியல் நகரில்
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பலமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

மதுரையில் இருந்து மீண்டும் வருகை
ஜாதகம் பார்க்கப்படும்
பிறந்த வருடம், மாதம், திகதி சொன்னால் போதும் நாள், நட்சத்திரம், ராசி பார்த்து நடந்தது நடக்கப்போவது பற்றிய பலன் சொல்லப்படும். திருமணப் பொருத்தம் மற்றும் குழந்தைகளுக்கு குறிப்பு எழுதிக் கொடுக்கப்படும்.
கோ. காசி (மதுரை) Phone:- 437-925 5643 Whatsapp:- 437- 329 4164




26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்

இவ்விடத்தில் விளம்பரம்
செய்ய எங்களுடன்
தொட்பு கொள்ளவும்.
416 752 1524

உதயம் 1509 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday March 7, 2025

# தினக்குரல் நிறுவனர் . எஸ்.பி. சாமி மற்றும் தினக்குரல் மற்றும் வீரகேசரி ஆகிய ஆசிரிய பீடங்களில் பணியாற்றிய பாரதி இராசநாயகம் ஆகியோருக்கு இலங்கைப் பாராளுமன்றத்தில் கஜேந்திரகுமார் எம்.பி அஞ்சலி



இன்று இந்த அவையின் மறைந்த முன்னாள் உறுப்பினர் மாமனிதர் சிவநேசனின் 17வது ஆண்டு நினைவு நாளாகும். மாமனிதர் சிவனேசன் அவர்கள் கிளைமோர் தாக்குதல் மூலம் இராணுவத்தினரால் கொல்லப்பட்டார். அவருக்கு எனது அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஊடக அமைச்சு குறித்தும் நாங்கள் விவாதித்து வருகிறோம். தமிழ் ஊடக உலகம் இரண்டு தனித்துவமானவர்களை இழந்துள்ளது. தினக்குரல் நிறுவனர் திரு. எஸ்.பி. சாமி மற்றும் தினக்குரல் ஞாயிறு பதிப்பின் ஆசிரியராகவும் பின்னர் வீரகேசரி பத்திரிகையின் ஆசிரியராகவும் பணியாற்றிய திரு.பாரதி இராசநாயகம் ஆகியோருக்கும் எனது அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு 06.03.2025 அன்று வியாழக்கிழமை இலங்கை நாடாளுமன்றில் நடைபெற்ற வரவு செலவுத் திட்ட விவாதத்தில் நடைபெற்ற சுகாதார அமைச்சு மற்றும் ஊடகங்கள் தொடர்பான விடயதானத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் உரையாற்றிய போது தனத உரையின் ஆரம்பத்தில் இவ்வாறு தெரிவித்தார்.
(தொடர்ச்சி 7ம் பக்கம்)

# தமது மக்கள் நலனுக்காக தமிழ்த்தேசிய கட்சிகள் ஒன்றுபடாவிடின் தமிழ்த்தேசிய அரசியல் களம் சீரழியும்

## – அனைத்துலக தமிழர் பேரவையின் தலைவர் நிமல் விநாயகமூர்த்தி எச்சரிக்கை



(நேர்காணல் - நா.தனுஜா)

இலங்கையின் தமிழ்த்தேசிய அரசியல் தற்போது சீரழிந்த நிலையில் இருக்கிறது. தமிழ்த்தேசிய அரசியல் பரப்பில் நிலவும் பிளவுகளே அதற்குப் பிரதான காரணமாகும். தமிழ் மக்கள் இன்னமும் தமிழ்த்தேசிய அரசியலில் ஈடுபாட்டோடு தான் இருக்கிறார்கள். எனவே எமது சமூகத்தின் நலனைக் கருத்திற்கொண்டு அனைத்துத் தமிழ்த்தேசிய அரசியல் கட்சிகளும் ஏதோவொரு வகையில் ஒன்றுபட்டுத்தான் ஆகவேண்டும். மாறாக அக்கட்சிகள் பிளவுபட்டு நின்று தேர்தல்களில் போட்டியிடும் பட்சத்தில், தமிழ்த்தேசிய அரசியல் மிகமோசமான நிலைக்குத் தள்ளப்படும் என புலம்பெயர் தமிழ்த்தேசிய செயற்பாட்டாளரும், கனடாவைத் தளமாகக்கொண்டு புதிதாக ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் அனைத்துல தமிழர் பேரவையின் இடைக்கால நிர்வாக சபையின் தலைவருமான நிமல் விநாயகமூர்த்தி தெரிவித்தார்.

அண்மையில் அவர் இலங்கைக்கு மேற்கொண்ட விஜயத்தின் போது வீரகேசரி பத்திரிகையின் ஆசிரியபீடத்தின் சார்பில் செய்தியாளர் நா. தனுஜா அவரை நேர்காணல் செய்தார். பத்திரிகையின் பிரதம ஆசிரியர் கஜன் அவர்களது ஏற்பாட்டில் இந்த நேர்காணல் இடம்பெற்றது. (தொடர்ச்சி 17ம் பக்கம்)



# கனடான செந்தில் குமரன் அவர்களின் "நிவாரணம்" அமைப்பினால் சேகரிக்கப்பெற்ற 247,606.42 டாலர்கள் எமது தாயகத்தில் பல உயிர்களைக் காப்பாற்ற உதவி வருகின்றன



அண்மையில் கனடான செந்தில் குமரன் அவர்களின் “நிவாரணம்“ அமைப்பினால் சேகரிக்கப்பெற்ற 247,606.42 டாலர்கள் எமது தாயகத்தில் பல உயிர்களைக் காப்பாற்ற உதவி வருகின்றன.

“எம்.ஜி.ஆர்-108“ என்னும் இசைநிகழ்ச்சி மூலமும் நேரடியாக கனடாவாழ் மக்களிடம் நேரடியாகச் சென்று செந்தில் குமரன் குழுவினர் சேகரித்த இந்த தொகையிலிருந்து இலங்கையில் தற்போது இருதய நோயினால் பாதிக்கப்பட்ட நோயாளர்களுக்கு சிகிச்கை அளித்து அவர்களின் உயிர்களைக் காப்பாற்றும் பணி தற்போத ஆரம்பமாகிவிட்டது.

இந்த நிதிசேகரிப்பு தொடர்பான அறிவிப்புகளை வழங்க கடந்த ஞாயிற்றுக்கிழமை ஸ்காபுறோ கென்னடி கொன்வென்சன் சென்றர் மண்டபத்தில் ஒரு கூட்டத்தை செந்தில் குமரன் அவர்கள் ஏற்பாடு செய்திருந்தார்.. அங்கு உரையாற்றிய செந்தில்குமரன் “கடந்த ஜனவரி 26 ஆம் திகதி நடந்து முடிந்த எம்ஜிஆர் 108 இன் நிதி சேகரிப்பின் ஊடாக சேர்க்கப்பட்ட நிதி அறிவிக்கப்பட்டது. மொத்தமாக 247,606.42 டொலர்கள் தாயக மக்களின் இதய சத்திரசிகிச்சை மற்றும் பிற உயிர் காக்கும் சிகிச்சைகளுக்கும், நோயாளிகளுக்கான வாழ்வாதாரங்களுக்கும் வழங்கப்பட உள்ளது என்பதனை மகிழ்ச்சியோடு அறியத்தருகிறோம். இந்த நிகழ்வு நடைபெற உதவிய அத்தனை உள்ளங்களுக்கும் மற்றும் நிதியினை வாரி வழங்கிய கொடையாளிகளுக்கும் அந்த வறிய மக்களின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம். அத்துடன் எமது முயற்சிகளுக்கு எப்போதும் பக்கபலமாக இருந்து வரும் ஊடகங்களுக்கும் பத்திரிகை ஆசிரியர்களுக்கும் நன்றி“ இந்த முயற்சியை முன்னெடுக்கும் போதெல்லாம் எனக்கு உதவும் அத்தனை மனித கடவுள்களுக்கும் நன்றி! எப்போதும் பக்கபலமாக இருந்த என்னை பாதுகாக்கும் இறைவனுக்கு நன்றி! இவ்வாறு அவர் தெரிவித்தார். இங்கே காணப்படும் படங்கள் அங்கு எடுக்கப்பெற்றவையாகும்.




# திசை காட்டியினுள் திசை மாறும் எம்.பி.க்கள்

““பாராளுமன்றத்தில் ஜே வி. பி. தேசிய மக்கள் சக்தி கூட்டணிக்கு 159எம்.பி.க்கள் உள்ளனர். இவர்களில் 107 பேர் தேசிய மக்கள் சக்தியையும் 52 பேர் ஜே.வி.பியையும் சேர்ந்தவர்கள் இதில் தேசிய மக்கள் சக்தியை சேர்ந்த 107எம்.பி.க்களில் பலர் கலாநிதி, பேராசிரியர் பட்டங்களை கொண்டவர்கள்.அதே போல் பெரிய நிறுவனங்கள் மற்றும் உயர் பதவிகளை வகித்து அதிக சலுகைகள், அதிக சம்பளத்துடன் பணியாற்றிய நிலையில் தற்போது தங்களுடைய எம்.பி. பதவிக்காக அவற்றை கைவிட்டுள்ளதுடன் எம்.பி.க்களுக்கு கிடைக்கும் சம்பளம், விசேட கொடுப்பனவுகள்,சலுகைகளையும் கட்சிக்கு தாரை வார்க்க வேண்டியேற்பட்டுள்ளதால் விரக்தியடைந்து சிலர் எம்.பி. பதவிகளிலிருந்து விலகுவது தொடர்பில் சிந்திக்கத் தொடங்கியுள்ளனர்““

---------------------------------------------------கே.பாலா

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசு ஆட்சிபீடம் ஏறிய சில மாதங்களுக்குள்ளேயே மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை, ஏற்படுத்திய எதிர்பார்ப்புக்களை நிறைவேற்ற எந்த வித நடவடிக்கைகளையும் எடுக்காததால் கட்சிக்கு வெளியே கடும் விமர்சனங்களையும் நெருக்கடிகளையும் எதிர்கொண்டுவரும் நிலையில் தேர்தல் காலத்தில் தமது கட்சி தொடர்பில் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றியதால் கட்சிக்குள்ளும் முரண்பாடுகளையும் எதிர்ப்புக்களையும் எதிர் கொண்டுள்ளதுடன் “புது மாப்பிள்ளைகள்““போல் அமைச்சர்கள் சிலர் செய்யும் அலப்பறைகள்,அனுபவமற்ற பேச்சுக்கள், செயற்பாடுகளினாலும் அநுரகுமார அரசு கடும் கிண்டல் கேலிகளுக்கும் உள்ளாகி வருகின்றது..(தொடர்ச்சி 16ம் பக்கம்)